# இந்து ஒளி
# HINDU OLI



30 AUG 20
நூலகம்

தீபம் - 15 சுடர் - 03





## யாழ். சிவதொண்டர் மாநாடு
## சிறப்பிதழ்

*Quarterly of All Ceylon Hindu Congress*

அகில இலங்கை இந்து மாமன்றம் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழாக்காணும் மாமன்ற அங்கத்துவச் சங்கமான இந்து வித்தியாவிருத்திச் சங்கம்




சங்கத் தலைமையகம்
சரஸ்வதி மண்டபம்









திரு. திருமதி. கயிலாசபிள்ளை தம்பதியினர், திரு. திருமதி. மகாராஜா தம்பதியினர், திரு. திருமதி. தவயோகராஜா தம்பதியினர், திரு. கருப்பண்ணாபிள்ளை, திரு. மாணிக்கவாசகர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து மங்கல விளக்கேற்றியபோது





புதுமணத் தம்பதிகள் சிவஸ்ரீ ம. கைலாசநாத சர்மா தம்பதியினருக்கு இந்து மக்கள் சார்பில் மாமன்றத் தலைவர் திரு. கயிலாசபிள்ளை தம்பதியினர் வாழ்த்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சபுராணங்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என் செய்கேனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்தவெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே.

## திருவிசைப்பா

இடர்கெடுத்தென்னை யாண்டுகொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறிந்தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளிவிளங்குந்
தூயநற் சோதியுட்சோ தீ
அகல் விடைப்பாகாவம் பலகூத்தா
அயனோடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப்பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறதுமே

## திருப்புராணம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

திருச்சிற்றம்பலம்


உ

சிவமயம்

# இந்து ஒளி

தீபம் – 15 சுடர் – 03

கர வருடம் வைகாசித்திங்கள் 14ஆம் நாள்

28.05.2011


# மாமன்றப்பணிகளுக்கு யாழ். மண்ணிலும் ஆதரவு தாரீர்

நீண்டகால போர் வடுக்கள், சுனாமியின் தாக்கம், இயற்கை அனர்த்தம், வெள்ளப்பெருக்கு என்பன எமது மக்களில் பலரை ஏதிலிகளாக்கி விட்டது. அவர்களுக்கு ஆதரவும், அரவணைப்பும் தேவை. மாமன்றம் இம்மக்களுக்கு தன்னாலான உதவிகளை வழங்கிவருகின்றது. அதேபோன்று ஏனைய நிறுவனங்களும் உதவிக்கரம் நீட்டி நமது மக்கள் நிம்மதிப் பெருமூச்செறிய உதவவேண்டும் என்பதே எமது அவா. இந்த வேளையில் நீடித்து நிலைக்கக் கூடிய சமாதான, சகவாழ்வு அரசியல் தீர்வுடன் கூடியதாக மலரவேண்டும் என ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களில் வணங்கி வேண்டுகின்றோம்.

அதேவேளை மாமன்றம் தன் ஆன்மீகப் பணிப் பொறுப்புகளையும் மறக்கவில்லை. நம்பிக்கைதரும் புதிய எதிர்பார்ப்புகளை எதிர்கொள்ளும் காலம் இது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வாழ்க்கைவேறு, சமயம் வேறல்ல. வாழ்க்கையுடன் சமயம் இரண்டறக் கலந்திருக்கிறது. வாழ்வில் இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும், அதன் காரணமாக சிந்தனை, சொல், செயல் என்பன உயர்ந்தோங்கவும் வழிபாட்டு முறைகள் நமக்கு வழிகாட்டி நிற்கின்றன.

மாமன்றத்தின் யாழ் கட்டிடத்தில் இந்து ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டு சைவ வித்தகர் கற்கை நெறியும் ஆரம்பமாக இறையருள் கிட்டியுள்ளது. யாழ். புண்ணிய பூமியான நல்லூரில் சிவதொண்டர்கள் நாட்டின் பலபகுதிகளியிருந்தும் வந்து குழுமி சிவதொண்டர் மாநாட்டில் பங்குபற்ற இருக்கிறார்கள்.

தெய்வத் திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பட்டறையில் வளர்ந்த செஞ்சொற்செல்வர் யாழ் மண்ணில் செய்யும் பல பணிகளுடன் எமது ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநர் பொறுப்பையும் எமது முகாமைப் பேரவையின் அன்பான வேண்டுகோளுக்கமைய ஏற்றுக் கொள்கிறார். யாழ். மண்ணிலும் மேலும் மாமன்றப் பணிகள் சிறக்க சகலரும் சிவதொண்டர் தளபதி தலைமையில் திரண்டு ஆதரவு தாரீர் என அன்பாக அழைக்கின்றோம். அந்த ஆதரவுதான் இந்த ஆன்மீகத் தொண்டருக்கு அவரின் ஐம்பதாவது அகவையில் பெருமகிழ்ச்சி தரக்கூடிய அன்புப்பரிசு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 01
- வாழ்த்துரைகள் – தவத்திரு. ரிஷி தொண்டுநாதன் 03
  மாமன்றத் தலைவர் 04
- இலங்கை சிவபூமியா ? 05
- சிவபூமியில் சிவதொண்டர் தளபதி 06
- தெய்வத்திருமகளாக எங்கள் தெய்வம் 08
- நாவலரும் புராண படனமும் 10
- சிவயோக சுவாமிகள் காட்டிய வழி 12
- சைவமும் வைணவமும் 14
- அப்பர் பெருமானின் சமய வாழ்வு கூறும் சிறப்புகள் 15
- 'சைவநெறி' பாடத்திட்டமும் மாணவர்களும் 19
- அபிராமி அந்தாதி 21
- இறைவனைத் தேடி 23
- ஈழத்தில் சைவ ஆலயங்களும், அறப்போதனைகளும் 26
- சிவத் தொண்டின் மகிமையும்
  அதன் இன்றைய தேவையும் 29
- Dance of Siva 36
- மாமன்றச் செய்திகள் 37
- சைவமும் வைணவமும் 43


**அடுத்த சுடர்**

**கர வருடம்**

**ஆடி-புரட்டாதி**

## வாழ்த்து

அறனொடு அன்பும் வாழ்க அகிலமும் செழித்து வாழ்க
மறையவர் குழாத்தினோடு அடியவர் குழாமும் வாழ்க
கறைமிடற் றண்ணலார் தன் கருணையு மருளுமோங்கி
இறையருள் தன்னா லெல்லா உயிர்களும் நீடுவாழ்க.


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
கர வருடம் சித்திரை – ஆனி இதழ்
வைகாசித் திங்கள் 14ஆம் நாள்
28.05.2011



ஆசிரியர் குழு :
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. த. மனோகரன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 50.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா | 200.00 |
| | (தபாற் செலவு தனி) | |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் | 10.00 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி எண் : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்
தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்
ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

SITHTHIRAI - ANI Issue of
**ALL CEYLON HINDU CONGRESS**
**28th MAY 2011**



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Dr. Kumarasamy Somasundaram
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. Kandiah Neelakandan
Mr. D. Manoharan



| | | |
|---|---|---|
| Price : | Rs. 50.00 | Per copy |
| Annual Subscription (Inland) | Rs. 200.00 | |
| | (Postage Exclusive) | |
| Annual Subscription (Foreign) (Including Postage) | U. S. $ 10.00 | |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720


Next Issue :
ADI - PURADDATHI


Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## *Spiritual Message of Blessings from Rev. Rishi Thondunathan*

Greetings,

Sri Lankan Hindu spiritual leader and humanitarian Sri Aru Thirumurugan turns 50 this Saturday, May 28th. As a tribute and respect in recognition of the efforts of Sri Aru Thirumurugan, the All Ceylon Hindu Congress is publishing a book on his life and service in a special event that they are organising. I was asked to give a forward to this book which I have included below for your reading so you can get to know a little about Sri Aru Thirumurugan.

*Aum Shanthi,*

***Rev. Rishi Thondunathan***



International Hindu Award for 2007 from Hawaai Aatheenam being presented by Rev. Rishi Thoundunathan Swamigal to Theivaththirumagal, Senchotchelvar also with him.

Prostrations to the Holy Feet of Maha Ganapathy!

Congratulations to our beloved Sri Aru Thirumurugan, on this special occasion of his 50th Birthday.

I am humbled to be given this opportunity to share my thoughts and feelings about Sri Aru Thirumurugan during this very special time both for this wonderful man and our community in Jaffna whom he serves so lovingly. From the day I met Sri Aru Thirumurugan I realized what a humble soul he is. His selflessness shows in all his effort to provide much needed service to the our community. At a crucial juncture in his life when most would have taken the opportunity to take flight of the heavy and sad situation in Jaffna during the late 80's and 90's, Sri Aru Thirumurugan decided to return and dedicate his life to serving an entire community. In my mind his stalwart service puts him in the league of Mahatma Gandhi, Thangamma Appakutti, Mother Teresa and such selfless people. We are very fortunate and indeed blessed to have Sri Aru Thirumurugan in our midst.

I first met Sri Aru Thirumurugan in August 2002 at the Nallur Temple during the Flag Raising Ceremonies. As I reflect on this meeting and our subsequent collaboration in service to our people, I realize that our meeting was not an accident or coincidence. This initial meeting to me was a play organised by Lord Muruga Himself. I was immediately moved by Sri Aru Thirumurugan's deeply dedicated compassion for humanity even at this initial meeting. His spirit of service and vision for the future was so in tune with my own thoughts that I realized I had met my spiritual brother. We have been working together ever since in developing community service projects and infrastructure for the betterment of our people. Nine years on we can begin to see our visions planted that many years ago at the grounds of Nallur taking shape.

I also want to take this opportunity, and I think it is appropriate on this joyous occasion, to provide a very brief biography of Sri Aru Thirumurugan. As a young man he had to go through unimaginable physical suffering during the war. However, even then and because of the magnanimity he possess he never blamed anyone for what happened to him. During his brief stay in India to treat the wounds he had suffered he met His Holiness, The Late Sri Thiruchy Swamigal of Bangalore. This great saint whom I too have had a close relationship with and gave Sri Aru Thirumurugan a very potent spiritual initiation. Sri Thiruchy Swamigal blessed him by putting an orange shawl on him and told him that the Goddess of Knowledge, Saraswathi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

resided on his tongue and commanded him to go and spread the knowledge that he possessed from his extensive study of Tamil literature and Hindu tradition by giving lectures.

Thus, began Sri Aru Thirumurugan's his life of service. Bringing to life Sri Thiruchy Swamigal's instructions he has proven to be an outstanding speaker. He has since given hundreds of lectures in temples in Sri Lanka and around the world. From the gifts that he received from his visits and discourses in the temples of London, Sri Aru Tirumurugan was able to build an eye operation theatre for the Jaffna hospital. In the last decade his service activities in Jaffna has flourished with the building and running of the Sivapoomi School for the Disabled and the Elderly Home among his many other charitable contributions.

Whenever I visit Jaffna, I have the privilege of spending time with Sri Aru Thirumurugan at our Sivapoomi elderly home. His extensive knowledge on Hindu and Tamil scriptures and culture makes him a veritable walking university. Sri Aru Thirumurugan is indeed a great visionary and a true Hindu missionary. We are very blessed to have him living among us especially at this great time of need. May Lord Ganesha remove all the obstacles in his path of service, May Lord Murugan wield his mighty Vel and give him the strength to continue his much needed work on Earth. May Lord Siva Peruman grant him a long healthy life that many more will be touched by Sri Aru Thirumurugan's good works.

Aum Shanthi,
**Rishi Thondunathan**

# வாழ்த்துச் செய்தி



அகில இலங்கை இந்துமாமன்றத்தின் சிறப்பு உறுப்பினரான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் மாமன்றத்தின் உபதலைவராகவிருந்து மாமன்றத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் சேவைகள் பெரிதும் பாராட்டத்தக்கவை. யாழ்ப்பாணத்தில் மாமன்ற பணிமனை அமைவதற்கு காரணமாக இருந்ததுடன் அதன் ஊடாக யாழ் மண்ணில்மாமன்றத்தின் சமய, சமூகநலப்பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்கு இவர் துணையாக இருப்பதையும் சிறப்பாக குறிப்பிடவேண்டும்.

யாழ் சிவபூமி அறக்கட்டளையின் தலைவராக இருக்கும் ஆறு. திருமுருகன் அவர்கள் கோண்டாவில் சிறுவர் மனவிருத்திப் பாடசாலை, சுழிபுரம் முதியோர் இல்லம் என்பன தோற்றம் பெறுவதற்கு காரணமாக இருந்ததுடன், இப்போது அவற்றின் தலைவராகவிருந்து ஆற்றிவரும் சேவைகளும் போற்றுவதற்குரியவை.

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைமைப் பதவியிலிருந்து சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் வழிநின்று அறப்பணிகளின் ஊடாக பலவித சமூகநலப் பணிகளையும் திறம்பட செய்துவருவதுடன் மற்றும் பல சமய நிறுவனங்களிலும் இணைந்திருந்து நற்பணியாற்றி வருவதையும் சிறப்பாக சொல்லலாம்.

சமய, சமூகநலப்பணிகளுடன் மட்டுமன்றி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபராகவிருந்து ஆற்றிவரும் கல்விப்பணிகளின் ஊடாக சிறந்த கல்விச் சமூதாயத்தை உருவாக்கும் நற்காரியங்களையும் இவர் ஆற்றிவருகிறார்.

இத்தகைய அரும்பணிகளின் ஊடாக அனைவரினதும் பேரன்பையும் பெற்றுத் திகழும் ஆறு. திருமுருகன் அவர்களின் அகவை ஐம்பது நிறைவுபெறுவதன் மூலம் பொன்விழா காணுவதையிட்டு மாமன்றத்தின் சார்பாக இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவரது நற்பணிகள் மேலும் சிறப்பாக தொடர வேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானைப் பிராத்திக்கிறோம்.

**வி. கயிலாசபிள்ளை,** தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை  சிவபூமியா?

கலாநிதி க. ந. வேலன், Ph. D.
(வட இந்து மகளிர் கல்லூரி முன்னாள் தமிழ் விரிவுரையாளர்)

இன்று இலங்கையில் பல சமயங்கள் நிலவி வருகின்றன. ஆனால் இவை எல்லாம் இலங்கையின் சமயங்கள் அல்ல. இலங்கையில் தோன்றி ஆதிதொட்டு வழங்கிவரும் சமயமே இலங்கையின் சமயம் என உரிமை கொண்டாடும் தகுதியுடையது.

இந்த விதிக்கு அமைந்த சமயம் சைவசமயம் ஆகும். சைவம் என்ற பெயரால் பிற்காலத்தில் அழைக்கப்பட்ட சைவத்தின் மூலக்கூறுகள் மொகஞ்சதாரோ, கரப்பா காலப் பழமையுடையது.

மாலைதீவின் ஆதிசமயம் சைவசமயம் என்பதும், அது மொகஞ்சதாரோ கரப்பா காலப்பழமையுடையதென்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

சைவம் என்பது மூலப் பரம்பொருளைச் சிவன் என்னும் பெயரால் வழிபடும் சமயம் என்னும் கருத்து மறைந்து சமய வேறுபாடுகள் தோன்றியதனால் இலங்கையில் இந்து சமயென்பது இன்று சைவசமயத்தைக் குறிக்கும் பெயராக அமைந்துவிட்டது.

நாளாக நாளாகப் பல சமயங்களும் இங்கு வந்து வேரூன்றிவிட்ட இன்றைய நிலையில் இலங்கையைச் சிவபூமி என்று (மூலப் பரம்பொருளைச் சிவம் என்று குறிப்பிடும் சமயம் என்னும் பொருளில்) அழைத்தாலும் அதனை மறு சமயத்தார் ஏற்கார். எந்தப் பொருளைக் கொண்டாலும் இலங்கை சிவபூமி என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இலங்கை சிவபூமி என்பதற்கு ஆதாரமாக ஒரு திருமந்திரப் பாடலைக் காட்டி விளக்கம் செய்வது சிந்தனைக்குரியதாகும்.

இந்து நாகரிகம் ஒரு பாடமாகப் பல்கலைகழகத்தினால் அமைக்கப்பட்ட பின் இலங்கையில் இந்துசமயம் பற்றிய ஆய்வு வேகம் கொண்டுள்ளது. இவர்கள் திருமந்திரப் பாடல் ஒன்றினை மேறகோள் காட்டித் திருமூலரே இலங்கையைச் சிவபூமி எனக் கூறிவிட்டார் எனப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

மூலம் உரைசெய்த மூவாயிரம் தமிழில் இலங்கையைச் சிவபூமி என மயக்கம் கொள்ளச் செய்த அந்த திருமந்திரம் இதுவாகும்.

*மேரு நடுநாடி மிக்குஇடை பிங்கலை*
*கூரும் இவ்வானின் இலங்கைக் குறிஉறும்*
*சாரும் திலைவனத் தண்மா மலையத்துஊடு*
*ஏறும் சுழுனை இவைசிவ பூமியே.* (திருமந்திரம் 2747 )

இம்மந்திரத்தில் இலங்கை சிவபூமி என்னும் சொற்கள் வந்துள்ளன. இவற்றை வைத்துக்கொண்டு இலங்கை சிவபூமி என்னும் முடிவுக்க வந்துவிட்டார்கள்.

எனவே, திருமூலர் குறிப்பிடும் இச்சொற்களின் உண்மைப் பொருள் என்ன? இம்மந்திரத்தின் கருத்தென்ன? என ஆராய வேண்டும்.

திருமூலர் உட்பட திருமுறை அருளிய அருளாளர் பாடல்களுக்கு வெறும் தமிழ்ப் புலமையினால் பொருள் காணல் நரி வாலால் கடல் ஆழம் காண்பதை ஒக்கும். அனுபூதிச் செல்வர் தம் அகக்காட்சியிற் கண்ட பொருள்வழிச் சென்று உண்மை காண்பதே உண்மை உணர வழியாகும். என்வே பாடலின் உண்மைப் பொருளைக் காண்போம்.

மேரு என்பது இங்கே சகஸ்ர தளத்தைக் குறிக்கின்றது. மூலாதாரம் முதல் ஆஞ்ஞை வரையுள்ள ஆறு ஆதாரங்களோடு ஏழாவதாக அமைவது சகஸ்ரதளமாகும். இது உச்சந்தலையில் அதோ முகமாக (கவிழ்ந்த நிலையில்) நமக்கெல்லாம் அமைந்திருக்கின்றது.

பக்குவம் உள்ள சீடன் குருவின் அருள் பெற்று அத்தளத்திற்குரிய மந்திரத்தை முறைப்படி நினைக்க உச்சந்தலை துடிப்பதை உணருவான். இத்தளம் ஊர்த்துவமாக நிமிர்ந்தநிலை பெறும்போது ஆணிப்பொன் அம்பலமாகும். அதாவது நல்ல மஞ்சள் நிற ஒளி விளங்கும் நிமிர்ந்த சகஸ்ர தளமாக விளங்கும். இது புறக்கண்ணுக்குப் புலப்படாது. அகக்கண் கொண்டே காணவேண்டும்.

இத்தகைய சகஸ்ர தளத்தில் நடுநாடியாகிய சுழுமுனை நாடியும் இடைகலைபிங்கலை நாடிகளுமாகிய மூன்றும் சகஸ்ரதளத்துக்கு மேல் உடலின் தொடர்பு அற்று மூன்று நட்சத்திரங்கள் போல மின்னும் இந்த நிலையை அதாவது உடலின் தொடர்பற்று மின்னும் இந்நிலையை விளக்குவதற்கு மூலர் ஓர் உவமை கூறுகின்றார். இலங்கைத் தீவானது நிலத் தொடர்பின்றி நாற்புறமும் கடலாற் சூழப்பட்டிருப்பது போல இம்மூன்று நாடிகளும் உச்சந்தலைக்கு மேல் உடல் தொடர்பின்றி விளக்கும் எனக் கூறினார்.

தில்லைவனம் என்பது இதயக் குகையாகும். தண்மாமலையம் என்பது உச்சந்தலையில் இருந்து 72விரற்கு மேலுள்ள பகுதியாகிய சாந்தப் பெருவெளியாகும்.

மேற்கூறிய இடைகலை பிங்கலையாகிய இரு நாடிகளும் தில்லைவனமாகிய இதயத்தை வளைத்து சகஸ்ரதளத்துக்கு மேலே சுழுமுனை நாடியோடு விளங்கும் ஆதலால் இதயமும் சகஸ்ர தளமாகிய இரண்டு இடமும் நம் உடம்பில் சிவன் விளங்கும் சிவபூமியாகும்.

சிவபூமியில் இறைவனை வைத்து வழிப்பட்டால் துவாதசாந்தப் பெரு வெளியில் நட்சத்திரங்கள் போன்ற ஒளி அகக்கண்ணில் தோன்றும்.

சிவபூமியாகிய இதய கமலத்தில் வைத்து வணங்குவது கிரியை நெறியாகும். சகஸ்ரதளத்தில் வைத்து வழிபடுவது ஞான நெறியாகும்.

முடிவாக சிவபூமி எனத் திருமூலர் கொண்டது இதயம், சகஸ்ரதளம் எனும் எம் உடம்பிலுள்ள இடங்களாகும் என்பதும், ஞானியருக்கு உடல் தொடர்பின்றி சகஸ்ரதளத்திற்கு மேல் துவாதசாந்தப் பெரு வெளியில் நட்சத்திரங்கள் போன்று தோன்றும் மூன்று நாடிகளையும் விளக்கவே தொடர்பற்ற இலங்கையை உவமையாக எடுத்தாண்டார் என்பதும், நாம் வாழும் இவ்விலங்கைத் தீவினைச் சிவபூமி எனத் திருமூலர் குறித்தார் அல்லர் என்பதும், ஆனால் **வேறு பல காரணங்களால் இலங்கை சிவபூமியே என்பதும் நிறுவப்பட்டன.**

*நன்றி : காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர் 1990.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமியில் சிவதொண்டர் தளபதி



**கந்தையா நீலகண்டன்**
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்
(இலங்கையின் இந்து நிறுவனங்களினதும் ஆலயதர்மகர்த்தாசபைகளினதும் ஒன்றியம்)

இன்று சிவபூமியான யாழ் மண்ணில் ஆன்மீக ஒளி பரப்பிற்நிகும் அறிவொளி மக்கள் தொண்டிற்குத் தன்வாழ்வை அர்ப்பணித்திருக்கும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிவதொண்டின் இலக்கணமாகவே திகழ்கின்றார் என்றால் மிகையாகாது. சிவதொண்டர் சேவையை நாடளாவிய ரீதியில் பரப்பி எமது மக்களிடையே சமய அறிவை வளர்க்க சைவவித்தகர் பயிற்சி நெறியை ஆரம்பித்து யாழ்மண்ணில் அமைந்த எமது மாமன்ற அலுவலகத்தில் இந்து ஆராய்ச்சி நிலையம் நிறுவிட அந்த நிலையத்தின் கௌரவ இயக்குனராக எமது உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களை நியமித்து மாமன்றம் பெருமை தேடிக் கொள்வதோடு எமது நாட்டின் இந்து சமய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை கரவருடம் வைகாசித் திங்கள் விசாக நட்சத்திரத்தன்று (28.05.2011) ஆரம்பித்து வைக்கிறோம்.

ஆசிரியர் பெருந்தகை கந்தையா ஆறுமுகத்திற்கும் கல்வித் தெய்வத்தின் பெயரையே தாங்கி நிற்கும் சரஸ்வதி அம்மாவிற்கும் பிலவ வருடம் வைகாசி விசாகத்தில் (28.05.1961) அன்று பிறந்த குழந்தையை திருமுருகன் எனப் பெற்றோர் விழித்தனர். வைகாசி விசாகத்தில் பிறந்தவர்கள் ஞானம் மிக்கவர்களாகவும் அபாரஞாபக சக்தி நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள் என வாசித்திருக்கின்றேன். சகோதரர். ஆறு.திருமுருகனின் உரைகளை கேட்கும் போது இவை என் நினைவுகளில் என்றும் மிதந்துவரும்.

சுன்னாகம் இராமநாதன் இந்துக்கல்லூரியில் கல்வியை ஆரம்பித்து யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லாரியின் புகழ் பூத்த பழைய மாணவனாக பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாகத் தேறியவர் எங்கள் செஞ்சொற்செல்வர். தேசிய கல்வி நிறுவனத்தில் ஆசிரியர் பயிற்சியும் பெற்று சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் பெற்ற தாய்தந்தை வழியில் ஆசிரியத் தொழிலை 1989 முதல் ஆரம்பித்தார். 1991 இல் யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம் அவரின் தொழிற் திறனை மெச்சி நல்லாசிரியர் விருது வழங்கியது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியராக 1993ல் சேர்ந்த இவர் உபஅதிபர். பிரதிஅதிபர் என உயர்ந்து 16.03.2008 முதல் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிவருகின்றார். கல்லூரியில் அவரைப் பிரதி அதிபராக, அதிபராக சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறது. கல்லூரி வளர்ச்சிக்கு அவர் செய்த அர்ப்பணிப்பை அந்த கல்லூரியின் சமீப கால வரலாறு பறை சாற்ற, அவர் உருவாக்கிய பல மாணவர்களின் உள்ளங்களில் தெய்வமாக நிறைந்து நிற்கிறார்.

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் தமிழும் சைவமும் வாழும் வெளிநாடுகள் சகலதிலும் - குறிப்பாக இந்தியா, இலண்டன், கனடா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல சொற்பொழிவுகளை ஆற்றி தனது அறிவு ஆழத்தாலும் சொல்வளத்தாலும் எமது மக்களின் உள்ளங்களில் சிறப்பான இடத்தை பிடித்த அருமையான சொற்பொழிவாளர். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மொழியிலும் சைவ சமயத்திலும் அவருக்கு இருக்கும் ஆழ்ந்த அறிவும் கைக்கடிகாரத்தைப் பாராது குறிப்பிட்ட நேரத்தில் சொற்பொழிவுகளை நிறைவேற்றும் திறமையும், யாழ்ப்பாணம் பற்றி அவர் எடுத்து வீசும் தகவல்களும் அவரின் அபார சக்தியும் என்னை என்றும் கவர்ந்தன.

எமது மண்ணில் எமது மதத்திற்கு பெருமை ஏற்படுத்தி புதிய மறுமலர்ச்சிப் பாணியில் எங்களை வழிகாட்டிய பெருமைக்குரியவர் தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. அந்த சிவத்தமிழ் செல்வி அரவணைத்து வளர்த்தெடுத்த தளபதிதான் எமது செஞ்சொற்செல்வர். அருள் அன்னை காட்டிய பாணியில் அவரைப் பின் தொடர்ந்து ஆன்மீகத்திலும் மக்கள் பணியிலும் வளர்ந்த சிவத்தொண்டர் தளபதி ஆறு. திருமுருகன் தெய்வத்திருமகளின் வழியில் பல பொறுப்புக்களை ஏற்று வந்தவர். இன்று அந்த புதுயுகம் படைத்த தெய்வத்திருமகளின் அடிச்சுவட்டைப்பற்றி ஸ்ரீதுர்க்காதேவி புண்ணியபூமியில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவராகவும், துர்க்காபுர மகளிர் இல்லத் தலைவராகவும் அளப்பரியபணிகளை ஆற்றிவருகின்றார். கடந்த மாதம் (ஏப்ரல்2011) அவுஸ்திரேலியாவில் விடுமுறையைக் கழித்த போது செஞ்சொற்செல்வர் மீது புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையை அறிந்து மனம் நெகிழ்ந்தேன். அந்த நாட்டில் அபயக்கரங்கள் நிதியம் நிறுவி அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபகராக பல ஆண்டுகள் துர்க்காபுர மகளிர் இல்லத்திற்கும் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனுக்கும் வருடாந்தம் ஏராளம் நிதி உதவி வழங்கும் நண்பர் சிரேஷ்ட சட்டத்தரணி கதிரவேலு சிவானந்தன் அவர்கள் எமது ஆறு.திருமுருகனிடம் வைத்திருக்கும் நம்பிக்கையும் மதிப்பும் ஒரு நல்ல உதாரணம்.

சிவத்தமிழ்ச் செல்வி உருவாக்கிய அந்த புதிய மறுமலர்ச்சிப் பாணியில் மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென்பதினை தாரக மந்திரமாகக் கொண்டு சிவபூமி அறக் கட்டளை அமைத்து கோண்டாவிலில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை, சுழிபுரம் தொல்புரத்தில் சிவபூமி முதியோர் இல்லம் என பல நல்ல பணிகளை ஆற்றி வருகிறார் எமது சகோதரர் ஆறு.திருமுருகன். இவரின் மக்கள் பணிகளுக்கு ஆசியும் ஆக்கபூர்வமான பல உதவிகளையும் ஒழுங்கு செய்து வருகின்றார் ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய ரிஷிதொண்டுநாதன் சுவாமிகள். சமீபத்தில் சுவாமிகள் ஒழுங்கில் 2000 பேர்ச்களுக்கு மேற்பட்ட விஸ்தாரணமான வயற்காணி தொல்புரத்தில் சிவபூமி அற நிதியத்திற்குக் கிடைத்திருக்கிறது. செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையிலான சிவபூமி அறக்கட்டளை நிதியம் அறக்கட்டளைகள் சட்டத்தின் 114ம் சரத்திற்கமைய கூட்டமைக்கப்பட்ட நிறுவனமாக இலங்கை அரசாங்கத்தால் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக எங்கள் மண்ணில் பல மனித நேயப் பணிகளை ஆற்றிவருகின்றார் இந்த நல்ல உள்ளம் படைத்த சேவையாளர் திருமுருகன். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வன்னியிலிருந்து அகதிகளாக வந்த வேளை அவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம், மனிதநேயம் முதலியன உதவ வழிவகுத்தார். வன்னியிலிருந்து வந்த சிறுபிள்ளைகளை அரவணைத்து துர்க்காபுர மகளிர் இல்லத்தில் வளர்த்து வருகின்றனர். ஓர் இரவு அங்கே நான் தங்கும் சந்தர்ப்பம் கிடைத்த போது நள்ளிரவில் அந்தப் பிள்ளைகளில் ஒருவருக்கு வயிற்று வலிவந்து கதறியது. தாய் போல துடித்து உடனடியாக மருத்துவரை அழைத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஒழுங்கு செய்தார். மறுநாள் அந்தசிறுமி இல்லம் திரும்பி புன் சிரிப்புடன் நின்றாள். அது உண்மையில் துர்க்காபுர துர்க்கையம்மனின் ஆனந்த புன்முறுவலாக எனக்குப்பட்டது. தொல்புர வயோதிபர் இல்லத்தில் இருக்கும் முதியோர்கள் ஆறு.திருமுருகனைத் தங்களைப் பார்க்கும் சொந்தப்பிள்ளை போல் பாசம் பாராட்டுகின்றனர். ஆறு.திருமுருகனுடன் வயோதிபர் இல்லத்திற்கு சில தடவை போய் இருக்கின்றேன். தங்கள் பிள்ளை வந்து விட்டது போல அந்த முதிர்ந்த உள்ளங்கள் களிப்பில் ஆரவாரம் செய்தனர். சிறுபிள்ளைகளிலும் வயோதிபர்களிலும் அம்பாளைத் தரிசிக்கும் திருமுருகன் சமீபத்தில் ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானத்திற்கு புதிய பொலிவுதந்து மகா கும்பாபிஷேகமும் நடத்தினார். இலண்டனிலிருந்து பெரும் காண்டாமணி பெற்று, அம்மணியின் ஒலி அப்புண்ணிய பூமியிலும் கணீர் என ஒலிக்க அம்மன் தொண்டு செய்துவருகிறார்.

துர்க்காபுர புண்ணியபூமியில் தன்குரு சிவத்தமிழ்ச் செல்வி இன்னும் வாழ்கிறார் என்ற உணர்வையும் அம்மாவின் அன்பு மைந்தன் ஏற்படுத்தியிருக்கின்றார். தெய்வத்திருமகளுக்கு நினைவு மண்டபம், அவருக்கு அவர் வழமையாக இருந்த இடத்தில் சிலை, அவர் வாழ்வையும் பணிகளையும் பதிவு செய்யும் நூல் வெளியீடு என இந்த உத்தமசீடனின் பணிகள் தொடர்கின்றன.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஓர் முக்கிய பங்காளியாக உழைப்பவர் என்னருமைச் சகோதரர் ஆறு.திருமுருகன். அடிக்கடி இருவரும் தொலைபேசியில் தொடர்பு வைத்துக் கொள்வோம். யாழ்.மண்ணில் இன்று அகில இலங்கை இந்து மாமன்றம் பல பணிகளைச் செய்கிறது என்றால் அவர்தான் மூலகாரணி. அவர் ஓர் ஊன்றுகோல். சைவவித்தகர் பயிற்சி அமைத்து சைவவித்தகர்களை உருவாக்கும் மூலகாரணி. அவர் ஓர் ஊன்றுகோல். சைவவித்தகர் பயிற்சி அமைத்து சைவவித்தகர்களை உருவாக்கி எமது சமய அறிவை நாடெல்லாம் நண்பர் திருமுருகன் தாங்கித் தாங்கி எடுத்துச் செல்வது நல்ல முயற்சி. அகில இந்துமாமன்றம் இலண்டன் அன்பர் திருவேலுப்பிள்ளை, சிவசுந்தரத்தின் உதவியுடன் யாழ் பிராந்திய அலுவலகத்தில் நல்லதொரு நூல் நிலையத்தை ஆரம்பித்திருக்கிறோம். இங்கே செஞ்சொற்செல்வரைக் கௌரவ இயக்குநராகக் கொண்டு மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையம் இயங்கப் போகின்றது. யாழ்ப்பாணத்தில் நல்லூரில் திருமதி பேரம்பலம் அம்மா தந்த காணியில் மாமன்றம் கட்டிடம் அமைத்து நல்ல பணிகளை ஆறு.திருமுருகனின் வழிகாட்டலில் மேலும் தொடர நல்லூர் முருகன் அருளட்டும்.

எமது நாட்டில் குறிப்பாக யாழ் மண்ணில் மக்களுக்காக யார் யார் நல்ல பணிகளைச் செய்வதற்கு உதவ முன் வருகின்றார்களோ அவர்களுக்கு உற்சாகம் தந்து உதவிநிற்கும் ஓர் ஆன்மிக தூண்தான் எங்கள் செஞ்சொற்செல்வர். புற்று நோயாளர்களுக்கு உதவியா, விதவைகளுக்கு உதவியா, சிறையில் வாடுபவர்களுக்கு உதவியா, இளையவர்களுக்கு, மாணவர்களுக்கு தேவைகள் இருக்கின்றனவா உடனே நல்லவர்களை அணுகி உதவி பெற்று எல்லோருக்கும் நிழல் தரும் ஆலமரமாக விருட்சம் விட்டு நிற்கிறார் இந்தச் சிவதொண்டர் தளபதி. மனிதநேய நிதியம் செஞ்சொற்செல்வர் மூலம் யாழ் மண்ணில் பல உதவிகளை நல்கிவருகிறது. மனித நேய நிதியத்தினதும் மாமன்றத்தினதும் தலைவருமான மனிதநேயமாமணி திரு.வி.கயிலாசபிள்ளை அவர்கள் செஞ்சொற்செல்வரைப் பற்றிக் குறிப்பிடுகையில் "சேவையே சிந்தையாக கௌரவமாக எல்லோரும் மதிக்கக்கூடிய முறையில் நம்பிக்கை தந்து தொண்டாற்ற வல்ல ஆறு.திருமுருகன் போல் எங்கள் நாட்டில் இன்னும் பலர் உருவாகவேண்டும், நிச்சயமாக நாங்கள் மேலும் பணிகளை எடுத்துச் செல்லலாம்" என மனம்திறந்து இவர்தன் பெருமையை பாராட்டுகின்றார்.

செஞ்சொற்செல்வர் தலைமையில் யாழ் மண்ணில் ஆன்மீகமும் மனிதநேயப் பணிகளும் பெருகட்டும். பல சைவவித்தகர்கள் உருவாகட்டும், பல சிவத் தொண்டர்கள் மக்கள் பணியில் ஈடுபட்டு மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென வாழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மங்கையர் ஒளி

# தெய்வத்திருமகளாக எங்கள் தெய்வம்



பேராசிரியர் அ. சண்முகதாஸ் Ph.D. (Edinburgh)

அமரர் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பலவற்றுக்கு முதன்மை யானவராக உள்ளார். இலங்கையிலே பல இடங்களில் சமயச் சொற்பொழிவுவாற்றிய முதல் தமிழ்ப் பெண் அவர். கோயில்களிலே பெரும்பாலும் ஆண்களே பிரசங்கம் செய்து வந்தனர். இந்நிலை சிவத்தமிழ்ச் செல்வியினாலே மாற்றப்பட்டது. இனிமையான குரலும் எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாக விளக்கும் ஆற்றலும் உடையவராக அவர் விளங்கியதாலே இலங்கையிலுள்ள பல கோயில்களில் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்க மக்கள் திரண்டனர். தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் பெயர் ஒவ்வொரு வீட்டிலும் பேசப்படும் பெயராக விளங்கியது. பெரியவர்களும் இளையவர்களும் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். இப்படியொரு பெண் அற்புதமாகப் பேச முடியுமா எனப் பலரும் எண்ணினர். பெண் பிள்ளைகளுக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தார். யாழ்ப்பாணத்தில் எல்லோருக்கும் தெரிந்த ஒரு நிகழ்வு: ஒரு சிறுமியை "நீ என்ன படிக்கப் போகிறாய்" என்று கேட்டபோது "நான் தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் படிக்கப் போகிறேன்" என்று கூறினாளாம். நம்முடைய நாட்டிலே பேசிப் பெயரெடுத்த சிவத்தமிழ்ச்செல்வி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, கனடா ஆகிய பிற நாடுகளுக்குஞ் சென்று சமயச் சொற்பொழிவாற்றிய முதல் தமிழ்ப் பெண்ணாகவும் விளங்குகிறார்.

ஒரு பெரிய கோயிலை நீண்ட காலமாக நிர்வகித்து வந்த முதல் தமிழ்ப் பெண் என்ற பெருமையினையும் அன்னை சிவத்தமிழ்செல்வியே பெறுகின்றார். நம்முடைய சமூகத்திலே முக்கிய இடம் பெறும் நிறுவனமாகிய கோயில் ஆண்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், அந்நிலை துர்க்காபுரத்திலே மாற்றமடைந்தது. அன்னை தன்னுடைய அறிவினாலும் ஆளுமையினாலும் துர்க்கையின் அருட்சிறப்பினாலும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் உலகறிந்ததொன்றாக ஆக்கிவிட்டார்.

கோயில் வருவாயைச் சமூகத்துக்கு எவ்வாறு செலவிடலாம் என்பதை இலங்கையிலே செயலாற்றிக் காட்டிய முதல் தமிழ்ப் பெண்மணியும் இவரேதான். நிறைவாழ்வு பெறவேண்டிய பெண்பிள்ளைகளுக்கு உணவும் உடையும் வதிவிடமும் கல்வியும் ஏனைய வசதிகளையும் வழங்கி அவர்கள் சமூகத்திலே தலைநிமிர வைப்பதற்குக் கோயிலின் வருவாயின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டது. உலகின் பல பகுதிகளிலு மிருந்து அன்னையை நேசித்து வணங்கும் அன்பர்கள் பெருந் தொகையான பணத்தினை அனுப்பிக்கொண்டிருக்கின்றனர். அப்பணம் நல்ல தேவைகளை நிறைவுசெய்வதற்குப் பயன்படுத்தப் படுகின்றது என அறிந்து அவர்களெல்லாம் மகிழ்ச்சியடைகின்றனர்.

துர்க்கையே அன்னை தங்கம்மாவாக வந்திருக்கிறாள் என்ற எண்ணமும் பலருடைய மனத்திலே உண்டு. அவருடைய நிர்வாகத் திறமை தனித்துவமானது. அவருடைய பார்வையை அனுசரித்துப் பணிபுரியும் பணியாளர்களும் இளைஞர்களும் அடியார்களும் அவரைச் சுற்றி நின்றனர். அன்னையின் தமிழ்ப்பணியினையும் சமயப்பணியினையும் நோக்கி காரைநகர் சிவன்கோயில் நிர்வாகசபை "சிவத்தமிழ்ச்செல்வி" என்னும் பட்டத்தினை வழங்கிச் சிறப்புச் செய்தனர். அன்னையினுடைய அறிவுப்பணி, சமயப்பணி, சமூகப்பணி ஆகியனவற்றை நோக்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிப் பெருமைபெற்றது. இத்தகைய பெருமை வாய்ந்த அன்னையினுடைய முகாமைத்துவத் திறன் வியந்து போற்றத்தக்கது.

Management is the process of getting activities completed efficiently and effectively with and through other people. முகாமைத்துவம் என்பது செயற்பாடுகளை மற்றவர்களுடனும் மற்றவர்களூடாகவும் திறமை யுடனும் விளைதிறனுடனும் செய்து முடித்தலாகும். துர்க்காபுரத்திலே ஒரு கோயிலுண்டு; நிறைவாழ்வு பெற வேண்டிய பெண்பிள்ளைகள் தங்கும் ஓர் இல்லமுண்டு; அன்னதானச்சாலைகள் உள; நூல் நிலையம் ஒன்றுண்டு; இந்து இளைஞர் தொண்டர் சபை ஒன்றுண்டு. இவற்றையெல்லாம் முகாமைத் துவம் செய்யும் பொறுப்பு சிவத்தமிழ்ச் செல்வியினுடையதாயிருந்தது. இவை யாவற்றையும் பரிபாலிப்பதற்கு ஒரு முகாமைத்துவச் சபை இருந்தது. அதன் தலைவராகச் சிவத்தமிழ்ச்செல்வியே இருந்து வந்தார். அவர் தலைவராக இருந்து இவற்றை எவ்வாறு முகாமைத்துவம் செய்தார்? இதனை நோக்குதற்கு முன்னர் முகாமைத்துவம் பற்றியும் தலைமைத்துவம் பற்றியும் நோக்கவேண்டும்.

Leadership, a critical management skill, is the ability to motivate a group of people toward a common goal. ஒரு முகாமைத்துவத் திறனாகிய தலைமைத்துவம் என்பது ஒரு பொது நோக்குக்கு ஒரு தொகுதியினரை ஊக்குவிக்கும் இயல்புடைமையாகும். துர்க்கா புரத்திலுள்ள எல்லாச் செயற்பாடுகளையும் செவ்வனே செய்து முடிப்பதால் பலர் பயனடைவர். வழிபடுவோர் அம்பாளின் அருள்பெற்ற மனநிறைவைப் பெறுவர். இல்லத்திலுள்ள பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்று மகிழ்வுடன் இருப்பர். அன்னதானத்தினால் பசிநீங்கி மனநிறைவினை மக்கள் பெறுவர். நூல் நிலையம் வருபவருடைய அறிவுத் தேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுசெய்யும். தொண்டர் சபையினர் தொண்டினால் மனம் மகிழ்ந்து துன்பமில்லாமல் இருப்பர். இவ்விளைவுகள் யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பொது நோக்குக்கு தன்னுடைய முகாமைத்துவச் சபையினரையும் தொண்டர் அணியினையும் ஊக்குவிக்கும் திறனுடைய தலைவராக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி விளங்கினார்.

அம்மா தான் இருந்த இடத்திலிருந்துகொண்டே எல்லாவற்றையும் முகாமைத்துவம் செய்யும் தகைமையுடையவராகத் திகழ்ந்தார். அம்மா ஏதாவது ஒரு பக்கம் பார்த்தால், எல்லோருமே பதைபதைத்து அந்தப் பக்கம் பார்ப்பார்கள். அங்கு ஏதோ விடயம் கவனிக்கப்படவேண்டியதாக இருக்கும். அது ஒரு சிறிய குப்பையாக இருக்கலாம்; அது உடனடியாக அகற்றப்படும். இவ்வாறு பணிபுரிந்த அன்னை சிவத்தமிழ்செல்வி இடர்காலத்தில் எவ்வாறு பணிசெய்தார்?

ஒரு தடவை துர்க்கையம்மன் கோயிலிலுள்ள நகைகள் களவு போயின. நகைகளை எடுக்க வந்தவர்கள் அம்மாவுக்கு எப்போதும் உதவும் கரமாக நிற்கும் சிவபாலனிடம் நகை வைத்திருக்கும் பெட்டியின் திறப்புகளைத் தருமாறு கேட்டு அடித்தபோது அம்மா அந்தத் திறப்புகளையெல்லாம் கொடுக்கும்படி சிவபாலனிடம் கூறியதாக பின்னர் சிவபாலன் எங்களுக்குக் கூறினார். அம்பாளுடைய நகைகளை அம்பாளே பார்த்துக்கொள்ளுவாள் என்ற நம்பிக்கையிலேயே அம்மா அவ்வாறு கூறினார் என சிவபாலன் சொன்னார். பின்னர் களவுபோன நகைகள் எல்லாம் திரும்பக் கோயிலிலே கொடுக்கப்பட்ட செய்தியினை நாம் எல்லோரும் அறிவோம்.

1995இல் வலிகாமத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோது அன்னை சிவத்தமிழ்ச் செல்வியும் இடம்பெயர்ந்தார்கள். உசனிலே சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்களையா வீட்டிலே தங்கியிருந்தார். அப்பொழுது இடம்பெயர்ந்த அந்தணப்பெருமக்கள் பல கஷ்டங்களை அனுபவித்தனர். இவ்வேளை அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அவர்களுக்கு ஒரு தொகைப் பணம் வழங்கி உதவிசெய்த நிகழ்ச்சியினை நாம் மறக்கமுடியாது. மனம் தளராது மற்றவர்களுக்கு மனத்துயர் தீர்க்கும் அன்னையாக வாழ்ந்தார். இந்த வேளையில்தான் அன்னை மக்கள் படும் துயரத்தினைக் குறிப்பிட்டு என்ன வகையான உதவிகளை அகில இலங்கை இந்து மாமன்றம் செய்யலாம் எனக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கடிதம் எழுதினார். அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் உடனடியாக அன்னை யினுடைய கோரிக்கையினை ஏற்றுப் பஸ் வண்டிகளிலே தேவையான பொருட்களைக் கிளிநொச்சிக்கு அனுப்பிவைத்தார்கள்.

பின்னர் மக்கள் வலிகாமத்துக்குத் திரும்பியபோது அன்னையும் திரும்பிவந்து இராமநாதன் கல்லூரியிலே தங்கியிருந்தார். எப்படியாவது துர்க்காபுரம் செல்லவேண்டுமென்ற எண்ணத்துடனேயே காலம் சென்றது. அம்மாவுடன் திரும்பிய சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்களையா ஒவ்வொரு நாளும் மிகுந்த சிரமத்துடன் துர்க்கைக்கு நித்திய பூசையினைச் செய்துவந்தார். இவ்வாறு காலம் செல்லும்போது அன்னை சிவத்தமிழ்செல்வி துர்க்காபுரத்திலே போயிருந்தால் மக்கள் விரைவில் அங்கு மீளக்குடியமர்வார்கள் என்ற நிலை ஏற்பட்டபோது அம்மா உடனடியாகத் துர்க்காபுரம் சென்று அங்கு வாழத் தொடங்கினார். எல்லாம் அன்னையினுடைய முகாமைத்துவத்திலே மீளக் கட்டியெழுப்பப்பட்டன.

2005 ஆம் ஆண்டு அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மாநாட்டினை யாழ்ப்பாணத்திலே நடத்தியது. அம்மாநாட்டிலே அன்னை சிவத்தமிழ்செல்வியைக் கௌரவித்து அவருக்கு ஒரு பட்டம் வழங்குவதென அகில இலங்கை இந்து மாமன்றம் தீர்மானித்தது. அன்னை இதனை ஏற்றுக்கொள்வாரோ என அறிதற்காகத் தெல்லிப்பழை நோக்கிக் காரிலே இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. க. நீலகண்டன், தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, அவருடைய துணைவியார் ஆகியோருடன் சென்று கொண்டிருந்தபோது அம்மாவுக்கு என்ன பட்டம் வழங்கலாம் என்னும் பேச்சு எழுந்தது. அன்னை சிவத்தமிழ்செல்வியை நினைக்கும்போதெல்லாம் எனக்கு சேக்கிழாருடைய

*மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்*
*வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி*
*செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்*
*தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை*
*நங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே*
*நம்தமிழ்நா டுற்ற துயர்நீங் கத்தம்*
*பொங்கொளி வெண்திரு நீறுபரப்பி னாரைப்*
*போற்றுவார் கழலெம்மால் போற்ற லாமே.*

என்னும் பாடலே நினைவுக்கு வருவதுண்டு. அப்பாடலிலே இடம்பெறும் ''தெய்வப்பாவை'' என்னும் தொடரை நினைவிலே கொண்டு **"தெய்வத்திருமகள்"** என்னும் பட்டம் பொருத்தமாயிருக்குமென ஆலோசனை கூறினேன். பின்னர் எல்லோரும் அதனை ஏற்றுக்கொண்டனர். அப்பட்டத்தினை **அன்னைக்கு வழங்கி அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமைபெறலாயிற்று.**

இடரினுந் தளரினுந் தந்நிலை திரியாது துர்க்கா துரந்தரியாக இருந்து, துர்க்கையம்மன் கோயில் பரிபாலன சபையினை ஒழுங்குடனும் சிறப்புடனும் நடத்திச் சென்று, கோயிலுடன் இணைந்த பெண்பிள்ளைகளின் இல்லத்தினைச் சிறப்பாக நடத்தி, ஆக்கவேண்டிய கட்டிடங்களையெல்லாம் ஆக்கி, தெல்லிப்பழை இந்து இளைஞர் தொண்டர்களை அரவணைத்து அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி, உலகமெல்லாம் தன் புகழ் பரப்பி நிற்கின்றார் கலாநிதி சிவத்தமிழ்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி.

*மாமன்ற வெளியீடான தெய்வத்திருமகள் வாழ்வும் பணிகளும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.*

**ஞானம் என்றால் என்ன ?**

*எது எது அநித்தியமோ அதையெல்லாம் விசாரணையால் ஒவ்வொன்றாக நீக்கிய பின் மிஞ்சி நிற்பது எதுவோ, அதுவேதான் ஞானம்: அது தான் மெய்ப்பொருள்: கடவுள், தெய்வம், நான், நீ எல்லாம் அதுதான். மலையிலே போனாற்றான் ஞானம் வரும், குகையிலே போனாற்றான் ஞானம் வரும் என்று அங்குமிங்குமலைவது பைத்தியந்தான்.*

*- "மெய்ப்பொருள் காண்பதறிவு"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரும் புராண படனமும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

*(யாழ்ப்பாணத்தில் சிவதொண்டர் மாநாடு நடத்தும் சமயம் 'நாவலரும் புராண படனமும்' எனும் பொருளில் பண்டிதமணி 1969 ல் யாழ்ப்பாணத்தில் நடந்த நாவலர் மாநாடு மலருக்கு எழுதிய கட்டுரையைப் பிரசுரிப்பது பொருத்தமானது எனக்கருதி இதை இம்மலரில் சேர்த்துள்ளோம்)*

*வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த*
*போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்*
*மூதக் கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்*
*ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்கின்ற அமலன்*

இச் செய்யுள் சிங்கமுகாசுரன் கூற்றாய்ச் சூரனமைச்சியற் கடலத்தில் வருகிறது. சூரபன்மன் சுப்பிரமணிய சுவாமியைப் பொருள் செய்யாது, "நேற்றைப் பாலன்" என்றிகழ்ந்தான். தமையனது அறியாமைக் கிரங்கிச் சுப்பிரமணியப் பிரபாவத்தை மனமுருகி இடித்துரைத்தான் தம்பியாகிய சிங்கமுகாசுரன்.

இற்றைக்குத் தொண்ணூற்றேழு வருடங்களுக்கு முன் நல்லூராக் கந்தசுவாமி கோயிலிலே கந்தபுராண படனம் நடந்தது. சூரனமைச்சியலில் வரும் 'வேதக் காட்சி' என்ற பாடலுக்கு ஆறுமுக நாவலர் பயன் சொன்னார். நாவலர் மருகரும் மாணவருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை வாசித்தார். 1872 ஆம் ஆண்டில் இது நடந்தது.



நல்லூர்க கந்தசுவாமி கோயிலிலே சிவதீசைஷ பெற்ற பிரமாணர்களே புராண படனஞ் செய்து வருவது வழக்கம். அது இன்றும் நடந்து வருகின்றது. இது பொதுவிதி. நாவலர் விஷயத்திலும் வித்துவ சிரோமணி விஷயத்திலும் பொது விதியைக் கொள்வதில்லை. கோயிலார் இந்த இருவருக்கும் விசேட மதிப்புச் செய்துவந்தார்கள்.

வித்துவ சிரோமணி இலக்கிய இரசனையில் - இரசன்னயை எடுத்துக் காட்டுவதில்-ஈடும் எடுப்பும் இல்லாதவர். அவருக்குப் பயன் சொல்லுவதன்றி வாசிக்கிற வழக்கம் கிடையாது. அவர் வாசிக்க விரும்பினாலும் அவர் வாசிக்கப் பயன் சொல்லுகிறவர் யார்? யாருக்குத் துணிவு வரும்.

இத்துணைச் சிறந்த வித்துவ சிரோமணி அன்று அடங்கி ஒடுங்கி மிக்க அச்சத்துடன் வாசித்தார். நாவலர் பயன் சொன்னார்.

மாமனார் முன்னிலையில் இந்த மருகரைக் காணுவது அபூர்வம். அன்று "மருகர் வாசித்தார். மாமனார் பயன் சொன்னார்", என்றால் யாவரும் நம்பவே மாட்டார்கள். கற்பனைக் கெட்டாத அந்தக் காரியத்தை எப்படியோ கோயில் மானேஜர் ஒழுங்கு செய்துவிட்டார்.

மானேஜர் செய்த ஒழுங்கு முன்னமே எங்கும் பரவிட்டது. மூலை முடுக்குகளிலுள்ள வித்துவான்களும் வந்துவிட்டார்கள். புராணங்கேட்கும் ஆர்வமுள்ள பெண் ஆண் அத்தனை பேருங் குழுமி விட்டார்கள். எள்ளிட இடமின்றி எங்கும் நெருக்கம் மிக்கபோதும் அமைதி குடி கொண்டிருந்தது. யாவரும் மாமனையும் மருகரையும் மாறிமாறிப் பார்த்தபடி இமையவர்களாயிருந்தார்கள்.

''காலத்துக்கும் விஷய குண பாவத்துக்கும் ஏற்ப, எச் சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகிறதோ, அச் சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லவேண்டும்'' என்பது நாவலர் எழுதிய சிவபுராண படன விதி. அவ் விதிக்குப் பரிபூரண இலக்கியமாய் இருவரும் திகழ்ந்தார்கள்.

பதவுரை பொழிப்புரை நடந்ததன் மேல் விரிவுரை நடந்தது. வேதக் காட்சி சாத்திர ஞானம், அது பாச ஞானம். உபநிடத் துச்சியில் விரித்த போதக் காட்சி பசு ஞானம். பசுவாகிய ஆன்மா பாசத்தை விலகித் தன்னைப் பிரம மயமாகக் காணும் ஞானம் அந்த ஞானம். 'நான் பிரமம்' என்னும் ஞானம் அது. பாச பசு ஞானங்கள் இரண்டுக்கும் இறைவன் எட்டாதவன். அவனருளாலே தான் அவனை எட்டுதல் கூடும். அவனருள் பதி ஞானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவகை ஞானத்தின் இயல்பையும், நேற்றைப் பிரபல்யத்தின் பிரபாவத்தையும் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் உபநிடதங்கள் சிவாகமங்கள் என்னும் அதிப் பிரபல பிராமணங்கள் வாயிலாகவும், அநுபவ அநுபூதிமான்கள் வாயிலாகவும் விரிவுரை ஊற்றெடுத்துப் பெருகியது. நீண்டகால தத்துவம் அணுப் பிரமாணமாய்ச் சுருங்கிக் கழிந்தது.

சரீரம் புளகங் கொள்ளக் கண்ணீர் ததும்பமாமனார் முகத்தை நோக்கியது நோக்கியபடி சித்திரப் பாவை போல ஆடாமல் அசையாமல் இருந்தார் மருகர் வித்துவ சிரோமணி. மருகரின் நிலைசபை யெங்கும் பரவியது. கல்லால் முனிவர்கள் போலக் காட்சியளித்தார்கள் கற்றவர் நிரம்பிய சபையினர்கள்.

ஒரு காலத்திலே தருமபுரத்திலே குமரகுருபரர் "ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள" என்று, பெரிய புராணத்தில் வரும் அருமைச் செய்யுளுக்கு விரிவுரை நிகழ்த்தி யருளினார. அந்த விரிவுரையை, வேதக் காட்சிக்கு அன்று நடந்த விரிவுரை ஞாபகஞ் செய்தாயிருந்தது.

ஒருமுறை தமது பிரசங்க முறை யில்லாததொரு நாளில், வண்ணைச் சிவன் கோயிலில், தமக்கு அன்று ஆயத்தமில்லை என்று கூறி, நம்பால் "மரணத்துக்கு ஆயத்த மில்லை" என்று, ஆயத்தஞ் செய்யாமல் ஒரு பிரசங்கம் செய்தவர் நாவலர். அந்தப் பிரசங்கம் அவர் செய்த பிரசங்கங்களில் தலை சிறந்ததும் உருக்கம் நிறைந்ததுமாகும். அவ்வாறே வேதக் காட்சிக்குச் செய்த புராண விரிவுரையும் அவர் செய்த புராண விரிவுரைகளில் தலைசிறந்ததும் உருக்க மிக்கதுமாகும்.

குறிப்பிட்ட இரு நிகழ்ச்சிகளையும் கேட்டவர்களைக் கண்டவர்களைக் கண்டு கேட்டாலே நம்மையறியாமலே நம்மை யிழப்ப தொரு மெய்ப்பாடு உண்டாகும்.

*

இறைவன் சந்நிதி இறைவன் புகழே இயம்புதற்குரிய இடமாம். எந்த நிகழ்ச்சியும் இறைவனைப் பராமுகஞ் செய்தற்குபகாரமாயிருத்தலாகாது. சிந்தனை வாக்குச் செயல் மூன்றும் இறைவனடியிற் சென்று குவிதற் குரிய இடமே சந்நிதி.

இறை சந்தியில் பல பந்தனான மனிதன் ஒருவன் தலைமை வகிப்பதும், ஒருவரை யொருவர் புகழ்ந்து சொற்பொழிவு நிகழ்த்துவதும் சந்நிதி விரோதமாம். புராண படனங் கூட வடக்கே இறை சந்நிதியில் நடப்பதில்லை. அங்கே வித்தியாமண்டபம் பறம்பாயுண்டு. நமது நாட்டிலுள்ள சிறிய கோயில்களில் புறம்பாய் மண்டபமின்மையால், இறை சந்நிதியிலேயே சந்நிதி விரோதம் நிகழாத முறையிற் புராண படனம் நடந்துவருகின்றது. ஒருவர் தலைமை வகித்து இன்னார் வாசிப்பர், இன்னார் பயன் சொல்லுவார் என்று சொல்லுவதில்லை. சொல்லாமலே காரியம் நடக்கும். அசுரன் ஒருவன் சுவாமியை இழித்துரைக்கும் பகுதியைப் படிக்கும்போதும் அவன் அறியாமைக் கிரங்கிச் சுவாமியின் பெருமையில் விம்மிதங்கொள்ளும் முறையிலேயே புராண படனம் நடக்கும்.

சந்நிதி விரோத மின்றி, ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன் சொல்லுகின்ற இந்த முறை, யாழ்ப்பாணத்துக்கே உரிய தொரு சிறப்புமுறை. இந்த முறை யார் எப்பொழுது வகுத்தமைத்தது என்பது ஆராயத்தக்கது.

*

'கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணம் பாடிய காலத்திலேதானே, கந்தபுராண படனம் யாழ்பாணத்தில் தொடங்கிவிட்டது. அப்பொழுதுதானே தனிச் சிறப்புமுறையான புராண படன முறையும் இங்கே அமைந்து விட்டது போலும்" என்று எண்ண இடமுண்டு. எண்ணுவதற் காதாரம் பின்வருமாறு:

*

'யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்கள் ஒருவர் பின் ஒருவராய்ப் பன்னிருவருக்கு மேற் பட்டவர்கள். அவர்களுள் முதல்வனான தமிழரசனின் மந்திரி புவனேகவாகு. அவர் பிராமணர். கங்காதரக் குருக்கள் என்பது அவர் இயற்பெயர். அவர் கி.பி. 950 இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டினார்.

**"இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்டதெல்லை**
**அலர்பொலி மாலைமார்ப னாம்புவ னேகவாகு**
**நலமிகு யாழ்ப்பாணத்து நகரிகட்டு வித்து நல்லை**
**குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித் தானே"**

என்ற பாடல் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. "தொண்ணூற்றே டெழுபத்து நான்கின்" என்றும் பாடம் உண்டு. சகாத்தத்துடன் எழுபத்தேழு ஆண்டைக் கூட்ட வருவது கிறிஸ்தாப்தம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு 170 வருடம் முந்தியது கந்தபுராணம்.

**"ஏதமறு சாத்த மெழுநூற்றின் மேலாய்**
**இலகு கந்தபுராண மரங்கேற்றினானே"**

என்பதனால் அறியத்தக்கது.

இராச வம்சத்தவனும் கவிதையிலும் இசையிலும் வல்லோனுமான வீரராகவன் என்பவன் கச்சியப்ப சுவாமிகளோடு உடன் கற்றவன் என்கிறது தமிழ்ப்புலவர் சரித்திரம். (அ. குமார சுவாமிப் புலவர் எழுதியது.) இந்த வீரராகவனே யாழ்ப்பாடி. மாருதப்பிரவல்லி வயிற்றிற் பிறந்த வாலசிங்கனிடம் மணற்றி என வழங்கிய யாழ்ப்பாணத்தைப் பரிசிலாகப் பெற்றுத் தமிழரசர்களுக்கு முன்னமே யாழ்ப்பாணத்தை ஆண்டவன் அந்த யாழ்ப்பாடி. இவன் அந்தகன் அல்லன். அந்தகக் தகக் கவிவீரராகவன் என்ற கவிஞன் வேறு; வீர ராகவனான யாழ்ப்பாடி வேறு. இந்த யாழ்ப்பாடியுடன் வந்தவர் கச்சிக் கணேசையர் என்பவர். கச்சி காஞ்சிபுரம். இவர் யாழ்ப்பாடியின் அநுசரணையில், நல்லூருக்குத் தெற்கே சித்திவிநாயகர் ஆலயத்தை அமைத்து ஒரு பாடசாலையையும் நடத்தினவர்.

"கச்சியப்பரின் சகபாடியாகிய யாழ்ப்பாடியும், கச்சிக் கணேசையரும் கச்சியல் நடந்த கச்சியப்ப சுவாமிகளின் கந்தபுராண அரங்கேற்றத்திற் பங்குபற்றியிருப்பர். அந்த இருவரும், கந்த புராணம் உதயஞ் செய்தபோதே, அதன் பிள்ளைமைப் பிராயத்திலே தானே, அதனை யாழ்ப்பாணத்துக்குக் கொணர்ந்து, புதியதொரு தனிமுறையை இந் நாட்டுக் கோயில்களுக்கேற்ப அமைத்து, கோயில்கள் தோறும் கந்தபுராண படனத்தையும் ஏனைய புராண படனங்களையும் நடத்தியிருப்பர்" என்றிங்ஙனம் ஊகிக்கலாம்.

புராண படனம் தனித்ததொரு முறையில் யௌவன தசையை அடைந்து, உச்ச நிலையில் விளக்கமுறச் செய்தவர் ஆறுமுக நாவலர்.

*நன்றி: நாவலர் மாநாடு மலர், 1969.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள் காட்டிய வழி

பவானி வரதராஜன், ஆசிரியை.

**சித்தர்களில் ஒருவரான சிவயோக சுவாமிகளின் பிறந்தநாளையொட்டி பிரசுரமாகிறது.**



யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கொப்ப மனுக்குலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ அருமையான நல்லுபதேசங்களை சுவாமிகள் உலகுக்கு அளித்துள்ளார். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற சாதி, சமயம்கடந்த நிலை, சமரச சன்மார்க்க நெறி, எளிமை, உயிர்களிடத்து அன்பு, ஜீவகாருண்யம், சமயம் விதிக்கும் சமயக்கிரியைகள், உள்ளத்தில் உத்தமனைக் காணும் அகவழிபாடு, ஆன்ம ஈடேற்றம் இவைகளைப் பெரிதும் பேசியிருக்கிறார் சுவாமியவர்கள், மக்களோடு மக்களாக வாழ்ந்து மெய்நெறியில் வாழ வழிகாட்டிய பெருமகான் மனத்துக்கண் மாசிலனாகி, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், நான்கினையும் அறவே ஒழித்து அறவாழ்க்கை வாழ்ந்த புனிதரே சுவாமிகள். அவரின் தூய்மையான துறவு வாழ்க்கையினை ஞானப் பொக்கிஷமான நற்சிந்தனை மூலம் நன்கு அறியலாம்.

தன்னை அறிந்து மெய்ப்பொருளைக்காண விழைந்த சுவாமிகள் 'ஓதி உணர்ந்தும் தன்னையே, தவத்தையாற்றி அறிவதும் தன்னையே என கூறி, நானார், என்னுள்ளமார் என சிந்தித்துக் கண்டு கொண்டார்.

மக்களைத் தன் பால் ஈர்க்கும் எண்ணம் சுவாமிகளிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இஷ்ட சித்திகள் எய்தவும் விட்டிலன் பாவினை ஒன்றும் பண்ணவும் விட்டிலன் என சிந்துக்கள் செய்யும் ஆற்றல் தனக்கிருந்தும் அவற்றைச் செய்யும் வாய்ப்புக்களை தன் ஞானகுரு தனக்கு மனமுவந்து அளிக்கவில்லை எனக்குறிப்பிடுகிறார்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்ம ஈடேற்றம் பெற வழிகாட்டிய ஒப்பற்ற ஒரு ஞானகுருவாக விளங்கினார்.

நல்லூர் முருகனிடம் ஆராத பக்தி கொண்ட சுவாமிகள் அடிக்கடி அவரைத் தரிசிக்க செல்லும் வழக்கமுடையவராயிருந்தார்.

இறைவனே செல்லப்பர் வடிவில் வந்து தன்னை ஆண்டுகொண்டார் என்பதை,

*இருவினையார் மதிமயங்கி இடர்பட்டுக்கடப்பேனைக்*
*கருணையினால் ஆண்டு கொள்ளக் கடவுள் திருவுளங் கொண்டு*
*அருள் மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்*
*திருவிழும் நல்லை நகர்த் தேரடியில் கண்டேனே,*

எனப்பாடிப்பரவசமடைகிறார். மேலும்,

*ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்*
*பேசாதனவெல்லாம் பேசினான் - கூசாமல்*
*நின்றேன் நீ யாரடாவென்றே அதட்டினான்*
*அன்றே யான் பெற்றேன் அருள் -*

எனவும் கூறினார். செல்லப்பா சுவாமிகளின், ஒருபொல்லாப்பும் இல்லை அப்படியேயுள்ளது. ஆரறிவார் எனக்கூறிவாசகத்தை உணர்ந்த அந்நிலையில்தான் அடைந்த சுகத்தை,

*அயலறியாத ஆனந்தம் பெற்றேன்*
*மயலறியாத மௌனத்திலுற்றேன்*
*செயலறியாத சிவத்தினைக் கற்றேன்*
*இயமநியமாறி யாவையும் அற்றேன்*

எனவும் பலபட கூறி மகிழ்கின்றார்.

ஞானவைராக்கியம் பெற்ற சுவாமிகளின் அருட்பார்வையாலும் நல்லுபதேசங்களாலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இறைநிலயை உணர்ந்தார்கள்.

சற்குரு தரிசனம் ஒருவனுக்கு உய்யும் நெறிகாட்டும் என ஞான நூல்கள் கூறுவதற்கேற்ப சுவாமிகளை மக்கள் தரிசிக்கத் தொடங்கினர்.

தன்னை வந்தடைந்தவர்களின் மனோநிலையினை உணர்ந்து அவர்களைத் தூயவர்களாக்கி பக்தியில் திளைக்கச் செய்து அவர்களுக்கு நன்னெறி காட்டியுள்ளார்.

உண்மை முழுவதும் அறிந்திட்டா இது முடிந்த முடிவு இதை உணர் என்றும் ஒரு பொல்லாப்பும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் ஏங்காதே பயப்படாதே வருவது வந்து போகட்டும் பொருட்படுத்தாதே எனவும் இறை நம்பிக்கையும், மனத்துணிவும் தான் வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுமென அழுத்தியுரைப்பார்.
இனி மக்களின் உயர்வுக்கு இன்றியமையாதது ஒழுக்கம் என்பதனை,

*ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே*
*ஓமென்று சிந்தை செய்வீர் தம்பிமாரே*
*அழுக்காறு, அவா, வெகுளி தம்பிமாரே*
*ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே*
*வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே*
*மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே*
*நாப்பிளக்க பொய்யுரைத்துத் தம்பிமாரே*
*நாட்டில் பொருள் தேட வேண்டாம் தம்பிமாரே*
*ஓதி உணரவேண்டும் தம்பிமாரே*
*உய்ய வழியது காணும் தம்பிமாரே*

எனச் சிவத்தியானத்தின் மூலம் தான் புலன்களையடக்கி ஆளலாம் எனச் சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

இவையெல்லாம் குறிப்பாக நாளைய நற்பிரசைகளான இளைஞர்களுக்கு காலமறிந்து அவர் கூறும் உபதேசங்கள் பொன்போல் போற்றத்தக்கவை

*இறைவனின் திருநாமத்தை வழுத்திய வண்ணமிருந்த அவருள்ளம்*
*நாமஞ் சொல்லுவோம், சிவநாமஞ்சொல்லுவோம்*
*நமனை வெல்லுவோம், நாமே அவனென்று*
*நடந்து செல்லுவோம், சோம சுந்தரன் பாதங்காணுவோம்*
*சும்மா விருக்கிற சூட்சம் பேணுவோம்* எனவும்

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே, ஆகையால் நாம் அவருடைய உடைமை, அனைத்தும் சிவன் செயல் அவனன்றி அணுவும் அசையா, தெய்வத்தை நம்பு முழுமனதுடன் நம்பு எனவும் இறையருளைப் பெறுவதற்கு சிறந்த வழி பக்திநெறி எனவும் அல்லும் பகலும் திருவடியினையே எண்ணித்தொழவேண்டும் பக்தியால் கும்பிட்டுப் பாடட வேண்டும் எனவும். சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம், அடியாரைப் பணிதல் ஐந்தெழுத்தோதல், குருபாதம் பணிதல், ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டும் எனவும் கூறியிருக்கிறார்.

*"அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு - வேல்வேல்*
*ஆசானடிக்கீழ் அமர்ந்து நீ நில்லு*
*கொஞ்சம் கொஞ்சமாய் மனதை வெல்லு - வேல்வேல்*
*கூடாத கூட்டத்தை விட்டு நீ - செல்லு, என்றும்*

அன்பு சிவமென்ற ஆன்றோர் திருவாக்கை இன்பமுடன் போற்றியிருப்பதுவுமெக்காலம் என்றும், எல்லாவற்றையும் அன்பாகக் காணும் சுவாமிகள் அன்பு ஒன்றே சிவப்பேற்றைத் தருமென உபதேசித்தார். சுவாமிகள் கடவுள் என்று சொல்லிக் கொண்டு அங்குமிங்கும் ஓடி அங்கலாய்த்துத் திரிவோரை தாம் கற்ற நூலறிவினைக் கொண்டு கடவுளைக் கண்டு விட்டதாகப் பிதற்றித் திரிவோரை, போலிவேடதாரிகளை மிகவும் கடுமையாக சாடியுரைக்கிறார்.

*அங்குமிங்கும் ஓடியே அவதிப்படுகிறாய்*
*பங்குபோட்டுப் பார்க்கிறாய் பரிதவித்து வாடுகிறாய்*
*எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம்*
*என்று வாது பேசுகிறாய்*
*சாதி சமயமென்று சண்டைப்படுகிறாய்*
*தத்துவத்தையறியாமல் சங்கடப்படுகிறாய்*
*ஓதியுமுணராமல் உண்மையறிந்தவன்போல்*
*ஊரெங்கும் சென்று பிரசங்கம் பண்ணுகிறாய்* எனக் கூறிக் கொண்டார்.

உலகம் உய்ய அனைவருக்கும் இனிய இலகுதமிழில் அண்ணன்மாரே, தம்பிமாரே, ஆச்சிமாரே கேளீர் அருமையான தெய்வம் நாங்கள் அதையறிந்து வாழ்வீர் இன்ன தன்மை என்று நம்மை எடுத்துச் சொல்வாருண்டோ என்ன பயம் எங்களுக்கு எல்லாம் சிவமன்றோ அவனன்றி ஓரணுவும் அசையாதெனப் பெரியோர் அன்று சொன்ன நிறை மொழியை மறுப்பதுவும் சரியோ அங்கிங்கெனாதடி எங்கும் சிவமென்று அறிந்தடங்கி அகிலத்தில் வாழ்வதுவே நன்று என்று அருளுபதேசம் புகன்றார்.

சிவபக்தி மாத்திரம்தான் மனிதனைப் பாக்கியவானாக்கும் மற்றவையனைத்தும் பிரயோசனமற்றவை ஆகையால் இதைவிடாமல் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே வெற்றியுன் சொந்தம்.

வெளிமாதிரியொன்றும் செய்யாதே, உள்ளுக்குள் பெலத்துக்கொள் தரும நெறியில் பிசகாதே, எவ்வுயிரும் பெருமான் திரு முன்னிலை என்று சாதனைசெய், கடவுள் உள்ளும் உள்ளவர் இப்படிப்பலப்பல அருளுபதேசங்களை தமது திருமுகங்கள (கடிதங்கள்) வாயிலாகவும் கூறிச் சென்றுள்ளார்.

தொண்ணூற்றொராண்டுகளாகத் தோன்றிநின்று அருள்புரிந்த சுவாமிகள் 1964ம் ஆண்டு பங்குனித்திங்கள் ஆயிலிய நட்சத்திரவேளையில் திருவடிக்கலப்புற்றார்.

குருபரன் அடியினை ஏத்துதல் இன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் வைணவமும்

பேராசிரியர், கா. கைலாசநாதக் குருக்கள் M.A., Ph., D. (Poona)

சைவமும் வைணவமும் தென் பாரதத்தின் தமிழ்நாட்டின் இரு கண்களாக விளங்குவது கண்கூடு. சைவத் திருக்கோவில்களும் வைணவத் திருக் கோவில்களும் கலந்து விரவாத கிராமங்களே அங்கு இல்லை எனத் துணிந்து கூறலாம்.

பாரதநாட்டில் நிலவும் சமயங்களுட் சைவம் தனிப்பெருஞ் சிறப்புடையது. உயரிய ஞானம் கூறும் சைவசித்தாந்த தத்துவம் வழங்கியதால் உயர்ந்து விளங்குவது. 'எத் தெய்வத்தை வழிபடினும் தன்னையறியாது சிவபிரானையே வழிபடுபவனாகின்றான்' என்ற உண்மையினை எடுத்துரைத்துச் சிவபெருமானது அருளும் பெற்றியை விதந்து கூறுவது.

ஈழநாட்டில் சிவாலயங்களே பெருமளவிற் காணப்படுகின்றன. வைணவ ஆலயங்களில் ஒரு சிலவற்றையே இங்கு காண்கின்றோம். தனியே நிறுவப்பட்ட வைணவ ஆலயங்களில் பெரும்பாலாகச் சைவப் பெருமக்களே வழிபடுவதையும் காண்கின்றோம். இவ் வழிபாட்டுமுறை சைவ பாரம்பரியத்துக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது உற்று நோக்கற்பாலது, அது எவ்வாறென நோக்குவோம்.

சிவாகமங்கள் விஷ்ணுவின் வழிபாடுபற்றியும் எடுத்தியம்புவன: சிவாலயத்தில் விஷ்ணு எவ்வாறு இடம் பெறுவர் என்பது பற்றியும் முக்கியமாகச் சிவாகமங்களுள் ஒன்றான காரணாகமம் எடுத்துக் கூறுகின்றது. காரணாகமம் 60 ஆவது படலம். சிவபெருமானது பரிவார தெய்வமாக விஷ்ணுவைப் பிரதிட்டிப்பதற்கும் இடம் வகுத்ததோடமையாது விஷ்ணுவைப் பிரதிட்டிக்கும் முறையினை 99ஆவது படலம் விரித்துரைக்கின்றது. கிராமங்களில் விஷ்ணுவின் ஆலயம் தனியாக அமையும் முறைபற்றியும், அங்கு பரிவாரங்களை நிறுவும் முறையானது விஷ்ணு ஆலயங்களில் வழிபாடு எவ்வாறு பாஞ்சராத்திர கிரமமாக நிகழ வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைக்கின்றது. இது பற்றியே சைவப் பெருமக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களிலும் விஷ்ணுவிற்காகத் தனி ஆலயங்கள் நிறவப்பட்டிருப்ப தையும் சைவப் பெருமக்கள் அங்கு சென்று வழிபாடு நடத்துவதையும் காண்கின்றோம். இதில் வியப் பெதுவுமில்லை.

சிவலிங்கத் திருமேனியிலும் மூன்று அம்சங்கள் விளங்குவதைச் சைவ திருக்கோவிற் கிரியை நூல்கள் கூறும். ஒன்று பிரம்ம பாகம் : மற்றையது விஷ்ணு பாகம் எனப்படும். மூன்றாவது உருத்திர பாகமும். விஷ்ணு பாகம் இத் திருமேனியின் நடுவதான அம்சம். சிவலிங்கத் திருவுருவத்தின் இம் மூவகைப் பாகுபாடுகள் சகல நிலையில் உள்ள திருமேனிகளுக்கும் வழங்கக் காணலாம்.

உமைக்கும் திருமாலுக்கும் வேற்றுமை காணாத அப்பர் சுவாமிகள், திருத்தாண்டகமொன்றில் சிவபெருமானைத் 'திருமாலோர் பாகத்தான்' என்றும். "அரியலால் தேவியில்லை ஐயன் ஐ யாற னார்க்கே '' என்றும் கூறியவை நோக்கற்பாலன. திருமாலையும் தனது சக்திக்குள் ஒரு சக்தியாகக் கொண்டு ஒரு பாகத்தில் உடையவன் என்பது இதனால் தெளிவாகிறது. சிவபிரானது சக்தி ஒன்றே செயலாற்றுதற்கண் நான்காகப் பிரிந்து நிற்கும். அங்ஙனம் நிற்குமாறாவது: இன்பத்தில் பவானியும். ஆடவரிடத்துத் திருமாலும், வெகுளியில் காளியும், போரில் துர்க்கையும் என்பது சிவாகமங்களின் துணிபு,

"ஏகைவ சக்தி: பரமேஸ்வரஸ்ய பின்னா சதுர்த்தா - விநியோககாலே,

போகே பவானி, புருஷேஷு விஷ்ணு: கோபேது காலீ - சமரேச துர்க்கா"

சிவ - ஆகமங்களுள் விதித்த மூர்த்தி பேதங்களுள் ஹரேரர்த்த மூர்த்தியும், ஏகபாதத்ரி மூர்த்தியும் உற்று நோக்கற்பாலன, ஒரு காலில் ஊன்றிநிற்கும், உருவத்தின் நடுவிலிருந்து கிளைத்தெழும் இரு தோற்றங்களில் ஒன்று பிரமனாகியும் மற்றது விஷ்ணுவாகவும் விளங்கும் உருவமே ஏகபாதத்திரிமூர்த்திக்கு திருவுருவமாகும். சிவபெருமானின் 64 வகை மூர்த்தி பேதங்களுள் இதுவும் ஒன்று, ஹரேரர்த்த மூர்த்திக்கு உரிய மறு பெயர் ஹரிஹரமூர்த்தி. இது சங்கரநாராயண மூர்த்தி எனவும் கூறப்படும். அர்த்தநாரீசுவர வடிவத்தில் அமைந்திருப்பது போன்று ஒரு பாதி சிவபெருமானின் அம்சம் விளங்கும். மறுபாதி திருமாலின் தோற்றத்தைக் கொண்டு அமையும்.

சைவத்தின் உன்னத நிலையைக் காட்டும் சிவபெருமானின் திருவுருவங்களில் விஷ்ணுவிற்குச் சக்கரம் வழங்கி அனுக்கிரகம் செய்யும் தோற்றம் வாய்ந்த விஷ்ணுவனுக்கிரக மூர்த்தியும், நரசிம்மத்தை யடக்கும் கோலம் காட்டி நிற்கும் சரபமூர்த்தியும் குறிப்படத்தக்கவை.

விஷ்ணுவைத் தலைசிறந்த பக்தனாகச் சித்திரிக்கும் புராண வரலாறுகளும் இவ்வரலாறுகட்கு வடிவம் தரும் சிற்பங்களும் சில வழிபாட்டில் விஷ்ணு ஈடுபட்டு நிற்கும் நிலையினை வெளிப்படுத்துவன. சிவபிரானை வழிபடும் விஷ்ணு ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்து வழிபட்டுக்கொண்டிருந்த பொழுது ஒரு மலர் குறையக் கண்டதும் தம் கண்ணை இடந்து மலராக அருச்சித்த வரலாற்றைச் சித்தரிப்பன இவ் வரலாறுகளும் சிற்பங்களும்.

பக்தியின் உன்னத நிலையினைச் சித்தரிக்கும் பெற்றியினை வேறொரு தெய்வம் வேண்டாது

தம் தெய்வத்தையே தனிப்பெரும் தெய்வமாகக் கருதும் முறையை விளங்குவதைச் சைவ மரபிலும் தனித்தனியே காணலாம்.

சைவநெறி தழைத்தோங்கி வளர்ந்துவரும் ஈழத்திலும், சைவர்களே பெரும்பாலாக வசிக்கும்

இடங்களிலும் சிவாகமம் கூறும் மரபை அடிப்படையாகக் கொண்டு போலும், தனி வைணவத்தலங்களும் பாஞ்சராத்திர ஆகம முறைகளைத் தழுவி நிறுவப்படலாயின. அதே முறைக்கமைய வழிபாடுகளையும் நடத்தி வரலாயின.

*நன்றி : துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார். சுவாமி கோயில்.*
*திருக்குடமுழுக்கு மலர் 03.07.1977*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் பெருமானின் சமய வாழ்வு கூறும் சிறப்புகள்

த. சண்முகநாதன், புத்தூர்

*20.05.2011 இல் அப்பர் குருபூசை. அப்பரின் வாழ்வு சிவதொண்டர்களுக்கு ஒரு முன் மாதிரி.*

சேக்கிழார் சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாற்றைக் கூற ஆரம்பிக்கும்போது மற்றைய அடியவர்களுக்குக் கூறாத ஒரு பெருமையினை அப்பர் பெருமானுக்குக் கூறுகிறார். அப்பெருமை அப்பருக்கென்றே அமைந்தது. அப்பர் பெருமானின் தொண்டு வாழ வேண்டும் என்ற தனது பெருவிருப்பத்தினை வெளிக்கொண்டு வரும்வகையில் நாவுக்கரசர் வரலாற்றின் முதல் பாடலை அமைத்துக்கொண்டார்.



"திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ<br>
வருஞானத்தவ முனிவர் வாசீகர் வாய்மை திகழ<br>
பெருநாமச்சீர் பரவல் கூறுகின்றேன். பேருலகில்<br>
ஒரு நாவுக்குரை செய்ய ஒண்ணாமை உணராதேன்"

அப்பரின் தொண்டு நெறி வாழ்க அத்தவமுனிவரின் வாய்மையோடு கூடிய திருநாமத்தின் பெருமையைப் பேசுகிறோம். எனினும் அவர் தொண்டின் பெருமையைப் பேச ஒரு நா போதாது என்ற ஆற்றாமையினை உணரும் ஆற்றலை நான் பெறவில்லையே என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் சேக்கிழார் பெருமான். சம்பந்தப்பிள்ளைக்கும் வன்றொண்டருக்கும் வாழ்த்துப்பா கூறியுள்ளபோதும் அவ்வாழ்த்துரையின் பரிமாணம், பார்வை, அழுத்தம் என்பன திருநாவுக்கரசுநாயனார் வாழ்த்துரையில் கூறப்பட்டது போன்று இல்லை.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வாழ்ந்து வந்த சைவ அடியார்களாம் புகழனார் - மாதினியார், என்போர் இவரின் தந்தையும் தாயுமாம். திலகவதியார் இவரின் ஒரே சகோதரியார். புகழனார் நிலம். புலம் மிக்கவர். கமம் செய்து பொருள் சேர்த்து சைவ அடியார்களிற்கு தர்மம் செய்வது அயலவர்களுக்கு ஈதல், அவர்களுடன் இசைவுபடவாழ்தல் ஆகியவை அவர்கள் வாழ்வின் குறிக்கோள். அந்த அரிச்சுவட்டில் வளர்ந்து வந்த மருணீக்கியர் உரிய காலத்தில் வேண்டிய கல்வியைப் பெற்று சமய கேள்விஞானத்துடன் விளங்கினார். அவர் சிறு பிள்ளையாக இருக்கும்போதே புகழனார் இவ்வுலக வாழ்வை நீத்தார். தாயார், சகோதரியார் ஆகியோருடன் மருணீக்கியார் வாழ்ந்து வரும் காலத்தில் மாதினியாரும் தேகவியோகம் எய்தினார். இதேகாலத்தில் சகோதரியார் திலகவதியாருக்கு நிச்சயார்த்தம் செய்யப்பட்ட கலிப்பகையாரும் எதிரிநாட்டுப் படையாருடன் பொருதி வீர மரணமடைந்த செய்தியும் மருணீக்கியாருக்கும் திலகவதியாருக்கும் கிடைத்தது. இதனால் தமக்கையாரும் தம்பியார் மருணீக்கியாரும் கடுமையாக மனத்தாக்கம் அடைந்துவிட்டனர். பலவாறான விடயங்களையிட்டு சிந்தித்த திலகவதியார் தம்மை நம்பியிருக்கும் மருணீக்கியாருக்காக வாழவேண்டி திருவாமூர் சிவபெருமானிடம் தன்னை ஒப்புவித்து அவருக்கு சேவை செய்வதையே தன் தலையாய நோக்கமாகக் கொண்டு கைம்மை நோன்பு இயற்றுவராயினார்.

தந்தை, தாய், மைத்துனர் என்போரின் தேக தேகவியோகம் காரணமாக "உலகம்" நிலையாமை கொண்டது" என்று கண்டு, மருணீக்கியார் தம் தந்தையால் ஈட்டப்பட்ட செல்வத்தை தர்மவழியில் ஏழைகளுக்கும், வறியோர்கட்கும் ஈயவும், திருநந்தவனம் அமைக்கவும், தாகசாந்தி நிலையங்கள், அன்னசத்திரங்களை அமைக்கவும் நீர் நிலைகளை அமைக்கவும், புதுப்பிக்கவும் செலவழிக்கலானார். இதனை சேக்கிழார் பெருமான் "நிலையாமை கண்டறங்கள் செய்வாராய" என பெரிய புராணத்தின் செய்யுளில் (36.37) கூறியுள்ளார்.

மருணீக்கியர் காலவோட்டத்தில் சமணம் மீது நாட்டம் கொண்டார். தமிழ்நாட்டில் ஏழாம் நூற்றாண்டில் பௌத்தம் சமணம் நன்நிலையில் இருந்த காரணத்தால் மருணீக்கியர் சமண சமயத்தைத் தழுவிக் கொண்டார். இதனை சேக்கிழார் பெருமான் "சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர்" என்றார். இதில் இன்னொரு நிலையும் உள்ளது. மருணீக்கியாருக்கு சமய உண்மைகளை தெளிந்து அறியும் வழியை சிவபிரானோ அல்லது சகோதரியாரோ ஊட்டவில்லை. அதனை மருணீக்கியர் எம்பெருமானிடம் கேட்கவுமில்லை என்பதுதான் அந்நிலை. மருணீக்கியர் பாடலிபுரத்தில் சமணதுறவியாக, சமணர்களின் பெருந்துறவியாக தர்மசேனராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கவேண்டி ஏற்பட்டமைக்கு ஒரு பிராரப்த கன்ம வினைத்தொடர்பும் உள்ளதாக சேக்கிழார் பெருமான் கூறுகிறார். அது என்னவெனில் முன்பு ஒருகால் மருணீக்கியார் தாம் செய்த தவத்தினை நிறைவு செய்தாரில்லை. அதனால் அவர் உண்மைச்சமயம் எது என அறியமுடியாது சமணத்தில் சென்று உழல வேண்டிய பலன் இருந்தது. அதன்மூலம் சமணத்தின் கேடுகள், தீமைகளை அறியவும் அதேநேரம் நற்சமயநெறி எது என்பதை உணரவும் மருணீக்கியாருக்கு முடியும் என்பது இறைவன் வகுத்த விதியாகும் என்பது அறிஞர்கள் முடிவு எம்பெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டே வினைகளின் பால் அழுந்தச்செய்து பரிசுத்தப்படுத்துகிறார் என்பதனை நாம் உணரும்படி சைவசித்தாந்தம் கூறுகிறது.

இவ்வாறான பின்புலத்தில் அங்கே திருவதிகைவீரட்டானத்தில் திலகவதியார் தன் சகோதரர் சைவத்திற்கு வரவேண்டும் அதற்கு எம்பெருமான் அருள்பாலிக்க வேண்டும் என்று வீரட்டானப் பெருமானை வேண்டுதல் செய்ய, பாடலிபுரத்தில் மருணீக்கியர் சூலைநோயால் அவதிப்படும் நிலைமை ஏற்படுகிறது. இது திலகவதியாரின் வேண்டுதல்களுக்கு வீரட்டானப்பெருமான் மனமிரங்கியதன் வெளிப்பாடாக உள்ளது. இதனை எம்பெருமான் திலகவதியாருக்கு சொப்பனத்தில் தெரிவித்தார்.

சூலைநோயின் தாக்கம் அளவிடமுடியாததாக, சொல்ல முடியாததாக, சமண மந்திரக்கிரியைகளால் கட்டுப்படுத்தப்பட முடியாததாக காணப்பட்டதால் மருணீக்கியர் வந்திணைவதற்கான இடமாகவும் நோய் தீரவேண்டிய இடமாகவும் திலகவதியாரின் இல்லமே காணப்பட்டதால், ஓர் இரவு நேரத்தில் அடுத்தவர் அறியாமல் நம்பிக்கைக்குரிய இருவரின் உதவியுடன் தன் சகோதரியின் இல்லம் சேர்ந்தார். அவர் சேரவேண்டிய இடத்தை - திருவதிகை வீரட்டானத்தை அடைந்தார் என்பதுதான் பொருத்தம். ஏனென்றால் திருவதிகை வீரட்டானம் மருணீக்கியர் வாழ்வில் பல புதுமைகளின் - சிறப்புக்களின் ஊற்றாக விளங்கப்போகின்றது என்பதை முற்றும் அறிபவர் தவிர்ந்த ஏனைய எவரும் அறிந்திலர் ஆயினும் திலகவதியார் எம்பெருமான் - திருவதிகை வீரட்டானப் பெருமானின் மீது கொண்ட மெய்யன்பு காரணமாக ஓரளவில் அறிந்திருந்தார்.

தமக்கையாரின் இல்லம் சேர்ந்த மருணீக்கியார் தன் தமக்கையாரை வீழ்ந்து வணங்கி எழுந்து சந்தோசம் பொங்க ஆனந்தக்கண்ணீர் மல்க நின்றார். திலகவதியாரும் தம்பியை மீளவும் தன் இல்லத்தில் கண்ட ஆனந்தத்தில் சிவபிரானை அவர் திருநாமங்களை ஜெபித்துவணங்கிய பின்னர் தனது விபூதிப்பையிலிருந்து விபூதியை எடுத்து பஞ்சாக்கர செபம் செய்துவிட்டு அதனை மருணீக்கியரிடம் நெற்றி, சிரசு மற்றும் உடல் முழுவதும் அணியுமாறு வழங்கினார். மருணீக்கியாரும் விபூதியை முறைப்படி அணிந்துகொண்டார். இதுவே மருணீக்கியாரை சைவத்தின்பாலப் பக்குவப்படுத்தும் உபதேசமானது. ஆட்களிருவர் தூக்கிவர தமக்கையார் இல்லம் அடைந்த மருணீக்கியார் எந்த உதவியுமின்றி தமக்கையாருடன் திருவீரட்டானத்துப் பெரியாரை வணங்கி உய்ய நடந்து செல்லும் பலத்தைப் பெற்றுக் கொள்ள திலகவதியார் வழங்கிய விபூதி உதவியது. திருவீரட்டானப் பெரியாரை அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி எழுந்தார். எம்பெருமான் அருளாட்சி மருணீக்கியார் மீது பரவியது அதனால் "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் தேவாரத்தை தன்னிலிருந்தப்படி பெருமான் அருளால் பாட ஆரம்பித்தார். பத்து தேவாரங்களை கொண்டது. இப்பதிகம். திருவீரட்டானைப் பெரியார் அருள் மருணீக்கியாரது அறியாமையை போக்கியதுடன், மருணீக்கியாரது மருளையும் நீக்கியது. அவர் பாடிய தேவாரத்தைக் கேட்டு ஆனந்தித்த எம்பெருமான் நாவுக்கரசு என்ற பெயரையும் அசரீரியாக வழங்கினார்.

அறிவுக்கடலை நீந்த முற்பட்ட மருணீக்கியார் முதலில் சமண சமயத்தின் ஆழத்தை தேட முற்பட்டு தருமசேனர் ஆனார். பின்னர் திலகவதியாரின் வேண்டுதலை ஏற்றுக்கொண்ட எம்பெருமானின் திருவுளப்பாடு "ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" என உருகும் திருநாவுக்கரசுவாக மாறச்செய்தது. அப்பர் பெருமானின் இக்கூற்று அவரிழைத்த தவறுகளின் வெளிப்பாடே.

தனது இளமைக்காலத்தின் பெரும்பகுதியை சமண சமயத்தில் கழித்துவிட்ட காரணத்தால் சிவம் பற்றியோ சிவப்பராக்கிரமம் பற்றியோ அறியாது அறியமுடியாதவாறு கனியிருக்க காய் கவர்ந்த கள்வனாகிவிட்ட காரணத்தால் இப்போது உண்மைப்பொருளை அறிந்து உய்வுற்ற காரணத்தினால, இனி மிகுதியாக இருக்கும் சொற்பகாலத்திலாவது எம்பெருமானை வணங்கி மகிழ வேண்டுமென்பதற்காக "இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" என்று அப்பர் பெருமான் பாடினார் போலும்.

திருவதிகை வீரட்டானத்தில் அப்பரின் அருட்பயணம் ஆரம்பித்ததுபோல அவரின் உழவராப் பணியும் ஆரம்பித்தது. திருவீதிகளைத் துப்பரவு செய்தும் நந்தவனங்களை துப்பரவு செய்து நீர்பாய்ச்சியும் தொண்டு செய்தபோது திலகவதியார் வீரட்டானப் பெருமானின் சந்நிதானத்தை திருவலகிட்டு, திருமெழுக்கிட்டு, பூமாலைகட்டி தொண்டாற்றிவந்தார். அச்சமயத்தில் அப்பர் பெருமான் சமணர்களிடமிருந்து சில கஷ்டங்களை எதிர்நோக்க ஆரம்பித்தார். அங்கு சமண அரசனுக்கு மறுமாற்றத்திருத்தாண்டகம் மூலம் சைவத்தில் தாம் புகுந்து அருள்பெற்று இன்பமனுபவிப்பதனையும் எம்பெருமான் ஆட்கொண்டதால் "யாம் ஆர்க்கும் குடியல்லோம்" என்பதனையும் அதனால் "துகிலுடுத்துப் பொன் பூண்டு வருவோர் சொல்லும் சொற்கேட்கக் கடவோம்" என்று அரச ஏவலாட்களிடம் கூறி பல்லவ அரசனுக்குச் செய்தி அனுப்புகிறார்.

சமணர்களால் ஏவப்பட்ட அனைத்து இடர்களையும் அப்பர் பெருமான் எம்பெருமான் அருளால் வெற்றி கொண்டார். சுண்ணாம்பு அறையில் பூட்டி வதைத்தனர், நஞ்சுகலந்த உணவை உட்கொள்ளுமாறு வழங்கினர், கல்லுடன் கட்டி கடலில் போட்டனர். கொல்லும் தன்மையுடைய யானையை அப்பர் பெருமானை உழக்கித் துவம்சம் செய்யென ஏவினர். அது அப்பரை வலம் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கியது. அவர் அஞ்சுவதுமில்லை அஞ்சப்போவது மில்லை என்று துதிக்கலுற்றார். இதனைக் கண்ட பல்லவ அரசனும் அப்பரை வீழ்ந்து வணங்கி சைவசமயத்தைத் தழுவினான். தனது சமணப்பள்ளிகளை சைவமடாலயங்கள் ஆக்கினான்.

அப்பர் சுவாமிகள் தாம் எம்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டமைபோல் சைவ அடியார்களும் ஆட்கொள்ளப்படவேண்டும் என்ற அவா கொண்டு தலயாத்திரை செய்து தேவாரம் பாடி மக்கள் உய்ய வழிகாட்டும் பணியையும் உழவாரப் பணியையும் தொடர்ந்தார்.

அப்பர் பெருமான் சமணத்திலிருந்து தாம் சிவப் பரம்பொருளை அறியாது காலம் கடத்தியதையும் சிவநிந்தனை செய்தமையையும் எண்ணி கண்ணீர் வடிப்பவராக காணப்பட்டார். சிவநிந்தனை செய்த சரீரத்துடன் சீவிப்பதை தான் விரும்பாது சைவச்சரீரத்துடன் சீவிக்க விரும்பி, தம் விருப்பத்தை திருப்பெண்ணாகடத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தூஞ்சானை மாடச்சுடர் கொழுந்திடம் விண்ணப்பம் செய்தார். அடியார்க்கு எளியாராகிய சிவபெருமான் அப்பரின் இருதோள்களிலும் சூலத்தையும் இடபத்தையும் பொறித்து அவர் சரீரத்தை தூய்மைப்படுத்தி அருளினார், இதன் மூலம் எனது மக்கள் தமது சைவசின்னங்களுடன் வாழ்வதே சிறப்பு என்பதனை உணர்த்த தலைப்பட்டுள்ளார் அப்பர்.

சைவம், சிவனுக்குகந்த தலமாக கைலாயத்தைக் கூறுகிறது. பக்குவம் அடைந்த ஆன்மாக்கள் மட்டும் அங்கு செல்லமுடியுமென சைவநூல்கள் கூறும் இத்தலத்தில் கோவில் கொண்டு உமையம்மையுடன் இடபாரூடராக எம்பெருமான் அருளாட்சி செய்யும் காட்சியை காண விரும்பிய அப்பர் சுவாமிகள் அங்கு யாத்திரை செய்தபோது பலவாறான துன்பங்களுக்கு முகம் கொடுத்தார். இதனைக் கண்டு எம்பெருமான் மனம் இரங்கினார். அதனால் இடைநடுவில் எம்பெருமான் அக்காட்சியை திருவையாற்றில் வழங்க சித்தம் கொண்டு "யாதும் சுவடுபடாமல் ஐயாறு" அடையச்செய்தார் அங்கு தனது கைலைக்காட்சியை காணவைத்து அப்பர் முன்பு "கண்டறியாதன கண்டேன்" என்று கூறவைத்தார். நாம் ஆண்டவனை நோக்கிச் செல்லும் போது அவர் எம்மை நோக்கி வருவார் என்பது புலப்படுத்தப்படுகிறது.

பின்னர் திருப்பாதிரிப்புலியூர் கோவிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்தார். அங்கு திருநாவுக்கரசருக்கு தாய், தந்தை, தமக்கையாகவும் மற்றும் அனைத்துமாகவும் இருப்பவர் தாமே என்பதனை நன்குணர வைத்தார் திருப்பாதிரிப்புலியூர் செழுநீர், புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணன்.

சம்பந்தப்பிள்ளையும் அப்பர் பெருமானும் ஒருவரை ஒருவர் சந்தித்தபோது சம்பந்தப்பிள்ளை நாவுக்கரசரை அப்பரே என்று விளித்துக்கொண்டார். இருவரும் சேர்ந்து பல கோவில்களுக்குச் சென்று தேவாரம் பாடி பின்னர் திருமறைக்காட்டை அடைந்து அங்கு திருவேதங்களாற் பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கவென தேவாரம் பாடும் படி திருஞானசம்பந்தர் அப்பரிடம் வேண்ட, அவர் "பண்ணின் நேர்மொழியாள் உமைபங்கரோ" என்ற முதலடியை உடைய தேவாரப் பதினொன்றினை பாட கதவு திறக்கக்கண்டு இருவருமாக சுவாமிதரிசனம் செய்து வழிபட்டனர். இங்கு ஓர் விடயம் சுட்டிக்காட்டப்படவேண்டியுள்ளது அதாவது எம்பெருமானால் "நாவுக்கரசு" என்று பெயர் சூட்டப்பட்ட திருநாவுக்கரசரது வாயில் இருந்து வரும் அமுதமொழிகளைக் கேட்டு ஆனந்திக்கவே பதினொராவது பாடல்வரைக்கும் கதவு திறக்கப்படாதிருந்தது என்று சைவசமய மெய்யடியார்கள் கூறுவர்.

சமணம் பரவியிருந்த காலத்தில் சமணர்கள் சைவக்கோயில்களில் நித்திய நைமித்தியங்களுக்கு தடையாக இருந்து கோவில்களை அழித்தும், அடைத்தும் ச்சைவர்களை துன்புறுத்திய நிகழ்வுகளும் இடம்பெற்றன. இவ்வாறு திருப்பழையாறை சேத்திரத்தின் கண் வடதளி சிவாலயம் சமணர்களால் மறைக்கப்பட்டுள்ள விடயத்தை அப்பர் பெருமான் அறிந்துகொண்டு அவ்வாலயத்திற்கு செல்லும் அவா கொண்டார். ஆலயத்திற்கு சமீபமான ஒரு இடத்தில் அமர்ந்து கோயில் திறக்கப்பட்டு தாம் தரிசனம் பண்ண இறைவன் திருவுள்ளம் கொள்ள வேண்டுமென்ற குறிக்கோளுடன் உணவு தவிர்த்து சிவத் தியான சீலராக அமர்ந்திருந்தார். சிவப்பரம்பொருள் அப்பரின் உள்ளக்கிடக்கையை அறிந்து அதனை சொப்பனத்தில் பல்லவ அரசனுக்குத் தெரிவித்தார். பல்லவ அரசன் கோவிலை திறந்து அப்பர் வழிபடவும் கோவிலின் நித்திய நைமித்தியங்கள் தொடரவும் வழி செய்தான். அப்பர் அமைதியாகச் செய்த இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தை வடதளி, திருப்பழையறை மக்களும் ஆதரித்தனர். இதனால் அப்பர் பெருமான் சத்தியாக்கிரகம் செய்த சைவப்புரட்சித் துறவியாக காட்சி தருகிறார். மன உறுதியும், சிவபக்தியும் வழிபாட்டில் ஈடுபாடும் உடையவர்கள் தாம் விரும்பும் விடயங்களில் நலமடைவர் என்பதற்கு அப்பர் பெருமான் உதாரண புருஷராக உள்ளதனை இப்பதிகம் ஒவ்வொரு சைவ சமயிக்கும் உணர்த்துவதாக உள்ளது. சமண அரசனும் இந்த சம்பவத்துடன் சைவ சமயியாக மாறினான். சமணப்பள்ளிகள் சைவத்திருக்கோயில்களாயின. அப்பர் சுவாமிகள் "தலையெலாம் பறிக்கும் சமண் என்ற தேவாரம் பாடிப்பரவி மகிழ்வெய்தினார் என்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறியுள்ளார்.

எம் அப்பர் பெருமான் ஆசைகளுக்கு அப்பாற்பட்டு நின்ற பெருங்கருணையாளர். உலகியல் சிந்தனைகளுக்கப்பால் நின்ற ஆன்மீகவாதியாக தன்னைக் காட்டிக்கொண்டார் மட்டுமல்ல தனது எண்பத்தேராராம் வயதுவரை தான் அவ்வாறான மனிதர்தான் என்பதையும் காட்டிக்கொண்டார். இது எம்பெருமான் திருவருட்கடாட்சத்தின் பாற்பட்டது அல்லது இறைசித்தம் என்று கூட கூறலாம். ஏனென்றால் அப்பர் பெருமானின் தூய மனத்தினை சர்வ உலகத்தவர்களுக்கும் காண்பிக்கச் செய்த திருவிளையாடல் என்று இதனை பெரியபுராணம் கூறும். திருப்புகலூரிலே உழவாரப்பணி செய்த அப்பர் பெருமானின் உழவாரம். பொன், வைரம் மணி போன்றவற்றை அவர் கண்களில் தெரியும்படி செய்தபோதும் அதை தனது கையால் கூடத் தொடாத தன் உழவாரத்தின் உதவியுடன் எடுத்து திருக்குளத்துள் வீசிக்கொண்டார். தேவ கன்னியர்கள் அப்பரை காமவசப்படுத்த முயன்றபோது அவர் "தேவர்கள் தலைவனான இந்திரன் வணங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர்ப் பெருமானே எனக்கும் கடவுள் அதனால் மாயை வசப்படேன். மாயை வசப்படும் சிவ வசப்படாதவர் விடயத்தில்தான் உங்களுக்கு வெற்றி என்னிடம் நீங்கள் வெற்றி பெற இயலாது" என்று அறிவித்துக்கொண்டார். இவ்வறிவிப்பின் மூலம் சிவவசப்பட்டோர் காமவசப்படார் என்பது முடிந்த முடிவு என்பது வெளிப்படுகிறது.

திருப்புகலூர் பெருமானாரை தரிசனம் பண்ணி தேவாரம் பாடியதுடன் திருவதிகை வீரட்டானத்தில் அப்பர் பெருமான் "கூற்றாயினவாறு" என்று ஆரம்பித்த அருட்பயணம் நிறைவடைகிறது. திருப்புகலூர் பெருமானிடம் "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ" என்று தொடங்கும் திருத்தாண்டகம் பாடி உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே என்று பாடி பரமன் திருவடியை அடைந்தார். அப்பர் பெருமான் கூற்றாயினவாறு என்று ஆரம்பித்த திருக்கோவில்க் கட்டடத்தின் கோபுரக்கலசமாக "எண்ணுகேன் என சொல்லி எண்ணுகேனோ" என்ற திருத்தாண்டகம் அமைந்துள்ளது. இத்திருத்தாண்டகம் சிவானுபவத்தை உணரச் செய்யும் மகிமை மிக்கது.

உலகியல் வேறு, அருளியல் வேறு, உடலியல் வேறு ஆன்மீக இயல் வேறு என்றே உலக மாந்தர் கருதினர். அதனால் இறைவனை காண்பதரிது என்று கலங்கி நின்ற மாந்தர்களுக்குக் கலங்கரை விளக்கமாக அப்பர் பெருமான் விளங்கி அனைத்தும் ஒன்றே என அழுத்தம் திருத்தமாகக் கூறி செயலிலும் காட்டி வாழ்ந்த தவமுனிவர் அவர். அவர் ஓர் அருளாளர் என்று இல்லாதநிலையிலும் ஆண்டவனின் எண்குணத்தன்மையை மக்கள் உணரும்படி காட்டினார்.

சிவபிரானால் நாவுக்கரசுவாக நாமகரணம் செய்யப்பட்ட மருணீக்கியாரை வாகீசனாக கண்டு அவர் பாடலில் மகிழ்ந்தார் எம்பெருமான் மேலும் அவர் பாடலைக் கேட்க ஆசைப்பட்டே சத்தி முற்றத்தில் வழங்க வேண்டிய திருவடிதீட்சையை திருவெண்ணை நல்லூரில் வழங்கி அவர் பாடலில் மகிழ்ந்தார். "நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்" என்னும் திருத்தாண்டகத்தினை பாடிப்பரவி பணிந்து அப்பர் பெருமான் மகிழ்ந்தார். அதனால் அக்காலத்தில் அப்பர் பெருமானின் தோத்திரங்களே தேவாரம் என்ற பகுப்பினுள் அடக்கப்பட்டன. தேவாரம் என்பது தேவனுக்கு ஆரம் போன்றது. ஏனையவை திருக்கடைக்காப்பு என்றும் திருப்பாட்டு என்றும் வழங்கப்பட்டன. இதனால்தான் அவரது தேவாரங்களில் அவரால் எடுத்தாளப்பட்ட சொற்தொடர்களும் பாடல்வரிகளும் அவற்றை பாராயணம் பண்ணும் அடியார் உள்ளத்தையே புனிதமாக்கும் தன்மையுடன் காணப்படுவதாக பேராசிரியர் சோ. சத்தியசீலன் கூறுகிறார்.

1). "நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்"
2) "தலையே நீ வணங்காய், கண்காள் காண்மிங்களே, வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய்"
3) "நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே"
"நல்லகவிளக்கது நமச்சிவாயவே" "நன்னெறியாவது நமச்சிவாயவே" "நற்றுணையாவதுநமச்சவாயவே"
4) "இரப்பார்க்கு ஈயவைத்தார், ஈய்ப்பவர்க்கு அருளும் வைத்தார், காப்பவர் தங்கட்கெல்லாம் கருநாகங்கள் வைத்தார்"
5) "துகிலுடுத்த பொன்பூண்டுவருவோர் சொல்லும் சொற்கேட்கக் கடவாமே"
6) "என் கடன் பணி செய்துகிடப்பதே"
7) பேசாத நாளெல்லாம் பிறவா நாளே, போற்றாதே ஆற்றைநாள் போக்கினேனே" இப்படியாக அவர் தேவாரத்திலுள்ள சொற்றொடர்கள் நம்மை நெறிப்படுத்தி உயர்த்தும் தெய்வீக ஆற்றலைப் பெற்றவையாக விளங்குகின்றன

நாவுக்கரசர் பாடல்கள் ஊனை உருக்கவல்லன பேதமையை நீக்கவல்லன. அவர் பாடல்கள் அவர் நாமம் பரகதி தரவல்லன. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அப்பரின் நாமத்தின் பெருமைபற்றிக் கூறும்போது "அப்பூதியடிகள் தவம் செய்யவில்லை, புண்ணியதீர்த்தங்களில் மூழ்கவில்லை நெருப்பில் நின்று யோகம் புரியவில்லை. திருநாவுக்கரசு பெருமானின் பெயரைச் சொல்லியும் எழுதியுமே சிவபதமடைந்தார்" என்பதை நாம் உணர்வோமானால் நாமும் அப்பர் பெருமானின் நாமம் பாடி நம் உள்ளத்திலும் நாம் ஒரு தெய்வீகப் பரவச நிலையை தோற்றுவிக்கலாம் என்றார்.

அப்பர் பெருமானின் சிறப்புக்களை வள்ளல் இராமலிங்கம் அடிகள், உளமினிக்க நா இனிக்க வாய் இனிக்க உயிர்க்கு உயிரும் தான் இனிக்க கூறுவதை அவதானித்து நாம் ஒழுகுவோமாயின் நம்முடைய சிந்தை எல்லாம் அம்பலத்தாடுவானை மறந்து அப்பர் அடிகளையே சிந்திக்க தொடங்கிவிடுமென்றார்.

1. "சைவ ஒளி விளங்க நாவரசு என்று ஓர் பேர்பெற்றுப் பொருத்தமுற உழவாரப்படை கொண்ட உத்தமனே"
2. "சிவநெறியை விளங்க ஓங்கும் சோதி மணிவிளக்கே"
3. "நான்முகனும் விரும்பும் ஞானநாயகனே"
4. "பாவமெல்லாம் அகற்றி அருட்பான்மை நல்கும் பண்புடைப் பெருமானே"
5. "பதி மலர்த்தாள் நிழலடைந்த தவத்தோர்க்கெல்லாம் பதியே"
6. "தோந்த உள்ளத்திடை மிகவும் தித்தித்து ஊறும் செழுந்தேனே"
7. "கூர்த்த மதி நிறைவே என் குருவே எங்கள் குலதெய்வமே" என்பனவே அவை.

மேற்சொல்லப்பட்ட ஞானப்புகழ் மொழிகளை நினைத்தாலும் படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் நம்முடைய மனமெல்லாம் ஞானத்தவமுனிவர் அப்பர் பெருமான் அடிகளை தஞ்சமென்றடையும். எனவே வாகீசர் வாய்மொழியினை நாமும் அனுதினமும் பாராயணம் பண்ணி இறைவனை வாழ்த்தி வழுத்தி இகபரசுகங்களைப் பெறுவோமாக.


இக்கட்டுரை ஆக்கத்திற்குப் பயன்பட்ட நூல்கள்:
1. பெரியபுராணம் - நாவுக்கரசர் புராணம்
2. பெரியபுராணம் வசனம் - ஆறுமுகநாவலர்
3. நால்வர் நன்னெறி - லண்டன் சைவமுன்னேற்றச்சங்கம் 2003
4. திருமுறை தந்த பெருமக்கள் - சிங்கப்பூர் 2005
5. மூவர் அற்புதத்திருப்பதிகங்கள் - விளக்க உரையுடன் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் மணிவாசகர் மடாலய அன்னதானசபை வெளியீடு - 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சைவநெறி' பாடத்திட்டமும் மாணவர்களும்

**மா. கணபதிப்பிள்ளை**
பிரதி அதிபர். றோயல் கல்லூரி, கொழும்பு -07.

இலங்கை அரசபாடசாலைகளில் கற்பிப்பதற்கென்று தரம் ஒன்றில் இருந்து தரம் பதினொன்று வரையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கென அவரவர் பின்பற்றும் சமயங்கள் தொடர்பான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் வாரத்தில் இரண்டு பாட இடைவெளியில் (மொத்தம் ஒரு மணித்தியாலம் 20 நிமிடநேரம்) சமயபாடம் கற்பிக்கப்படுகின்றது. இப் பாடமானது கட்டாய பாடங்களில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இப் பாட அடைவிலுள்ள தாக்கங்கள் பற்றி எந்தவொரு ஆய்வும் செய்யப்படவில்லை. இதனால் சமயபாடம் என்பது பற்றி அதிபர்களோ அல்லது கல்வித்திணைக்களமோ எந்தவித அக்கறையும் காட்டுவதாகவும் இல்லை. இதில் உள்ள நன்மை தீமைகளை ஆராயவே இக்கட்டுரை எழுதப்படுகின்றது. என்பதுடன், இக் கட்டுரை மூளைக்கிளர்ச்சியை ஏற்படுத்தினால் அதன் பலாபலன்கள் எதிர்காலச் சந்ததிக்குப் பிரயோசனமாக அமையலாம் என்ற ஆதங்கமுமேயாகும்.

சமய பாடம் வகுப்பறைகளில் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தவர்கள் அப் பாடத்தின் ஊடாக மனித விழுமியம். நியமங்கள், ஒழுக்கசீலக்கருத்துக்கள், மரபுகள், சம்பிரதாயங்கள், பண்பாடு, நாகரிகம் என்ற கலாசார இயல்களை இளம் வயதிலேயே எமது குழந்தைகள் ஆசாரத்துடன் கற்க வேண்டும் என்று எண்ணினார்கள். அது மட்டுமல்லாமல் நாயன்மார்களின் தேவாரங்கள், சமய பெரியார்களின் ஆசாரக்கருத்துக்கள், திருத்தல வரலாறுகள் பற்றிய அறநெறி வழிநிற்கக்கூடிய ஆத்மீகச் சிந்தனைகளை அழகிய மொழிநடையில் இள்ம் உள்ளங்களில் பதியவைத்தால் அதனால் தமிழ்மொழியும், சைவசமயக்கருத்துக்களும் பிரிக்கமுடியாது பின்னிப்பிணைந்தவையாய் அமையும். எனவே எமது தாய் மொழியும், எம் மூதாதையர்கள் பேணிப் பாதுகாத்த மதக் கருத்துக்களும், பிள்ளைகளின் மனங்களில் ஆழப்பதிவதால் ஆளுமையுள்ள குழந்தைகளை குறிப்பாக ஆறுமுகநாவலர்களை, விவேகானந்தர்களை, விபுலானந்தர்களை ஆக்கிவிடலாம் என்றே எண்ணினார்கள். அந்த இலக்கு இன்று நம்மால் அடையப்பட்டதா? "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது எமது முதுமொழி. சின்னஞ்சிறிய குழந்தைகளின் "நா"விலே எம் மொழிச் சொற்களை உச்சரிக்கும் ஆற்றலை வளர்க்கும் திறன் எமது தேவார, திருவாசகங்களுக்கு உண்டு. கருத்தை விளங்குகின்றார்களோ இல்லையோ "அறம் செயவிரும்பு" "ஆறுவது சினம்" என்ற தொடர்புகளை மிக முறையாகச் சொல்லும் திறனை இளம் வயதில் பெற்றுக் கொள்கின்றார்கள். வளர வளர அறம், சினம் என்ற சொற்களின் கருத்துக்களைப் புரிந்து நடப்பர். எனவே "நா" வை நலம்பட உச்சரிக்கும் திறனைப் பெறவும், நாம் கற்றவற்றில் நிற்கவும் எமக்கு எம் சமயக் கருத்துக்கள் பெரும் துணைபுரியும் என்று நம்பினார்கள்.

பாடசாலைகள் என்பவை தனியே கற்றல் கற்பித்தல் நிகழும் இடம் மாத்திரமல்ல. மாறாக பண்பாட்டையும், நாகரீகத்தையும் பரப்பும் கலாசாரத்தாபனங்கள். அது மட்டுமல்லாமல் அவை ஆறுமணிநேரம் குழந்தை மடுவங்களாகவும் செயற்படுகின்றன. ஆசிரியர்களே செவிலித்தாய்மார்களாக அங்கு கடமைபுரிகின்றனர். தம் கற்பித்தல் உத்திகளாலும், நடத்தைகளாலும் மாணவர் மனங்களில் மாதிரி (Model) மனிதர்களாக அவர்கள் இடம் பெற்று விடுகின்றனர். எந்தவித ஆசாபாசங்களுமற்று வெள்ளை உள்ளத்துடன் பாடசாலைக்கு வரும் நல்லுள்ளங்களை நல்லவராக்குவதம், தீயவராக்குவதும் பாடசாலைகளின் நடத்தையிலும் தங்கியுள்ளது. மகாத்மாகாந்தியின் கல்விச் சிந்தனையில் அவர் குறிப்பிடும் போது ஆசிரியர்களே மாணவர்களின் "மாதிரிகள்" என்று குறிப்பிட்டுள்ளார். சிற்பிகள் சீர் செய்யப்படாத களிமண்ணைச் சிற்பங்களாக்கித் தருவது போல பாடசாலைகள் குழந்தைகளை ஆளுமை உள்ள குழந்தைகளாக்கித் தரும் அற்புத நிறுவனங்கள். அந்தப்பணியைப் பாடசாலைகளில் செய்யும் பாடம் சமயபாடம் மட்டுமேயாகும்.

மேற்படி எண்ணக்கருத்துக்களைச் சரியாக விளங்கிக் கொண்டு இன்றைய கல்வியியலாளர்கள் செயற்படுகின்றார்களா? என்றால் "இல்லை" என்றே குறிப்பிடலாம். படசாலை அதிபர்கள் யாராவது ஒரு ஆசிரியருக்கு இந்த இரண்டு பாடங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுவிட்டால் போதுமென்று நினைக்கிறார்கள். அதற்கான தகுதி கற்பிக்கும் ஆற்றல் அவர்களிடம் உள்ளதா? என்பதை அவதானிப்பதில்லை. அதனால் பல இடங்களில் சைவ நெறியை மாற்று மதத்தவர்கள் கூட கற்பிக்கின்றனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனால் "எங்கட அல்லா தான் உங்கிட சிவபெருமான்" என்று படிப்பிக்கும் நிலையில் எமது சமய பாடக்கற்பித்தல் அமைந்துள்ளது என்ற தேவனை மிக்க தகவல்கள் காணப்படுகின்றன.

தேசிய கல்வி நிறுவகம் பாடத்திட்டம் வரையும் பணியில் ஈடுபடுகின்றது. இப்பணியில் ஈடுபடும் போது பொறுப்பாக ஈடுபடுதல் வேண்டும். சமய பாடத்தின் அத்தியாவசியம் எதுவாகக் காணப்பட்டது என்பதை உணர்ந்து மாணவர்களின் தேர்ச்சி மட்டத்துக்குப் பொருந்தக் கூடிய வகையில் பாடங்கள் திட்டம் இடப்படல் வேண்டும். ஆனால் இப்பணியும் செவ்வையாக இடம் பெறவில்லை என்ற கண்டனம் காணப்படுகிறது.

நூல்களை எழுதும் பணியை ஆற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் மிகக் கவனமாக பாடத்திட்டத்திற்கு ஏற்புடைய வகையில் மாணவர் தேர்ச்சிக்குப் பொருந்தக்கூடிய கருத்துக்களையும், மொழிநடையையும் கையாண்டு நூல்களை ஆக்கித்தருதல் வேண்டும். மாறாக எனக்குத் தெரிந்தவரின் நூல்கள், என்னூர் கோவில் என்று முக்கியத்துவம் கொடுக்கும் போது எமது தொன்மையான சமயத்தின் இயல்பை இழந்தவர்களாக நாம் மாறிவிடுவோம். தனிமனித ஆசாபாசங்களுக்கு இடம் தராது, எமது சமயம் மூத்த சமயம் என்பதை மனத்திடைக் கொண்டு அதன் கருத்துக்களை மாணவரின் மத்தியில் ஆணித்தரமாகப் புகுத்திவிட்டால் அவர்கள் தங்களை தாங்கள் யார் என்று புரிந்து கொள்ளவும், தம் மதத்தின் தொன்மையையும், சிறப்பையும் விளங்கிக் கொள்வதால் மதமாற்றக் கருத்துக்களில் நாட்டம் காட்டா இயல்பையும் கொண்டிருப்பார்கள்.

"நாமார்க்கும் குடியல்லோம்" என்று வாழ்ந்த நாம் "அஞ்சத்தக்கது எதுவும் இல்லை அஞ்சுவதும் இல்லை" என்று சொல்லித்தந்த நாவுக்கரசர்களின் பொன்மொழிகள் துணையிருக்க இன்று அஞ்சி அஞ்சிச் சாகிறோமே ஏன், நெஞ்சில் உறுதியும் நேர்மைத்திறன் படைத்தோரையும் நாம் ஆக்கத் தவறிவிட்டோம். சமய பாடங்கள் முறையாக எம்மை எமக்கு நாமாகக் காட்டத் தவறிவிட்டது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கொழும்பு நகரப் பிள்ளைகளில் பெரும்பாலானோர் சித்தியடையாத அல்லது சாதாரண சித்தி பெறும் பாடம் சமய பாடமாகவே காணப்படுகின்றது. ஏனைய கவனக் கலைப்பான்களில் மனம் ஈர்க்கப்படுவதால் மனிதனை மனிதனாக்கும் எம் சைவநெறி அவர்களிடம் சீராகச் செல்லவில்லை. அதன் அடையாளங்களாக அல்லது சுட்டிகளாக எஞ்சி நிற்பவை "முதியோர் இல்லங்களும்" "குழந்தை மடுவங்களும்" மட்டுமேதான். அன்பைத் தொலைத்துவிட்டோம். "அன்பே சிவம்" என்ற அந்த வாசகத்தின் கருத்தை மறந்துவிட்டோம். அதன் விளைவு பாரிய தாக்கமாகப் பிரதிபலிக்கின்றது.

சமய பாடங்கள் படிப்பிக்காத நாடுகளான யப்பான், இந்தியா போன்ற நாடுகளில் சமய பாடங்கள் படிப்பிக்கும் பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் உள்ள சமூக, பொருளாதார. அரசியல் பிரச்சினைகள் காணப்படவில்லை என்று குறிப்பிடுகின்றார்கள். அப்படியானால் நாம் சமய பாடங்களின் குறிக்கோள்களை மாணவர்களிடம் செவ்வையாக கொண்டு செல்லவில்லை என்றே அர்த்தமாகும். இந்துசமயம் அல்லது சைவ சமயம் அல்லது சைவநெறி என்று பாடத்தின் பெயரை மாத்தினோமே தவிர அதன் உள்ளடக்கத்தை அல்லது உள்ளார்ந்த தாக்கங்களை நாம் பரிசீலிக்கவில்லை. சமய அறிவு அடைவு தந்திருக்க வேண்டிய சமூக விழுமியங்களை நாம் இழந்திருக்கின்றோம் என்றால் அது அந்தப் பாட அடைவுக்குக் கிடைத்த தோல்வி என்பதைச் சுட்டிக்காட்டத்தவறி விட்டோம்.

எனவே எமது சமய பாடத்திட்டத்தைச் சீர்செய்து மாணவர்களின் ஆத்மீகத் தேடலுக்கான நூல்களைத் தந்து அவர்களை மானிடத்தோடு சேரத்தக்க பிள்ளைகளாக்க வேண்டிய தேவை உடனடியாகச் செய்ய வேண்டும். இதற்கு பொறுப்பு வாய்ந்த எமது இந்து நிறுவனங்கள் சரியான புள்ளி விபரங்களைத் திரட்டி பாடசாலை மாணவர்களைச் செவ்வைப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. சமூக நிறுவனங்களும், பாடசாலைகளும் இணையும் போது தான் நாளைய சந்ததியை நலமுள்ளவர்களாக, பலமுள்ளவர்களாக, ஆளுமையுள்ளவர்களாக ஆக்க முடியும். எனவே இப்பணியே இறைபணியாய் எண்ணி எல்லோரும் செயற்படுங்கள் என வேண்டுகின்றேன்.

***இரவு நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பலவற்றை நீ காண்கின்றாய். ஆனால் சூரியன் உதிக்கும் பொழுது நீ அவற்றைக் காண்பதில்லை. ஆகையினாலே பகற் பொழுதிலே வானத்திலே நட்சத்திரங்களே இல்லையென நீ சொல்லிடலாகுமா? மானுடா, உன்னிடம் அஞ்ஞானம் இருக்கின்ற நாளிலே நீ இறைவனைக் காணமுடியாத காரணத்தால் இறைவனே இல்லை என்று பகராதே.***

- ஸ்ரீ ராம கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிராமி அந்தாதி

A. இராஜரட்ணம்
ஓய்வு பெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம்

ஆன்மா தான் முன்பு செய்த நல்வினை தீவினை காரணமாக இந்த உடலை எடுக்கிறது. ஆன்மா உடம்பால் வினையையும் வினையால் உடம்பையும் மாறிமாறி எடுத்துப் பிறந்திறந்து உழலும் உயிர்கள் இறைவனைப் பற்றிநிற்கும் பொழுது இருவினைப் பற்றும் மயக்கமும் நீங்கி மெய்யுணர்வு பெற்று இறைவனுடைய திருவடிகளை யடைந்து பேரின்ப வாழ்வில் நிலை பெற்றிருக்கும். இதனை,

- “விதிகாணும் உடம்பை விடா வினையேன் கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்” என அருணகிரியாரும்.
- “இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு” என வள்ளுவரும் கூறியுள்ளார்.

இருவினையென்பது

1. நல்வினையும், தீவினையும் பிறப்பிற்கேதுவாம், நல்வினை பொன்விலங்கு தீவினை இரும்புவிலங்கு
2. பிறவான் இறவானாகிய பெம்மான் புகழ்பாடுவாரும் புணையாகிய சேவடியை உள்ளக்கமலத்தில் நிறுத்திப் போற்றுவாரும் இருவினையறுத்து பேரின்பப் பெருவாழ்வடைவார்.
3. இதற்காகவே இறைவன் சித்தர் முனிவர்களை காலத்துக்காலம் தென்னாடு அனுப்பி நமக்கும் “ “அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அரச்சனைபாட்டே ஆகும்.

ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடு” என்று பத்திப்பாடல்களைப் பாடச் செய்தது ஆன்மாக்கள் இருவினை நீங்கி அவன் திருவடிப்பேறு அடைவதற்கே.

“பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம்” என்றார் வாசகரும் அதேபோல அபிராமி மீது பாடப்பெற்ற பக்திமாலையாம் “அபிராமி அந்தாதியை” இறைவன் தென்னாடுவளம் பெறத் தந்தருளிய திருவிளையாடலைச் சிந்திப்பாம்.

சோழ நாட்டில் காவிரி ஆற்றின் தென்கரை உள்ள தேவாரம் பெற்ற திருத்தலங்களில் ஒன்று “திருக்கடவூர்” ‘‘மூர்த்தி தலம் தீர்த்தம்” எனும் மூவகைச் சிறப்பினையுடையது. சிவபெருமான் வீரத்திருவிளையாடல் புரிந்த அட்ட வீரத்தலங்களுள் ஒன்று, மார்க்கண்டேய முனிவருக்காக மறலியை உதைந்தருளிய சிறப்புடைய தலம் அமுதம் கிடைக்கும் படி அருள் புரிந்த தலமும் இதுவே.

இவ்வூரில் இற்றைக்கு கிட்டத்தட்ட 300 ஆண்டுகட்கு முன்பு அமிர்தலிங்கம் ஐயா என்பவரின் புதல்வராகப் பிறந்தவர் அபிராமிபட்டர். இவருடைய இயற்பெயர் சுப்பிரமணியன் என்பது சங்கீத பயிற்சியும் தேவி உபாசனையும் இளமையிலே உள்ளவராதலால் ஸ்ரீ அபிராமியை அன்புடன் வழிபட்டுவந்தார். தமிழிலும் வடமொழியிலும் கற்றுத்தேர்ந்தவா. அபிராமி அம்மை மீது இராகமாலிகையில் ஒரு கீர்த்தனை பாடியதோடு பல பக்திப்பாடல்களும் அம்பாள் மீது பாடிவந்தார்.

உபாசனையில் சிறந்த அவர் சரிகை கிரியை என்னும் இரண்டையும் கடந்து யோகநிலையில் அம்பாளின் திருக்கோலத்தை ஆதாரபீடத்தில் கண்டு அம்பாளின் திருவருளின்பத்தில் திளைத்துப் பித்தரைப்போல உலாவினார். - அவருடைய அநுபவ நிலையை உணராத சிலர் இவர் ஏதோ தேவதையை உபாசித்து அந்தணருக்கு மாறுபாடான ஆசாரங்களை மேற்கொண்டு பித்துப்பிடித்து அலைகின்றார் என்று ஏசத்தொடங்கினார்கள். தஞ்சையில் இருந்து அரசுபுரிந்த மகாராஷ்டிர மன்னராகிய சரபோகி அரசர் தை மாத அமாவாசைத் தினத்தன்று காவிரிப்பூம்பட்டிணம் சென்று புகார் முகத்தில் நீராடி திரும்பியவர் இடையில் திருக்கடவூரில் தங்கித்திருக்கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்த பொழுது அபிராமியின் சந்நிதியில் வழக்கம்போல யோகநிலையில் இருந்த அபிராமிப்பட்டரின் தோற்றத்தைக் கண்டு அதிசயித்த அரசன் “இவர்யார்” என்று அருகில் உள்ளவர்களை விசாரித்த பொழுது அவர்கள் ‘இவர் ஒரு பித்தர் ஒரு தேவதையை வழிபடுகின்றவர்’ என்று சொன்னார்கள். அதுகேட்ட மன்னன் அபிராமி பட்டருடன் பேச எண்ணி ‘இன்று அமாவாசை உண்டா? எவ்வளவு நாளிகை இருக்கிறது’ என்று கேட்டார். சந்திரமண்டலத்து அமுதமயமாய் வீற்றிருக்கும் அம்பிகையைத் தம்முள்ளே தரிசித்து அங்கே சூழுஞ்சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்ற திருக்கோலத்தில் இன்புற்றிருந்த பட்டர் மன்னருடைய வார்த்தையை அரை குறையாகக் கேட்டு விழித்துக்கொண்டு ‘இன்று பௌர்ணமி’ என்று சொன்னார். அருகில் நின்றவர்கள் அதிசயத்தனா. இவரைப்பற்றி தாங்கள் கூறிய கருத்தை மன்னர் நேரே உணர்ந்துள்ளார் என மகிழ்ச்சியடைந்தனர். மற்றவர் இவரைப்பற்றி கூறிய வார்த்தை உண்மையென்று எண்ணிய அரசனும் பட்டரை மதியாமல் போய் விட்டார்.

அபிராமிப்பட்டர் உலக உணர்ச்சி பெற்று சகநிலைக்கு வந்த பொழுது தவறாகப் பௌர்ணமி என்று அரசனுக்கு சொல்லியதை எண்ணிவருத்தமுற்றார் அவ்வெண்ணம் தோன்றியதும் இறையருளால் அபிராமி அந்தாதியின் தோற்றம் கருவாகியது. தம்மையாட்கொண்ட அபிராமியே இந்தப் பிழையில் நின்றும் காப்பாற்றவேண்டும் என்று எண்ணித் திருக்கோவில் சென்று ஒரு வகை அரிகண்டம் பாடத்தொடங்கினார். அம்பிகையின் சந்நிதியில் ஒரு குழிவெட்டி அதில் அக்கினியை மூட்டி அதற்கு மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விட்டத்திலிருந்து நூறு கயிறுகளால் ஆகிய ஓர் உறியைத் தொங்கவிட்டார். பின்பு அதன் மேல் ஏறியிருந்து அம்பிகை எனக்குக் காட்சி தந்து எனது பழியை மாற்றாதுவிடின் இந்த அக்கினியில் வீழ்ந்து உயிர் மாய்ப்பேன் என்று சங்கற்பம் செய்து கொண்டு "உதிக்கின்ற" என்று ஆரம்பித்து இவ்வந்தாதியைப் பாடலானார்.

அம்பிகையின் திருவருளை நுகர்ந்தவர் ஆதலால் அவளை அர்ச்சித்துப் பூசிக்கும் அவள் உருவத்திருமேனியை கண்டு களித்தல் தொடங்கி உள்ளே வெளியாகித் தன்னைமறந்து கருவி கரணம் கழன்று நிற்கும் ஆனந்த அனுபவம் வரையிலுள்ள நிலைகளையெல்லாம் உணர்ந்து பாராட்டுகின்றார். வேத நெறியில் ஒழுகும் குடும்பத்திற் பிறந்த இவர் வேதாகமங்களிலும் லலிதா ஸ்ஹஸ்ரநாமம் முதலிய தேவிகளின் நூல்களிலும் உள்ள செய்திகளையும் அம்பிகையின் திருநாமங்களையும் போற்றிப் பாடுகின்றார்.

*'வினையேன் தொடுத்த சொல் அவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே.....'*
*நாயகி நான்முகி நாராயிணி.......'*
*'சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரெலாம் வந்தரி.....'*

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அம்பிகையின் திருக்காட்சிபெறாமையால் உறியில் ஒவ்வொரு கயிறும் அரிந்து கொண்டுவந்தார்.

*விழிக்கே அருளுன் டபிராமி*
*வல்லிக்கு வேதம் சொன்ன*
*வழிக்கே வழிபட நெஞ்சுண்*
*டெமக்கவ் வழிகிடக்கப்*
*பழிக்கே சுழன்று வெம்பாவங்க*
*ளேசெய்து பாழ்நரகக்*
*குழிக்கே அழுந்தும் கயவர்தம்*
*மோடென்ன கூட்டினியே.*

என்ற 79வது பாடல் முடிந்த பொழுது மாலைக்காலம் வந்து விட்டது. அப்பொழுது அபிராமி அம்மை அவருக்கு காட்சி கொடுத்து தனது திருத்தோட்டில் ஒன்றைக் கழற்றி வான்மண்டலத்தில் வீச அது சென்று சந்திரன் போல சுடர் விடலாயிற்று அம்பிகை பட்டரை நோக்கி 'அன்ப மன்னனிடம் கூறிய சொல் மெய்யாகும்படி செய்தோம் இந்தப் பிரபந்தத்தை நீ நிறைவேற்றுவாயாக. இதைப் பாராயணம் செய்வோர் நமது அருள் அடைவர் என்று கூறி மறைந்தருளினார். அம்பிகையின் திருக்காட்சியாலும் அவள் அருளிச் செய்த இன் மொழியாலும் தம்மை மறந்து பேரின்பவாரியில் ஆழ்ந்து பட்டர் அந்த ஆனந்தாதிசயத்தை 'கூட்டியவா என்னைத்தன் அடியாரில்' என்றபாட்டை

*கூட்டியவா என்னைத்தன் அடி*
*யாரில் கொடியவினை*
*ஓட்டியவா என்கண் ஓடிய*
*வாதன்னை உள்ளவண்ணம்*
*காட்டிய வாகண்ட கண்ணும்*
*மனமும் களிக்கின்றவா*
*ஆட்டிய வாநடம் ஆடகத்*
*தாமரை ஆரணங்கே* எனப் பாடியுள்ளார்

இதுவே இந்நிகழ்ச்சிக்கு முக்கியசான்றாக உள்ளது.

அந்த இரவில் இதனைக்கண்டு சரபோகி அரசரும் பிறரும் அமாவாசைக்கடுத்த பிரதமையாகிய இன்று பூரண சந்திரன் உதயமாகியிற்றே 'அற்புதம் அற்புதம்' என்று வியப்புற்றனர் இது அம்பிகையின் திருவிளையாடல, தன் அடியார் வார்த்தையை மெய்ப்பிற்கும் பொருட்டு இயற்றிய அதிசயம் எனத்தெரிந்தார். பின் மன்னரும் பிறரும் பட்டரை. அணுகி அடிவீழ்ந்து பணிந்து "தாங்கள் செய்த குற்றத்தை பொறுக்கவேண்டும்" என்று பிராத்தித்தனர். அம்பிகையின் திருவருளை நினைத்து வியர்ந்த பட்டர் 'நன்றே வருகினும் தீதே விளைகினும் அவளே பரம், அவள் திருவருள் என்று கூறினார். அப்போது அரசன் அவரை வணங்கி அவருககு சில விளைநிலங்களை மானியமாக அளிக்க எண்ணி தன்கருத்தை கூற, பட்டர் அதற்கு இணங்கவில்லை. தங்கள் சந்ததியாரின் நன்மைக்காக ஒன்றை ஏற்கும் படி அரசன் வற்புறுத்தியதற்காக இணங்கினார். அரசன் அக்கிராமத்திலும் அயற்கிராமத்திலும் வருடம் ஒன்றுக்கு வேலிக்கு 8 நாழிகை நெல் அவருடைய சந்ததிக்கு அளிக்கும்படி சுரோத்திரிய உரிமை அளித்துச் சாசனமும் செய்து கொடுத்தார். மன்னன் அளித்த செப்பு பட்டயம் இன்னும் இருக்கிறது.

இந்தப்பரம்பரையில் வந்த ஒருவர் இன்றும் சில இடங்களில் மட்டும் நெற்பெற்று திருக்கடவூர் அபிராமி அம்மைக்கு நவராத்திரி ஒன்பது நாளும் சிறப்பான பூசை நடத்திவருகிறார். அரசன் அவருக்கு அபிராமிப்பட்டர் என்ற திருநாமமும் தங்கள் பரம்பரைக்கு பாரதியார் என்ற பட்டமும் வழங்க என்று கூறினார். இவ்வரலாற்றின் உண்மையாதாயினும் அரசர் முதலில் அபிராமி பட்டரின் பெருமையை உணராமல் அசட்டையாக இருந்தார். என்றும் பின்பு அவர் உண்மை உணர்ந்து கொள்ளும் வண்ணம் அந் நிகழ்ச்சி நடைபெற்றது அம்பாள் திருவருளே.

இவ்விடத்தில் பின்வரும் கருத்தைச் சிந்திப்பது நன்றாம் 'யாரளித்த பாலடிசில் உண்டது நீ எனத் தந்தை வெகுள 'செம்மைபெற எடுத்த திருதோடுடைய செவியன்' எனும் திருப்பதிகம் பாடித்தந்தையின் ஐயம் தீர்த்தது தோடுடைய செவியன் அதே போன்று அபிராமி பட்டர் மீது அரசன் கொண்ட ஐயம் தீர்த்தது பட்டரை பெருமை அடைய செய்ததும் அம்பாள் செவியில் இருந்த திருத்தோடே என்பதை சிந்திப்பது சாலச்சிறந்தது.

பிரபஞ்சத்தில் ஒலிக்கும் மந்திரங்களை ரிசிகள் முனிவர்கள் திருவருளால் தமது செவியாற் கேட்டு மந்திரமாகச் சீடருக்கு உபதேசம் செய்கின்றார்கள். இன்று பரவெளியில் பரந்து சதா ஒலிக்கும் அலை வரிசையை தன்பால் இழுத்து வானொலிக்கும் கொடுக்கும் தொலைக்கருவி தான் நமது செவி ஞானத்தை நல்கும் விநாயகர் காதின் அமைப்பு இவ்விடம் சிந்திப்பதற்குரியது.


ஒருவன் கற்கண்டைக் கையில் வைத்துக்கொண்டு அதன் வரலாறு மருத்துவ நன்மை முதலியபற்றிச் சிந்திப்பதன்றி வாயில் போட்டு சுவைக்கவில்லை. ஒருவன் உடனே கற்கண்டை வாயில் போட்டு சுவைத்து இன்புறுகின்றான். அதேபோல் இறைவன் தந்த பாடல்களைத் காதலாகிக்கசிந்து உருகிப்பாடி இறைவன் திருவருளாகிய இன்பத்தை நுகர்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவனைத் தேடி



**சத்தியவதி இராஜேந்திரம்,**
ஓய்வு பெற்ற ஆசிரியை இராமநாதன் இந்து கலலூரி.

இவ்வுலகில் நாம் அன்பைத் தேடுகிறோம். அறிவைத் தேடுகிறோம். அமைதியைத் தேடுகிறோம். பொன்னைத் தேடுகிறோம். பொருளைத் தேடுகிறோம். புகழைத் தேடுகிறோம். எம்மைப் படைத்து காத்து அருள் செய்கின்ற இறைவனை யார் தேடுகிறார்கள்? இவற்றை எல்லாம் தேடிச்சென்ற வேகத்தில் நம்மை நாமே இழந்துவிட்டோம். ஒரு தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் செல்லத் தலைப்படுமானால் அந்தத் தேரின் கதி என்னவாகும்? இந்த நிலையில்தான் நாம் உள்ளோம். நமது ஆசைகள் ஒரு புறம். இலட்சியங்கள் ஒரு புறம். வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சஞ்சலங்கள் ஒரு புறம். இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் செல்ல நம்மில் ஒரு வெறுமை உணர்வு தோன்றுகின்றது. எதையோ நாம் இழந்துவிட்டோம்.

இப்போது ஒளவைப்பாட்டி என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம். மாடுமேய்க்கும் சிறுவனாக வந்து சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று ஒளவைப்பாட்டியிடம் கேட்ட முருகப் பெருமான் தன் திருவுருவக் காட்சியை அளித்து ஒளவைப்பாட்டியின் வாயிலிருந்து தீந்தமிழ்ப் பாடல்கள் கேட்க திருவுளங்கொண்டார். அவரை மேலும் சோதிக்க "அரியது எது?" பெரியது எது?" கொடியது எது,? இனியது எது? என்று பல கேள்விகள் கேட்டார். ஒளவையார் பாடிய பாடல்களில் 'அரியது எது? என்ற கேள்விக்குரிய விடையை மாத்திரம் இப்போது சிந்திப்போம்.

*அரியது கேட்கின் தனி நெடுவேலோய்!*
*மக்கள் யாக்கையில் பிறந்தலும் அரிதே!*
*மக்கள் யாக்கையில் பிறந்த காலையும்*
*மூங்கையும் செவிடும் கூனும் குருடும்*
*பேடு நீங்கிப் பிறத்தல் அரிது*
*பேடு நீங்கிப் பிறந்த காலையும்*
*ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது*
*ஞானமும் கல்வியும் நயந்த காலையும்*
*தானமும் தவமும் தான் செயல் அரிது*
*தானமும் தவமும் தாம் செய்வாராயின்*
*வானவர் நாடு வழி திறந்திடுமே.*

ஏழுவகையான பிறப்புக்களில் மனிதராய்ப் பிறப்பது அரிது, மனிதராய்ப் பிறந்தாலும் எவ்வித ஊனமும் இல்லாத நல்ல உடம்புடன் பிறப்பது அரிது, அப்படிப் பிறந்தாலும் ஞானமும் கல்வியும் பெறல் அரிது, அதற்கு மேல் தானமும் தவமும் செய்தல் அதனிலும் அரிது.

ஒளவையாரின் அறிவுரைப்படி மனிதர் இவற்றை முறையாகப் பெற்றால் தான் விண்ணுலக வாழ்வு கிட்டும். இறைவனை மனம், மெய், மொழிகளால் வழிபடவேண்டும். பெறுதற்கரிய இம் மானுடப் பிறவியை வீணடித்தல் தகாது என்கிறார்.

இறைவனால் எமக்குத் தரப்பட்ட கருவிகள் மூன்று - உடல், மனம், புத்தி, உடல், உள்ள வரை பசியும் தாகமும் இருந்தே தீரும். உடம்பைக் காப்பாற்ற, அதன் மூலம் உயிரைக் காப்பாற்ற உணவு தேட வேண்டியது அவசியமே! திருமூலரும் தாம் அருளிய திருமந்திரத்தில்.

*உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்*
*உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்புளே உத்தன் கோயில் கொண்டானென்று*
*உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.*

எனப் பாடியுள்ளார். உடம்பினுள் உத்தமனாகிய இறைவன் கோயில் கொண்டுள்ளமையால் உடலைச் சுத்தி செய்யவேண்டும். உள்ளத்தினுள் இறைவன் இருப்பதால் தீய எண்ணங்களைப் போக்கி உள்ளத்தையும் தூய்மை செய்ய வேண்டும். என்கிறார்.

உடலோம்ப உணவு தேடும்போது, தனு, கரண, புவன போகங்களைத் தந்தவர் யார் என்று சிந்திக்கிறோமா? பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், என்பவற்றை நம் மூதாதையர் தேடி வைத்தார்களா? இவற்றின் கலப்பினால் உண்டாகும் பொருட்களை நம் முன்னோர் செய்து வைத்தார்களா? பேரருட் சக்தியாகிய இறைவனே எமக்காக இவற்றையெல்லாம் செய்து வைத்துள்ளார். அண்ட சராசரங்களிலுள்ள உயிருள்ள உயிரற்ற யாவற்றையும் இயக்கி வருகின்ற கண்ணுக்குத் தோற்றமளிக்காத இந்த பேரருட் சக்தியைப் போற்ற வேண்டாமா? உணவை மட்டும் தேடுவது எல்லா ஜீவராசிகளினதும் பொது இயல்பு. ஆறு அறிவு கொண்ட மனிதனுக்குச் சிந்திக்கும் திறனைக் கடவுள் கொடுத்துள்ளாரே! மனிதனும் உணவை மட்டும் தேடிக் காலம் போக்கலாமா?

ஒவ்வொரு ஜீவனும் செய்யும் நல்வினை தீவினைக்கு இறைவனது ஆட்சியில் கணக்கு வைக்கப்படுகிறது. இறைவனின் தீர்ப்பிலிருந்து எவரும் தப்ப முடியாது. இவ்வுண்மையை திருநாவுக்கரசு சுவாமிகள் இவ்வாறு கூறுகிறார்.

இன்னம்பர் என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசன் கணக்கு எழுதும் வேலையை மிக்க கவனமாகச் செய்து வருவதாக அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

*தொழுது தூமலர் தூவித்*
*துதித்து நின்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அழுது காமுற்று அரற்று*
*கின்றாரையும்*
*பொழுது போக்கிப் புறக்*
*கணிப்பாரையும்*
*எழுதும் கீழ்க்கணக்கு*
*இன்னம்பர் ஈசனே.*

ஈசனை மெய்யடியார் நறுமலர்கள் கொண்டு அர்ச்சனை செய்து அவன் புகழைப் பாடித் துதித்து இரு கரம் கூப்பி வணக்கம் செய்கின்றனர். அவனது கருணையைப் பெற மிகுந்த அன்புடன் கண்ணீரைப் பொழிந்து பலவாறு தம் குறைகளை வாய் விட்டுக் கூறியும், அவற்றை எல்லாம் போக்கித் தம்மைக் கரையேற்ற வேண்டும் என்றும் விண்ணப்பித்து வழிபடுகின்றனர்.

அவர்கள் யார் யார் என அறிந்து அவர்களது புண்ணியச் செயல்களை வரவு வைக்கிறான் இறைவன். புண்ணியத்தின் பயனாக இம்மையில் புகழும் செல்வமும் மறுமையில் சுவர்க்கமும் கிடைக்கின்றன. தம் வாழ்நாளை வீணாக்கி வெற்றுப் பேச்சுப் பேசி வருபவர்களையும் இறைவனை ஒரு பொழுதேனும் நினைக்காதவர்களையும் இறைவன் என்று ஒருவர் இல்லை என்று கூறுபவர்களையும் இறைவன் தன் கணக்குப் புத்தகத்தில் நாள் தோறும் குறிப்பு வைக்கிறார். என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.

உணவைத் தேடி உடம்பை வளர்த்துக் காத்து வந்தோரே! அதை அழியாமல் காக்க முடிந்ததா? அவரது உடம்பு காக்கைக்கும், கழுகுக்கும், நாய்க்கும், நரிக்கும், புழுவுக்கும், தீக்கும் இரையாகி விடுகின்றதே! இந்த உண்மையை உணர்ந்தாரா?

இப்படி மனிதப் பிறவியை வீணாக்கியவரைப் பார்த்து திருநாவுக்கரசு சுவாமிகள் "ஆக்கைக்கே இரைதேடி அலமந்து காக்கைக்கே இரையாகிக் கழிவரே" என்று கூறுகிறார்.

ஆமாம்! காலம் மாறி வருகிறது. பொருள் ஈட்டுவதும் புலனின்பம் துய்ப்பதும் வாழ்க்கையின் நோக்கமாகிவிட்டது. அதற்கு எத்தனை வழிகள் உண்டோ அத்தனை வழிகளையும் இன்றைய விஞ்ஞானம் ஒவ்வொன்றாகத் திறந்து கொண்டிருக்கிறது. இதன் விளைவு? போட்டி! பொறாமை! எந்தத் தவறான வழியையும் பின்பற்றுகின்ற அசட்டுத் துணிச்சல்! முடிவு என்ன? வாழ்க்கை வசதிகள் என்னவோ கூடியது உண்மைதான். ஆனால் மனிதனின் தரம் தாழ்ந்து விட்டது. அவனது ஆளுமை வறுமைப்பட்டு விட்டது. இதனால் மனிதவாழ்க்கை பல வசதிகளைக் கொண்டிருந்த போதும் எல்லோர் மனதிலும் ஒரு வெறுமை உணர்வே தோன்றியுள்ளது. மனிதன் மனிதனாக வாழத் தவறிவிட்டான். ஜடப்பொருள் என்ற நிலைக்குத் தாழ்ந்து விடுகிறான். இயந்திரங்களைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இயந்திரமாகவே மாறிவிடுவதா? நம் முன்னோர்கள் பேணிக்காத்த அன்பு எங்கே? கருணை எங்கே? மனித நேயம், தியாகம், பரோபகாரம் போன்ற நற்பண்புகள் எங்கே போய்விட்டன? பேராசைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் அடிமைப்பட்டு, திறமைகளையும் தகுதிகளையும் விலை பொருட்களாக்கி வாழ்க்கையில் உயர்நோக்கங்கள் எவையுமே அற்ற நடைப்பிணங்கள் ஆகிவிடுவதா? செல்லும் பாதையும் சரியாகத் தெரியாமல், சேரும் இடமும் தெளிவாகப் புரியாமல் புறப்படுகின்ற இந்த வாழ்க்கைப் பயணம் எப்படி இருக்கும்? சற்று சிந்திப்போமா?

நான் யார்? நான் என்னிடம் எத்தகைய உறவு கொண்டுள்ளேன்? உண்மையில் எனது இயல்பு என்ன? எனது முகவரி தான் என்ன?

இப்படி உணர்வின் ஆழங்களிலிருந்து எத்தனையோ கேள்விகள் மேலெழுகின்றன. இப்படியான கேள்விகள் மேலெழும்போதே நாம் நீண்ட தூக்கத்திலிருந்து விழிப்பது போன்ற உணர்வைப் பெறுவோம். விழிப்புணர்வு பெற்றதும் எமக்குள் உறையும் இறைவனைத் தேட ஆரம்பித்து விடுகிறோம்.

இப்படி சடுதியான விழிப்புணர்வு பெற்று இறைவனைத் தேடியவர்கள்தான் பட்டினத்தார், அருணகிரிநாதர், வால்மீகி முனிவர் போன்றோர் "காதற்ற ஊசியும் வராது காண் கடை வழிக்கே" என்ற வாசகத்தால் விழிப்புணர்வு பெற்றார் பட்டினத்தார். தவறான பழக்கவழக்கங்களால் தீராத நோய்க்குட்பட்டு தற்கொலை முயற்சியில் இறங்கிய அருணகிரிநாதர் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு விழிப்புணர்ச்சி பெற்றார். இறைவனைத் தேடினார். கண்டு கொண்டார்.

கொள்ளைக்காரனாக இருந்த இரத்னாகரன் எப்படி வால்மீகி முனிவரானார்?

காட்டு வழியாக வருவோர் போவோர் எல்லோரையும் பயமுறுத்திக் கொள்ளையடித்து தன் பெற்றோர், மனைவி மக்கள் யாவரையும் பேணிக் காத்து வந்தான். இரத்னாகரன். ஒருநாள் அந்த வழியாக நாரத முனிவர் வந்தார். அவரிடமும் கொள்ளையடிக்கத் துணிந்தான் அவன். அவரைப் பயமுறுத்தி அனைத்தையும் கொடுத்து விடும்படியும் இல்லாவிடில் கொன்றுவிடுவதாகவும் பயமுறுத்தினார். அதற்குச் சிறிதும் அஞ்சாத முனிவர் அவனைக் கருணையுடன் பார்த்தார். 'உண்மையை உணராத இந்தப் பேதை பாவத் தொழில் புரிகிறானே' இவனைக் காக்க வேண்டும்' என்று எண்ணினார். அவன் செய்யும் தொழில் பாவத் தொழில் என்பதை எடுத்துக் கூறி அந்தப் பாவப்பலனில் அவனது பெற்றோரோ, மனைவி மக்களோ பங்கு ஏற்பார்களா என்பதை வீட்டில் சென்று கேட்டு வருமாறு கூறினார். நிச்சயமாகத் தன் பாவத் தொழிலில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்பதை நம்பினான் இரத்னாகரன். இதுவரை காலமும் தான் கொள்ளையடித்தும், கொலை செய்தும் பெற்ற பொருட்களைக் கொண்டு அவர்களைப் பேணிக் காத்து வந்ததாகவும் எனவே அப் பாவத்தில் அவர்களும் பங்கு ஏற்பார்களா என்றும் கேட்டான். அவர்கள் எல்லோரும் அவனுடைய பாவத்தில் பங்கு கொள்ள மறுத்துவிட்டனர். கொள்ளையடித்த பொருட்களை ஏற்று மகிழ்ந்தார்களேயன்றி என் பாவத்தில் பங்குகொள்ள மறுக்கிறார்களே என்பதைக் கண்டதும் தான் தனிமைப் படுத்தப்பட்டதை உணர்ந்தான் இரத்னாகரன். அவன் கண்முன் எதிர்காலம் சூன்யமாகத் தென்பட்டது. அழுது கொண்டு ஒரே ஓட்டமாகச் சென்று நாரதரை சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்தான். இப் பாவத்திலிருந்து விடுபடும் வழியைக் கூறுமாறு கேட்டான்.

இறை நாம ஜெபம் ஒன்றே வழி என்றார் நாரதர். நாரதர் கூறியபடி தொடர்ந்து சாதனை செய்தான், தன் தவறுகளை உணர்ந்தான், கடந்த காலத்தை எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தினான், ஒரு புதிய பாதையைத் தேடிக்கொண்டான். வாழ்வில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. சாதனை தொடர்ந்து விழிப்புணர்வு பெற்ற இரத்னாகரன் வால்மீகி முனிவரானார். வடமொழியில் முதல் காவியமான இராமாயணத்தை உலகிற்கு வழங்கினார்.

எமக்கும் அவ்வாறான விழிப்புணர்வு ஏற்படும்போதுதான் இதுவரை காலமும் காலத்தை வீண்விரயமாக்கினோமே என்று எம்மை நாமே நொந்து கொண்டு பரம்பொருளை நோக்கிப் பயணத்தை ஆரம்பிப்போம். வாழ்க்கை வழங்குகின்ற பாடங்களையும், உணர்த்துகின்ற உண்மைகளையும் புரிந்து கொண்டு இறைவனைத் தேட முயற்சிப்போம்.

இந்த முயற்சியை எப்படி வெற்றிப் பாதையில் திசை திருப்புவது? உயர்ந்த குறிக்கோளின் துணையுடன், தனது அனுபவங்கள் தந்த பாடங்களுக்கேற்ப அக மாற்றங்களைச் செய்யவேண்டும். எப்படி? தன்னைத் தானே பரீட்சித்துப் பார்த்தல், பரம்பொருளை நோக்கிச் செல்லத் தடையாகவுள்ள காரணிகள் எவை? மனதின் துணைகொண்டு இவற்றைப் படிப்படியாக நீக்க முயற்சிக்கலாம். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு குழந்தை சிறுவனாகப் பரிணமிக்கும் போது சமுதாயத்தில் பல பாத்திரங்களை ஏற்க வேண்டியுள்ளது. மகனாக, மாணவனாக, நண்பனாக,உறவினனாக, பல்வேறு வேடங்களை அவன் ஏற்கிறான். அவனது ஒவ்வொரு வேடத்தையும் சமுதாயம் உன்னிப்பாகக் கவனிக்கிறது, அவனை எடை போடுகிறது, சமுதாயம் எப்படி எடை போட்டதோ அதையே அவன் தனது இயல்பாக ஏற்றுக்கொள்கிறான். ஏனெனில் தன்னுள்ளே ஆழ்ந்து நோக்கி தன் உண்மைத் தன்மையை உணர்ந்து கொள்கிற ஆற்றல் சிறுவனிடம் இல்லை. சமுதாயம் தன்மீது குத்துகின்ற முத்திரையை அதாவது நல்லவன் - கெட்டவன், புத்திசாலி - மந்த புத்தியுள்ளவன், வீரன் - கோழை, என்று எதுவானாலும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். பிறர் அவனை எவ்வாறு முத்திரை குத்தினார்களோ அதுவே தனது உண்மை இயல்பு என்பதை சிறுவன் ஏற்றுவிடுகிறான். மனதிலும் பதித்துவிடுகிறான். தன் உரு இது தான் என்று நம்பிவிடுகிறான். பிறரால் திணிக்கப்பட்ட தன் - உரு இயல்பை மாற்றுவது கடினம். எனவேதான் குழந்தைப் பருவமும், இளமைப் பருவமும் ஒருவரது வாழ்வில் மிகவும் பவித்திரமானது. பிறர் திணித்து விட்ட இந்தத் தன் - உருவானது அவனது மன ஆழங்களில் நன்கு பதிந்து விடுவதால் அவனது கருத்து, நடத்தை எண்ணங்கள் யாவும் இந்தத் தன் - உருவுக் கேற்பவே நிகழ்கின்றன. இப்படித் திணிக்கப்பட்ட தன் - உருவை ஓர் உயர்ந்த இலட்சியத்துடன் இணைத்து விட்டோமானால் - நான் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஆக்கபூர்வமான ஓர் இலட்சியத்துடன் இணைத்து விடுவோமானால் வாழ்க்கை நிறை நிலையை நோக்கித் திசை திரும்பும்.

நமது உண்மை இயல்பு தெய்வீகம், நாம் எல்லோரும் தெய்வக் குழந்தைகள் அழியாத அமரத்துவ குழந்தைகளே! என்றுதான் நமது ரிஷிகள் நம்மை அழைததார்கள் இதுவரை காலமும் நம்மை தவறாக எடை போட்டு வந்துள்ளோம். நாம் பூரணத்துவம் பெற்றவர்கள் என்ற விழிப்புணர்ச்சி பெற்றதும் இறைவனைத் தேடத் தலைப்படுகிறோம். வெறுமனே நாம் தெய்வக் குழந்தைகள் என்று கூறுவதோடு அதை அநுபவ ரீதியில் உணர்வதற்கும் சில சாதனைகள் செய்தாக வேண்டும். பூஜை, வழிபாடு, ஜெபம், பிரார்த்தனை, தியானம் என்பவை சில சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருவோமாயின் அகத்திலும் புறத்திலும் ஏற்படும் விளைவுகளை அவதானிக்கலாம்.

'பூஜை' என்ற வழிபாட்டினை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் ஒருவர் அதை எவ்வாறு செய்கிறார் என்பதை வெளியே காண்கின்ற விளைவைக் கொண்டு கணிக்கிறோம். அவர் அகத்தே அதாவது மனதிலே ஏற்படுத்தும மாற்றங்களை அவதானிக்க முடிவதில்லை. அக விளைவுகள் புற விளைவுகளைப் போல் குறிப்பிடத்தக்கதாக இல்லை. வருடக் கணக்காக நாம் வழிபாடு செய்கிறோம். ஆனால் நம்முள் எந்த மாற்றமும் இல்லையே! ஏன்? நாம் வழிபாடு செய்யும் போது நம் மனம் முழுவதையும் ஆக்கிரமித்து நிற்பது எது? இதனால் என்ன பலன்? என்று எண்ணத் தலைப்பட்டு விடுகிறோம். இதனால் "மன ஆற்றல்" சிதறி விடுகிறது. அப்படி எனில் அகத்தில் எப்படி மாற்றம் ஏற்படும்?


அக விளைவில் பெரிய மாற்றம் ஏற்பட வேண்டு மெனின் பயனில் கருத்தைச் செலுத்தாது தன்னுணர்வுடன் நாம் செயற்பட வேண்டும். ஏனோ தானோ என்று வழிபாடு செய்வோமானால் மனம் தனது சக்தியை இழக்கிறது. சக்தி இழந்த மனம் நம்மிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை.

எந்த வேலையானாலும் அதை ஒரு இறைவழிபாடாக மேற்கொண்டோமானால் அது நம்முள் தூங்கிக் கொண்டிருக்கும் தெய்வீகத் தன்மையை வெளிக் கொண்டு வரும். அதாவது ஆர்வம் நம்முள் இருந்து வரவேண்டும். வேலையிலாவது, வழிபாட்டிலாவது ஒரு நிறைவைக் காண்பதற்காக. அவற்றைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்து வந்தால் நம்முள் உள்ள தெய்வீகத்தை - பரம்பொருளை உணர முடியும்.

ஆத்ம திருப்திக்காக நாம் வழிபாடு செய்யும்போது அல்லது வேலை செய்யும் போது மனம் தூய்மை அடைகிறது. நல்லெண்ணங்கள் உதயமாகின்றன. உயர்ந்த இலட்சியங்கள் உருவாகின்றன. அன்பு மயமாகவே மாறிவிடுவோம், அந்த உயர் இலட்சியத்துக்காகவே நம்மை அர்ப்பணிப்போம். இதுவரை பிறரால் திணிக்கப்பட்ட தன்-உரு அல்ல நான்! உடல், மனம், புத்தி, இவற்றின் சேர்க்கையுமல்ல நான்! இவற்றைக் கடந்த 'ஆன்மா' தான் நான், தெய்வீகம் என் இயல்பு கடந்த 'ஆன்மா' தான் நான், தெய்வீகம் என் இயல்பு. நான் தேடிய பொருள் வெளியே அல்ல. இதயத்தின் உள்ளே உள்ள ஆனந்தப் பெருவெளியில் பேருணர்வு மயமான இறைவனே உறைகிறான். அவனை அடைந்தவனே மனதிற்குத் தலைவன் ஆகிறான், அறிவுக்குத் தலைவன் ஆகிறான். சுருக்கமாகச் சொன்னால் நாம் உள்ளது உள்ள படி அனைத்தையும் அறிகிறோம். துன்பம் துயரம் பிரச்சினை எதுவும் நமக்கில்லை, என்பதை உணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்தில் சைவ ஆலயங்களும், அறப்போதனைகளும்

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்

ஈழத்திருநாட்டில் சைவசமய ஆலயங்களில் அறச்சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதில் ஆர்வம் காட்டாத சூழ்நலை இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது. எல்லா மத ஸ்தலங்களிலும் பூசை வழிபாட்டில் நல்ல சிந்தனைகளை போதனை செய்வது முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால் எமது சைவ ஆலயங்களில் கிரியைகளும், வழிப்பாடுகளும் பெறும் முக்கியத்துவம் ஆன்ம ஞான உபதேசங்களுக்கு வழங்கப்படுவதில்லை. இது மிகவும் பிரச்சினைகளுக்குரிய விடயங்களாக பல அறிஞர்களும் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். வெறும் சடங்குகளோடு சமய விழாக்கள் முடிவடைந்து விடுமேயானால் சமய உண்மைகளும், சமய தத்துவங்களும் மக்களிடையே வளர்த்தெடுக்கமுடியாமல் போய்விடும். இந்நிலை மாறவேண்டும். எமது நாட்டிலும், இந்தியாவிலும் ஆலயங்களில் சமயப் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை அருகிக் கொண்டு போகின்றது. இந்நிலையும் மாற வேண்டும்.

ஈழத்திருநாட்டில் ஆலயங்கள் அறப்போதனைக்கு முதன்மை கொடுத்த வரலாறு உண்டு. குறிப்பாக ஆலயங்களில் நடாத்தப்பட்ட புராணப்படிப்புப் பாரம்பரியம் வழிபாட்டிற்காக வரும் மக்களிடையே வாழ்வாங்கு வாழ்வதற்கான சிந்தனைகளை புராணப்படிப்பினூடாக எடுத்துரைக்கப்பட்டது. புராணப்படிப்புப் பாரம்பரியம் ஆலயங்களில், மடங்களில், சத்திரங்களில், பெரிய மரவிருட்சங்களின் அடியில், வீட்டுத் திண்ணைகளில் வளர்த்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்நியர்கள் ஈழத்திருநாட்டைக் கைப்பற்றி சைவத் திருக்கோயில்கள் அனைத்தையும் அழித்தொழித்த போதிலும் சைவசமய வழிபாட்டு நெறிமுறை மறைமுகமாகப் பின்பற்றப்பட்டது. சைவசமயப் போதனைகள் வீட்டுத்திண்ணைகளிலும் நிலாமுற்றத்துப் போதனைகளிலும் காப்பாற்றப்பட்டுள்ளன. ஆனால் இன்று ஆலயங்கள் பிரமாண்டமாக கட்டி எழுப்பட்டு பல்வேறு வசதிகளோடு ஆலயச்சூழல் அமைக்கப்பட்டுள்ள போதிலும் நித்திய,நைமித்திய வழிப்பாடுகளில் ஞான உபதேசங்களுக்கான முக்கியத்துவம் சீராக்கம் பெறவில்லை. நல்லைநகர் நாவலர் பெருமான் ஈழத்துச் சைவசமய வரலாற்றில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய வரலாற்றாளர் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். ஆலயங்களில் வழிபாட்டோடு நல்ல சிந்தனைகள் போதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து பிரசங்க மரபினை அறிமுகம் செய்து வைத்தார்.

### ஆலயங்களில் பிரசங்க மரபு

நல்லைநகர் நாவலர் பெருமான் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் சமயப் பிரசங்க மரபினைத் தோற்றுவித்தார். அவர் ஆற்றிய பிரசங்கம் மக்களை ஆற்றுப்படுத்தியதுடன் சமய உண்மைகளை மக்கள் அறியும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. நாவலர் பெருமான் குடாநாட்டில் உள்ள பல சைவ ஆலயங்களில் தனது பிரசங்கத்தினூடாக மக்களை கவர்ந்தார். நல்ல ஒழுக்கவியற் கருத்துக்களை பிரசங்கத்தினூடாக எடுத்துரைத்து மக்களை புனிதவழிக்கு திசைதிருப்பினார். ஆலயங்களில் நடைபெற்ற கேளிக்கைகளை நிறுத்துவதற்கும் பலியிடல் போன்ற வேள்வி முறைகளைத் தடுப்பதற்கும் நாவலர் பெருமானது பிரசங்கம் பெரிதும் பயன்பட்டது. இவை மட்டுமன்றி மத மாற்றங்களுக்கு உட்பட்டவர்களை மீளச் சைவசமயத்திற்கு ஈர்ப்பதற்கும் மதம் மாறலைத் தடுப்பதற்கு பிரசங்கத்தை பெரிதும் பயன்படுத்தியவர் நாவலர் பெருமான். அவர் ஏற்படுத்திய பிரசங்கத்தின் தொடரினால் அவரைத் தொடந்து பலர் ஆலயங்களில் சமயப்பிரசங்கங்களை ஆற்றி மக்களை நெறிப்படுத்தியதோடு கோயில்களையும் புனித பிரதேசமாகப் பேணுவதற்கு உதவினார்.நாவலர் வழியில் பிரசங்க மரபைப் பேணியவர்கள் செய்த தொண்டு ஈழத்தின் சைவ மறுமலர்ச்சிக்கு பெரிதும் துணை செய்தது. காலத்திற்குக் காலம் பல பிரசங்க வித்தகர்கள் தோன்றி பாமர மக்களையும் பக்தி நெறியில் பண்பாட்டு நெறியில் வாழ வழிகாட்டினர். திருக்கோவில்கள் பல பிரசங்கத்திற்கு பெருமதிப்புக் கொடுத்தன.

### கதாப்பிரசங்க மரபு

ஆலயங்களில் சமய வரலாறுகளையும் புராண இதிகாசத் தத்துவங்களையும் இசையோடு கூடி எடுத்துரைக்கின்ற மரபே கதாப்பிரசங்க மரபாகும். ஈழத்தின் கதாப்பிரசங்க விற்பன்னர்கள் ஆலய விழாக்களில் தமது இசை,ஞானத் திறமையாலும் சொல் வன்மையாலும் மக்களை நெறிப்படுத்தினர். காலத்திற்குக் காலம் அற்புதமான கதாப்பிரசங்கர்கள் தோன்றிப் பணியாற்றியுள்ளனர்

### வில்லிசை

கதாப்பிரசங்க மரபு தழுவிய இசையோடு கூடிய ஒரு நிகழ்ச்சியாக இக்கலை வடிவம் 20ஆம் நூற்றாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமய வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது. ஆலயங்களில் சமயச் செய்திகளை இக்கலைவடிவத்தினூடாக மக்களிடையே எடுத்துரைக்கின்ற பண்பாடு சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது. 1950கள் முதல் 20ஆம் நூற்றாண்டின் நிறைவு வரை இத்துறையில் சமய செய்திகளை சொல்லுகின்ற கலைஞர்கள் சிறந்த பணியாற்றியுள்ளனர். திருப்பூங்குடி ஆறுமுகம், கலாவிநோதன் கணபதிப்பிள்ளை சின்னமணி, லடீஸ் வீரமணி, மாஸ்டர் சிவலிங்கம், சதா. சதாசிவம் போன்ற கலைஞர்கள் வில்லிசைக் கலைமூலமாக ஆலயங்களில் சமய கருத்துக்களை நீண்ட காலமாக எடுத்துரைத்து வந்துள்ளனர். இக்கலை வடிவமும் இன்று அருகி வருகின்றது. திருக்கோயில்களில் வில்லிசை மூலம் சமயச் செய்திகளைச் சொல்லுகின்ற வழக்கம் மிகவும் குறைந்துவிட்டது.

### நடன நாடக கூத்துக் கலைகள்

மேற்குறித்த கலை வடிவங்களினூடாக சமய காப்பியச் செய்திகள் ஆலயங்களில் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இக்கலை வடிவங்களினூடாக மக்களுக்கு நல்ல செய்தி சொல்லுகின்ற தன்மை இன்று அருகிப் போய் விட்டது.

### புராண படல மரபு

ஆலயங்களில் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், விநாயக புராணம், திருவாதவூரடிகள் புராணம், போன்றவற்றை ஒருவர் படிக்க மாற்றவர் விளக்க உரை சொல்ல மக்கள் ஆர்வமாகக் கேட்கின்ற மரபு ஈழத்துச் சமய மரபில் மிகவும் முதன்மை பெற்றது. யாழ்ப்பாணம், கந்தபுரணக் கலாசாரம் பேணுகின்ற பூமி என பாரத நாட்டவர்கள் சிறப்பித்துக் கூறும் அளவிற்கு புராண பாரம்பரியம் இங்கு மதிப்புப் பெற்றது. புராணப்படிப்பு பாபரம்பரியத்தை கோவில் பூசகர்கள், அறங்காவவலர்கள் பக்தர்கள் இனணந்து நடாத்தி வந்தனர். அன்றைய சூழலில் மணித்தியாலக் கணக்காக மக்கள் புராணப்படிப்பை ஏற்றனர். அன்று பெரும்பாலான மக்கள் விவாசாயிகளாக விளங்கிய காரணத்தினால் அவர்களுக்குப் போதியளவு நேரம் புராணப்படிப்பைக் கேட்கக் கூடியதாக வாழ்வியல் சூழல் அமைந்தது. இன்று புராணப்படிப்பு நடைபெறுகின்றபோது ஒரு சிலரே பங்கு பற்றுகின்றனர். இன்று புராணப்படிப்புப் பாரம்பரியமும் அருகிக் கொண்டிருக்கிறது.

### ஆலயங்களில் பூசை வழிபாட்டுடன் நற்சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

ஆலய வழிபாட்டில் நற்சிந்தனை, கூட்டுப் பிரார்த்தனை மிகவும் முக்கியம் பெற வேண்டும் என்ற கருத்தினை ஈழத்து சமய வரலாற்றில் நாவலருக்குப் பின் நெறிப்படுத்தியவராக அன்னை சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விளங்குகிறார். 1950களுக்குப்பின் சமயச் சொற்பொழிவுகளினூடாக மக்களை ஆற்றுப்படுத்தி வருகின்ற இவர் பலரை நெறிபபடுத்தியுள்ளார். குறிப்பாக தெல்லிப்பினை துாக்கா தேவி தேவஸ்தானத்தில் பூசை வழிபாட்டோடு நற்சிந்தனைக்கும் கூட்டுப்பிரார்த்தனைக்கும் நேரம் ஒதுக்கி இன்றுவரை அம்மரபு சிதைந்து விடாமல் காப்பாற்றி வருகின்றார். இவரது முன்னுதாரணத்தைப் பின்பற்றிச் சில ஆலயங்களில் நித்திய நைமித்திய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் சமய சொற்பொழிவுகள், நற்சிந்தனைகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. பல ஆலயங்களில் திருவிழாக்காலங்களில் சமயச் சொற்பொழிவைக் கேட்கின்ற வாய்ப்பு வளர்ச்சி பெற்று வுந்தது. எனினும் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நற்சிந்தனை நடைபெற்று வந்த ஒழுங்கு ஏனைய ஆலயங்களில் பேணமுடியாமல் போய்விட்டது.

### இன்று சைவ ஆலயங்கள் அறப்போதனைகளை வளர்ப்பதற்குச் செய்யவேண்டிய அடிப்படைக் கடமைகள்

சைவ ஆலயங்கள் வழிநடத்துகின்ற அறங்காவலர்கள் ஆலய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் வாரத்தில் ஒருநாளாவது மக்களை நல்வழிப்படுத்துகின்ற நற்சிந்தனைகளை வளர்ப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் பிரசங்கத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை அழைத்துத்தான். நற்சிந்தனை சொல்லுகின்ற முறையை ஏற்பாடு செய்யத் தேவையில்லை. ஆலயத்தில் பூசை செய்கின்ற குருவோ அல்லது அறங்காவலரோ அல்லது அடியவரோ யாரோ ஒருவர் அறங்கூறுகின்ற நூல்களைக் கொண்டு வந்து வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கு வாசித்துக்காட்டி மக்களுடைய மனதில் நல்லறிவைப் போதிக்க வேண்டும். அறப்போதனை என்பது அருமருந்தாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஓர் இருநேரமாக மக்கள் கேட்பதற்கு வழி செய்ய வேண்டும். ஆலய அறங்காவலர்கள், ஆலயப்பூசகர்கள், இவ்விடயத்தில் அக்கறைகாட்டாது இருப்பார்களானால் எமது சமய உண்மைகளை எதிர்காலச் சந்ததி சீராக அறிய வாய்ப்பில்லாது போய்விடும். அறச்சிந்தனைகள் சொல்வதற்குப் பணச் செலவு இல்லை. இன்று எல்லோரும் எழுத்தறிவு உடையவர்கள். எம்முன்னோர்கள் சொல்லி வைத்த நல்ல செய்திகளை மீள வாசித்து விட்டால் பலரது எண்ணங்களில் நல்ல கருத்துக்கள் பதிய வாய்ப்பிருக்கும். இன்று சைவர்களாகிய நாம் இவ்விடையத்தின் அக்கறைகாட்டாது விடுவோமானால் நாம் அடுத்த தலைமுறைக்கு பெரிய துரோகம் செய்தவர்களாவோம் . ஆலயங்களில் நற்சிந்தனை ஊடாக அறம் போதிக்கப்படுவதோடு அன்பு, ஜீவகாருண்யம், இரக்கம், பிறருக்கு உதவும் மனப்பாங்கு, நன்றி மறவாமை போன்ற நல்லன மக்களிடையே எடுத்துரைக்க முடியும். வெறும் கிரியைகளாலும் சடங்குகளாலும் மக்களை முழுமையாக ஆற்றுப்படுத்த முடியாது. இன்று கோயில்களில் பெருமாட மண்டபங்கள் கட்டப்படுகின்றன. ஆனால் அம் மண்டபங்களை அறப்போதனைக்காக, ஞான உபதேசங்களுக்காகப் பயன்படுத்துவதில்லை. இறைவனின் பெயரால் நாம் செய்யும் திருப்பணிகள் எல்லாம் இறையடியவர்களுக்கு பயன்படும் என்ற உண்மையைப் பலரும் இன்று அறிந்து கொள்வதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய அறங்காவலர்கள் பூசகர்கள் போன்றோர் களுக்கான ஆன்மீகப் பயிற்சிகள்

இன்று ஆலயங்களை வழிநடத்துகின்றவர்கள் ஆலய மரபுகளை சமய தத்துவங்களை வரலாற்று மேன்மைகளைக் கற்றுக் கொள்வதில் அக்கறை காட்டுவதில்லை. இதுவும் எமது சமயத்திற்கு உகந்தது அல்ல. அரசர்களது ஆட்சிக்காலங்களில் அரசர்கள் கோயில்களைக் கட்டிய போதும் சமய மேன்மைகளைக் கற்பதற்கான காலம் ஒதுக்கிக் கற்றுக் கொண்டனர். அரசன் போர்ப்பயிற்சி பெற்றதோடு நின்றுவிடாது ஆத்ம விசாரணைகளைத் தொடுத்து அக்கறை சார்ந்த ஆத்ம ஞானிகளிடத்தும் அறிவை வளப்படுத்திக் கொண்டனர். இவ்வரலாற்று உண்மையை நாம் அனைவரும் உணரவேண்டும் இராஜஇராஜ சோழன் முதல் ஈழத்து ஆட்சி பீடத்தை அலங்கரித்த பராஜசேகரன் வரை ஆத்மீகத்தை அற இலக்கியங்களை வைத்தியத்தை எத்தனை தூரம் கற்றனர் என்பதை வரலாற்று நூல்கள் சான்று பகர்கின்றன. இன்று கோவில்களை வழிநடத்துகின்ற அறங்காவலர்களில் பெரும்பாலானவர்கள் சமய உண்மைகளைக் கற்றுக் கொள்வதுமில்லை அறிவதும் இல்லை விதிலக்காகச் சிலர் சமய மேன்மைகளைக் கற்று ஆலயங்களைப் பேணி வருகின்றனர். எனினும் எதிர்காலத்தில் ஈழத்திருநாட்டில் ஆலய அறங்காவலர்களுக்கு பயிற்சி வழுங்கல் இடம்பெறுவது அவசியமாகும். ஆலய நிருவாக கட்டமைப்பை சீராக கட்டமைப்பதற்குக் கொடுக்க வேண்டிய பயிற்சியோடு ஆலயங்களில் அறங்காவலர்கள் அறப்போதனை செய்வதற்கு திட்டமிட்ட பயிற்சி வழங்குவது அவசியமாகும் என்பது தாழ்மையான கருத்து ஆகும்.

## ஆலயச் சிவாச்சாரியார்களுக்கான ஆன்மீகப் பயிற்சி

ஆலய பூசகர்களுக்கான கிரியைப்பயிற்சிகள் அவர்கள் தத்தம் குருவை நாடிப் பெற்றுக் கொள்வர்.அவர்களுக்கான கிரியை நிறுவனங்களிலும் பயிற்சி பெறுவர். எனினும் ஆலயக் குருமார்கள் அறப்போதனை செய்யக்கூடிய ஆற்றலுடையவர்களாக எதிர்காலத்தில் விளங்குவதற்கு அவர்களுக்கான பயில் அரங்குகள் எதிர்காலத்தில் ஏற்பாடு செய்யப்படவேண்டும். சில ஆலயங்களில் சிவாச்சாரியார்கள் அறப்போதனை செய்யக் கூடியவர்களாக விளங்குகின்றனர். எனினும் பெரும்பாலான ஆலயங்களை வழிநடத்துகின்ற சிவாச்சாரியார்கள் அறப்போதனைகளில் ஆர்வம் காட்டாதவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நிலை மாற வேண்டும். அவர்கள் செய்யும் கிரியைகளின் விளக்கங்கள் அவற்றினால் ஏற்படும் பலாபலன்களை மக்களுக்கு எடுத்துரைக்காவிடின் மக்கள் பெறுகின்ற வாய்ப்பு இல்லை ஆலய விழாக்கள் தொடர்பான விளக்கங்களை அறியாத மக்கள் இன்று பலர் உள்ளனர். அன்று எழுத்தறிவு இல்லாத மக்கள் பெற்ற ஆன்மீக அனுபவங்களை இன்று எழுத்தறிவுள்ள சமுதாயம் பெறவில்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். பிறமதத்து சமய குருமார்கள் தமது வழிபாடுகளில் அறப்போதனைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எமது சமய குருமார்களும் கருத்தில் கொள்ள வேண்டும். சமயத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாம் தலைவணங்கும் குருமார்களுக்கும் உரியதே.

## ஆலயங்களில் அறநெறிப் பாடசாலைகள்

இலங்கையிலுள்ள ஏனைய மதத்தவர்கள் தமது சிறார்களுக்கு வாரத்தில் இருநாள் சமய அறப்போதனைக்கான வகுப்புக்களை நீண்ட காலமாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 1977 களுக்கு பின் இலங்கை அரசாங்கம் இந்த சமயத்துறை சார்ந்த ஓர் அமைச்சினை நிறுவி அவர்களுக்கான கடமைகளையும் வகுத்துக் கொடுத்தது. இந்து கலாசார அமைச்சு தமது திட்டங்களில் ஒன்றாக அறநெறிப் பாடசாலைத் திட்டத்தை அறிமுகம் செய்தது. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு சைவ முன்னேற்ற சங்கம் போன்ற நிறுவனங்கள் அற நெறிப்பாடசாலையை முதலில் ஆரம்பித்தன. பின்பு மலையகத்திலும் கிழக்கிலங்கையிலும் அறநெறிப்பாடசாலைகள் பல தோற்றம் பெற்றன. ஈழத்தின் வடபால் அறிநெறிப்பாடசாலை பற்றிய ஆர்வம் இருக்கவில்லை. எனினும் கடந்த 10 ஆண்டுகளாக அறநெறிப்பாடசாலை தொடர்பான ஆர்வம் வளர்ச்சி பெற்றுள்ளது. வன்னிப் பெருநிலப்பரப்பிலும், மன்னாரிலும், திருகோணமலையிலும் பல அறநெறி பாடசாலைகள் தோற்றம் பெற்றுள்ளன. எனினும் பாடசாலைக்கு பிள்ளையை அனுப்புவதில் பெற்றோருக்கு அதிகம் ஆர்வம் இன்மை காணப்படுகிறது. குறிப்பாக ஏனைய மதத்தவர்களோடு ஒப்பிடுகையில் சிறுவர்களை ஆத்மீக வகுப்புக்களுக்கு அனுப்பும் வழக்கம் எம்மவர்களிடையே போதாமை இருக்கின்றது. இது எமது சந்ததி செய்த தவறோ தெரியவில்லை. இந்நிலை மாற வேண்டும். குறிப்பாக மிகவும் வசதிகளுடைய ஆலயங்கள் அறநெறிப் பாடசாலையை உருவாக்குவதில் அக்கறை இல்லாது இருக்கின்றன. அறநெறிப்பாடசாலை வளர்ச்சிக்கு ஈழத்து ஆலயங்கள் கொண்டுள்ள அக்கறை மிகக் குறைவு. ஆலய வருவாயில் அறநெறிப்பாடசாலையை அமைக்க பல ஆலயங்கள் பின் நிற்கின்றன. அறம் போதிப்பது ஆலயம் என்பதை அறங்காவலர்கள் உணர வேண்டும். அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு வேதனம் சீருடை உபகரண உதவி என சில திட்டங்களை திணைக்களங்கள் கண்துடைப்புக்காக அறிமுகம் செய்வது வழக்கமாகி விட்டது. இந்நிலையில் இருந்து முழுமையாக அறநெறிப் பாடசாலைகளை ஒவ்வொரு ஆலயங்களும் சீரானதிட்டமிடலுடன் வழிநடத்த வேண்டும். இவர்களுக்குரிய பாடத்திட்டங்கள் இவர்களது வயதிற்குரியவைகளாக அமைத்தல் வேண்டும். அன்பு, இரக்கம், கருணை, தயவு போன்றவற்றை அறநெறிப்பாடசாலைகள் முழுமையாகப் போதிப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

சைவ ஆலயங்கள் இன்று அவசியமாகச் செய்ய வேண்டி உன்னத பணிகளில் அறப்போதனைகளின் அவசியம் பற்றியும் அவற்றை ஓரளவேனும் பேணவேண்டிய வழிமுறைகளையும் அறிவுக்கு எட்டியவாறு தந்துள்ளேன். இவ் அறிவைக் கருவாகக் கொண்டு ஆலயங்கள் செயற்பட வேண்டும் எனக் கூறி நிறைவு செய்கின்றேன்.

*நன்றி: நல்லைக்குமரன் மலர்-2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "சிவத்தொண்டின் மகிமையும் அதன் இன்றைய தேவையும்"



சிவத்தொண்டர் அணிப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றில் நிகழ்த்திய சிறப்புரையின் சாராம்சம்.


**கந்தையா நீலகண்டன்**
(பொதுச் செயலாளர் – அகில இலங்கை இந்து மாமன்றம்)


ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

வினைதீர்க்கும் விநாயகர் **அடிபணிந்து இதனைச் சமர்ப்பிக்கின்றேன்**

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே - அபிராமி அந்தாதி

மகாசக்தியாக / **திருமகளாக / கலைமகளாக நாம் போற்றிடும் எல்லாம் வல்ல அன்னை** சரஸ்வதி என் நாவையும் **பேனாவையும் வழிநடத்த பிரார்த்திக்கிறேன்**

**திருக்கோவில்கள் ஏன்?**

கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாப் பொருட்களிலும் கலந்து நிற்பவர்.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையு மாய்க்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"
என்று மாணிக்கவாசகர் பெருமான் பாடியிருக்கிறார்.

விஞ்ஞானம் படிக்கும் மாணவர்கள் கடவுள் எங்கே எனக் கேட்கலாம்? அதற்குத் திருமந்திரத்தில் திருமூலர் பதில தருகிறார்.

"தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலியீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்து நின்றானே."

எமக்குள்ளும் **வெளியேயும் எங்கும் எம்பெருமான் நிறைந்து நிற்கிறான்**

" மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
**மயானத்தான** வார்ச்சடையான் என்னி னல்லான்
**ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்**
**ஒரூர னல்லன் ஒருவமன்** இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இன்னிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன்
என்றெழுதிக் காட்டொணாதே"

என்ற வரிகளில் அப்பரடிகள், இறைவன் இன்ன இன்ன இடத்தனன், இன்ன ஊரினன் என்று கூறமுடியாதமையை விளக்கி இருப்பதைக் காண்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக் கோயில்கள் சமுதாயத்தின் அங்கம். திருக்கோயில்கள் எழுந்தமை கடவுளுக்காகவல்ல, இறைவன் புகழைப் பாடுவதற்காகவல்ல, இறைவன் எங்கும் நிறைந்தவன். "அப்படியானால் ஏன் ஆலயங்கள் எழுந்தன?" என்பது இப்போது உங்கள் எண்ணங்களில் எழும் வினா. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ஆண்டவனை சமுதாயத்தின் அங்கமான மக்களுக்காகவே - இறைவனை மறவாது அவனைப் பிரார்த்தித்து அருள்பெறவே – நாங்கள் எல்லோரும் திருக்கோயில்களில் ஆண்டவனைப் போற்றி வணங்க ஆலயங்கள் அமைக்கப்பட்டன.

" அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும்
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒருரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே"

எனப் போற்றி எம்பெருமானை எமது உறவாகவே போற்றும் சமயம் எமது சமயம்.

**திருத்தொண்டுப் பயிற்சி**

திருக்கோயில்களின் மகிமையைத் திருக்கோயிலில் செய்யப்பட்ட திருத்தொண்டுகள் மேலும் சிறப்பித்தன. கணநாதநாயனார், திருக்கோயிலைச் சார்ந்த தொண்டுகளில் பயிற்சி தரவே ஒரு பள்ளியை நடாத்தினார் என்பது வரலாறு. மலர் மாலை தொடுத்தல், திருவமுது சமைத்தல் எனும் பல தொண்டுகளில் பயிற்சி தரப்பட்டது.

"ஆய அன்பர்தாம் அணிமதில்
சண்பையில் அமர்பெருந் திருத்தோணி
நாயனார்க்கு நற்றிருப்பணி ஆயின
நாளும் அன்பொடு செய்து
மேய அத்திருத் தொண்டினில்
விளங்குவார் விரும்பிவந் தணைவார்க்குத்
தூயகைத் திருத் தொண்டினில்
அவர்தமைத் துறைதொறும் பயில்விப்பார்"

என்று பெரிய புராணம் எடுத்துக் கூறுகிறது. திருக்கோயில்கள் தொண்டின் இருப்பிடங்களாக அமைந்தன.

உழவாரத் தொண்டு செய்த பெருமை மிக்க அப்பரடிகள் திருக்கோயில் வளாகத்தைச் சுத்தம் செய்வதோடு ஆலயச் சுற்றாடலையும் சுத்திகரிப்புச் செய்தார் என்பதும் வரலாறு.

"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற்றாறே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்"

என்ற செய்தியையும் பெரிய புராணம் பறைசாற்றுகிறது. திருத்தலங்களைச் சார்ந்து "தூய்மை இயக்கம்" - சுற்றாடல் சுத்திகரிப்புப் பணி – நடத்தப்பட்டமையை அது எடுத்துக்காட்டுகின்றன. தூய்மையே இறைமை என்பதனை மறக்க முடியாது.

**தமிழாய்வு**

மானிட நாகரிகத்திற்கு ஊற்றுத் தாய்மொழி. தாய்மொழிச் சிந்தனையில் வளர்ந்த சமுதாயம்தான் நிலைபெறும், மேம்பாடு அடையும்! தமிழரின் தாய்மொழியாகிய தமிழ், திருக்கோயில் வளாகத்தில் வளர்ந்தது! தமிழ், திருக்கோயில் தத்துவத்திற்கு உருக்கொடுத்தது. சங்கப் புலவர்களின் தலைவனாக இறைவன் அமர்ந்து தமிழை ஆய்வு செய்தனன். அவன் மட்டுமா? உமையம்மையும் உடனிருந்து ஆய்வுசெய்தாள். ஆறுமுகச் செவ்வேளும் அமர்ந்து ஆய்வு செய்தான். திருக்கோயில் வளாகத்திற்குள் தமிழ்ச் சங்கம் இருந்தது. தமிழ் அறிஞர்கள் கூடினர். தமிழை ஆய்வுசெய்து வளர்த்தனர். புலவர்களுக்கிடையில் புலமைக் காய்ச்சல்வருவதும் உண்டு. சங்க காலத்திலும் புலவர்களுக்கிடையில் யாருடைய கவிதை சிறந்தது என்று கலகம் நடந்தது!. பெருமான், புலவர்களுக்கிடையே இருந்த கலகத்தை அடக்கி நக்கீரர், கபிலர், பரணர் ஆகியோர் பாடல்கள் விழுமியவை என்று தீர்ப்பளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"……கலை வல்லோர் தமிழ் எல்லாம்
சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன் தெருள்கீரன்
முத்தண்டமிழ் கபிலன்தமிழ் பரணன் தமிழ்மூன்றும்
அத்தன்மையுள் அறியும்தொறும் அறியும்தொறும் எல்லாம்"

"பல்காசொடு கடலிற்படு பவளம்சுடர் தரளம்
எல்லாம் நிறுத்து அளப்பான் என இயல்வாணிகன் குமரன்
சொல்லாழமும் பொருளாழமும் துலை நாவெனத் தூக்க
நல்லாறுஅறி புலவோர்களும் நட்டார், இகல் விட்டார்"

என்னும் திருவிளையாடற்புராணப் பாடலில் இஃதறியலாம். **திருக்கோயில் வளாகத்தில் தமிழோடு இசைபாடல் ஓதப்பெற்றது; தமிழாய்வு செய்யப்பெற்றது.** ஆக மானிட இயக்கத்தின் ஊற்றாக இருக்கிற சிந்தனை, கருத்து, இலக்கியம், தத்துவம் ஆகிய அனைத்தும் திருக்கோயிற் சூழலிலேயே காணப்பெற்றன; படைக்கப்பெற்றன.

**மனித உரிமையை மதிக்கும் தத்துவம்**

நாங்கள் எவருக்கும் அடிபணியத்தேவையில்லை. அது எமது அடிப்படை உரிமை. இறைவனுக்கே அன்றி வேறு யாருக்கும் அடிபணிய மாட்டோம் என்பதனை இப்பாடல் எடுத்துக்கூறுகிறது :-

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்: நடலையில்லோம்,
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்,
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான **சங்கரன்நற்**
**சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்**
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே"

**மனிதப்பிறவி**

" இந்தஉல கத்தில்உள்ள பொருள்க ளெல்லாம்
இயற்கையிலே முறையாக வளர்ந்து உயர்ந்து
வந்து, பல மாற்றங்கள் அடையும்! ஆனால்
**மனிதன் மட்டும்திறமையொடு பிறக்கின் றான்காண!**
இந்தஉல கப்பொருள்கள் யாவற் றுக்கும்
**தலைமையினை ஏற்கின்ற தகுதி பெற்றான்!**
அந்தமனி தன்பெருமை ஒருவ ராலும்
அளந்துவிளக் கிடஇயலா அருமைத் தாகும்"

**" மனிதனது ஞானம்எல்லா ருடனும் எல்லை**
**வரையறைகள் ஒதுக்கங்கள் யாது மின்றிப்**
**புனிதமொடு பகிர்ந்துகொள்ளத் தக்க தாகும்**
போந்தமனி தப்பிறிவிக் குரிய செய்தி
நனிவிழிப்பாய் எப்போதும் இருப்ப தாகும்
**நாளும் அவன்இலக்கு, மேம்பா டுறுத லாகும்**
**எனின்அந்தப் பொழுதில்தான் உண்மை யான**
பயன்பாட்டு மனிதனென **ஏற்றம் கொள்வான்!**"

" New Concept of man" எனும் ஜப்பானிய முறையை அனுகி எழுதப்பட்ட ஆங்கிலக் கதையின் தழுவலாக தவத்திரு குன்றக்குடிஅடிகளால் எழுதப்பட்ட இந்தக் கவிதை 14.01.1986இல் கோவை அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பானது. இது மனிதப்பிறவியின் மேன்மையை எடுத்துக்காட்டுகின்றது. எமக்கு ஆண்டவன் தந்த வரம் இந்த மனிதப்பிறவி. எனவே புனிதமான உன்னத வாழ்வு வாழ வேண்டியது எமது கடமை. அதற்கு வழிவகுக்கவே சிவத்தொண்டுப் பயிற்சி அமைக்கப்பட்டுள்ளது.

**தாய்மைக்குப் பெருமை சேர்க்கும் தத்துவம்.**

வாழ்விற்கு உறுதுணையாக அமைவது குடும்பம்.. பெண் வாழ்க்கைத்துணை. வெறும் வாழ்க்கைத் துணை மட்டுமல்ல. அது புனிதமான தாய்மை. அந்தப் பெருமையை உணர்த்துவதே சைவசித்தாந்தத்தின் நோக்கம். சிவபெருமானின் அருளே, சக்தி என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருளது சக்தியாகும்"

என்றார் சிவஞான சித்தியார். மெய்கண்ட நூல்களும் திருமுறைகளும் இறைவனை அம்மையப்பராகவே போற்றிப் பரவுவதைக் காணலாம். சித்தாந்தச் செந்நெறியின் தொன்மை வழிபாட்டுத் திருமேனி, அம்மையப்பர் திருமேனியாகவே இருந்திருக்க வேண்டும் என்பது நூலறிந்தோரின் துணிபு. சங்க இலக்கியங்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களிலும் அம்மையப்பர் திருவுருவே போற்றிப் பரவப் பெறுகிறது.

"............சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்னமேனி"

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன்............"

"பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று"

என்பவற்றையும் காண்கிறோம்.

"தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

என்பது திருவாசகம். அம்மையப்பர் திருக்கோலத்தையே "தொன்மைக்கோலம்" என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

"அண்ணலார் **அருட் சக்தியும் சிவனும்**
**ஆய தன்மையின** அன்று தொட்டுலகம்
பெண்மை ஆண்மை என் றிருவகைப் புணர்ப்பாற்
பிறங்கும்............"

இவை காஞ்சிப் புராணத்தில் வரும் வரிகள். இவையும் அர்த்தநாரீஸ்வரராக சிவ சக்தியைப் போற்றும் எமது சமய மகிமையை எடுத்துக் காட்டுகிறது.

**பணிகளுடனும் பிரார்த்தனையுடனும் ஆன்ம ஈடேட்டம் வேண்டும். ஆழ்ந்த அர்த்தம் மிக்க சமய தத்துவங்களை உணர வேண்டும்.**

"கருணை ஒன்றே வடிவாகி எவ்வுயிரும்
தம் உயிர்போல் கண்டு ஞானத்
தெருள் நெறியில் சுத்த சிவ சன்மார்க்கம் பெருநீதி செலுத்தா நின்ற"
- என்கிறது திருவருட்பா

கற்பூரம் / எங்கள் வாழ்வு செப்பமான வாழ்வாக வேண்டும்.
- கற்பூர ஆரத்தி தத்துவம்

எங்கள் ஆத்மா பரமாத்மாவைக் குறிப்பது கற்பூர தீபமாகும்.
கற்பூர தீபம் - ஞானாக்கினி
அதனால் மலம் நீங்க ஆன்மா சிவகரணம் பெறும்.
கற்பூரம் கரைவதுபோல் - ஆன்மா சரீரம் நீங்கி இறைவனுடன் ஒன்றுபடும்.

**கற்பூரத்தை ஏன் தொட்டுக் கும்பிடுகிறோம்?**

நாமும் ஒரு நாளைக்கு கற்பூரத்தைப்போல் எரிந்து, ஒன்றுமில்லாது ஆகிவிடுவோம் என்பதை உணர்த்தத்தான், அதை ஒருமுறை தொட்டு, கண்ணில் ஒற்றிக் கொண்டால் போதும், நாம் ஒப்புக்கொண்டதாய் ஆகிவிடும்.

**கோயிலில் எத்தனை தேங்காய் உடைக்கலாம்?**

ஒரு தேங்காய் உடைத்தாலே போதும்! அந்தத் தேங்காய், மூன்று கண் உடையதாக இருக்க வேண்டும்! நம்மிடம் இருக்கும் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை இவைகளை போக்கிவிட்டோம் என்று கடவுளுக்கு நேர்ந்துகொள்கிறோம். எனவே நூறு, ஐம்பது என, தேங்காயை உடைக்க வேண்டிய அவசியமில்லை.

**பொட்டு வைப்பது எதற்காக?**

இறைவன் இருக்கும் புருவ மத்தியைத் தொட்டுக் காட்டத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சமயம் வெறும் கிரியை, அபிஷேகம் விழாக்கள் மட்டும் அல்ல ஆழ்ந்த தத்துவம் மிக்கது.

எமது மூதாதையோர் விஞ்ஞானிகளுக்கு மேலான அறிவுபடைத்தவர்கள் எனத் தயங்காமல் கூறலாம். அவர்களின் வழிகாட்டலில் இன்றும் கணிக்கப்படும் பஞ்சாங்கங்கள் அதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. இவ்வருடம் ஆடிமாதம் 17ஆம் திகதி (01.08.2008) பூரண சந்திர கிரகணம் என பஞ்சாங்கங்கள் கணித்துள்ளன. இனிமேல் தான் மேனாட்டு விஞ்ஞானிகள் , அறிவிப்பாளர்கள் இதோ பாருங்கள எங்கள் மூதாதையோர் தந்த அறிவுக் களஞ்சியமாக பஞ்சாங்கக் கணிப்பு யாழ்ப்பாணத்திலிருந்து இக்காலகட்டத்திலும் கணிக்கப்பட்டு இருக்கிறது.

**சர்வாதாரி வருஷ கிரகணங்கள்**

(1) ஆடி மாதம் 17ஆம் திகதி (01.08.2008) வெள்ளிக்கிழமை மாலை **பூரண சூரிய கிரகணம்**. இலங்கையில் பார்சுவ கிரகணமாகத் தோற்றம்.

| இடங்கள் | ஸ்பர்சம் | மத்யம் | மோட்சம் | பரிமாணம் |
|---|---|---|---|---|
| | ம நி | ம நி | ம நி | |
| யாழ்ப்பாணம் | 04 - 50 | 05 - 31 | 06 - 07 | 0.263 |
| கொழும்பு | 04 - 59 | 05 - 33 | 06 - 06 | 0.194 |

(2) ஆவணி மாதம் 01ஆம் திகதி (17.08.2008) சனிக்கிழமை இரவு **பார்சுவ சந்திர கிரகணம்**. இலங்கைளில் தோற்றம் கிரகண பரிமாணம். 0.812

| நிலை | ம நி |
|---|---|
| ஸபர்சம் | 01 - 05 |
| மத்யம் | 02 - 40 |
| மோட்சம | 04 - 14 |

தை மாதம் 13ஆம் திகதி (26.01.2009) திங்கட்கிழமை பால் **கங்கண சூரிய கிரகணம்**. இலங்கையில் பார்சுவ சூரிய கிரகணமாகத் தோற்றும்.

| இடங்கள் | ஸ்பர்சம் | மத்யம் | மோட்சம் | பரிமாணம் |
|---|---|---|---|---|
| | ம நி | ம நி | ம நி | ம நி |
| யாழ்ப்பாணம் | 02 - 13 | 03 - 16 | 04 - 13 | 0.251 |
| கொழும்பு | 02 - 03 | 03 - 12 | 04 - 12 | 0.285 |

**கோயில்களைப் பேணுதல்**

நம்முடைய வாழ்க்கை முழுவதுக்கும் - மையமாக - ஆதாரமாக விளங்கும் திருக்கோயிலகள் நமது செல்வங்கள். திருக்கோயில்களைச் சற்றும் சிதைவுபடாமல் நாம் பேணல் வேண்டும். மிகப்பெரிய திருக்கோயில்களை எடுத்த மன்னர்கள் கூட எடுத்த பெருமையை விடப் பேணும் பெருமையே சிறந்தது என்று கருதியிருக்கிறார்கள். தென்காசித் திருக்கோயிலை எடுத்த பாண்டிய மன்னன், திருக்கோயிலை எடுப்பித்து முடித்த பிறகு வெட்டி வைத்த கல்வெட்டில் பின்வருமாறு பொறித்து வைத்துள்ளார்.

"ஆராயினும் இந்தத் தென்காசி
மேவும் பொன் ஆலயத்து
வாராத தோற்குற்றம் வந்தால்
அப்போதங்கு வந்து, **அதனை**
**நேராக வேயொழித்து துப் புரப்**
**பார்களை** நீதியுடன்
பாரா றறியப் **பணிந்தேன்**
**பராக்கிரம பாண்டியனே**"

என்பது அக்கல்வெட்டுப் பாடலாகும்.

நாமனைவரும் நம்முடைய திருக்கோயில்களைக் கண்ணெனப் பேணுவோமாக!. சிற்பங்களையும் ஓவியங்களையும் பாதுகாப்போமாக! திருக்கோயில் தூய்மை, நமது தூய்மை. திருக்கோயிலைப் பேணல் ஒரு கலைத்தொண்டு. நமது வாழ்வியலோடு கலந்த கலைச்செல்வமாகிய திருக்கோயிலை நாளும் பேணுவோமாக!

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

"**திருக்கோயில் இல்லாத** திருவி லூரும்
திருவெண்ணீறணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா வூரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்போடு வெண் சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
**அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே"**

என அப்பர் பெருமான் திருவாய் மலர்ந்தார். திருவுருவ வழிபாட்டில் அசையாத நம்பிக்கை கொண்ட எமது இனம் திருக்கோயில்களில் பரம்பொருளை உணர்ந்தனர். ஆலய அமைப்பு பக்தி நெறி பரப்பும் ஒரு கருவியாக அமைந்தது.

**தமிழ்க் கல்வெட்டுகளில் கோயில் சார்ந்த அறநிலைகள்**

**முனைவர் கா. ஆ. ரங்கசாமி ஆய்வின்படி**

- தமிழ்நாட்டில் 32 **அறங்கள்**
- கோயில்களில் பொருளியல் அரசியல் வாழ்வியல் மையங்கள் இருந்தன
- அறங்காவலர்கள் நீதிபதிகளாய **நீதி** வழங்கினார்
- கோயில் பண்டாரம் வைப்பகமாக **வங்கியாக** இருந்தார்
- அவைகடன் உதவியும் செய்தன
- **பள்ளிகள், கலைக்கூடங்கள்** அமைந்தன
- நூலகம் - (பெயர் : **சரஸ்வதி பண்டாரம்**) இருந்தன
- **மருத்துவம்** செய்யப்பட்டது + மருத்துவக் கல்வி வழங்கப்பட்டது
- **மடம் / தர்மசத்திரம் - அன்னதானம்**
- ஆவணக்களரி
- அவைக்கூடம்
- கலைக் கூடம்

இவை எல்லம் மனித இதயங்களுக்கு அருகில் தெய்வங்களைக் கொண்டுவருஞ் சிற்பக் கலைக் கூடங்களாக கோயில்கள் திகழ்ந்தன

**சேவை + பிரார்த்தனை**
"அறமே மறங்கள் முழுதழிக்கும்
அறமே கடவுள் உலகேற்றும்
அறமே சிவனுக்கொரு வடிவமாகும்"
- காஞ்சிப்புரானந்தத்தில் **சிவஞானமுனிவர்**

**அகதிகள்** - வசதியற்றோர் — **தேவைப்படுவோர்**

**"மண்ணுலகத் திலே உயிர்கள் தாம்** வருந்தும்
**வருத்தத்தை** ஒரு சிறிதேனும்
கண்ணுறப்பார்த்து செவியுறக் கேட்டும்
**கணமும் நான் சகித்திடமாட்டேன்**
எண்ணுறுமெனக்கே நின்னருள் பலத்தால்
**இசைத்தபோதிசைத்தபோதல்லாம்**
**நண்ணுமவ் வருத்தம் தவிர்க்க** நல்வரந்தான்
நல்குதல் **எனக்கிச்சை எந்தாய** "
- **இராமலிங்க அடிகள்**

**சேர்ந்து** புசியுங்கள் - **எள்ளானாலும் பகிர்ந்துண்ணுங்கள் — சமயத்தத்துவம்**

**"காகம் உறவு கலந்துண்ணக்**
**கண்டீர்!** அகண்டகாரசிவ
போக மெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித்ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ
இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் ! செகத்தீரே !"
- **தாயுமானவர் அடிகள்**

- **"உள்ளத்தில் உண்மையொளி** உண்டாயின்
  வாக்கினிலே ஒளியுண்டாகும்" - **பாரதி**

இந்த உள்ள உண்மையொளியை **எம்மவர் ஒவ்வொருவரிடமும் வளர்த்து வாழவைக்கவல்லது** சமய **வாழ்வே. அதற்கு இந்துசமய நிறுவனங்களின் பங்களிப்பு அவசியம் ; இன்றியமையாதது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "பெருமையுடையவர் ஆற்றுவர் – ஆற்றின்
  **அருமையுடைய செயல"** - **குறள்**

- நன் கடம்பனைப் பெற்றவன் பங்கினன்
  தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
  தன் கடன் அடியேனையும் தாங்குதல்
  **என் கடன் பணிசெய்து கிடப்பதே.**
  - **தேவாரம்**

- **மக்கள் சேவை மகேஸ்வரன் பூசை**

- "**அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி** விட்டுவிட்டால்
  இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" - **தாயுமானவர்**

- தாயுமானவர் மீண்டும் ஓர் இடத்தில் கூறினார்
  "**எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
  **அல்லாமல** வேறொன்றறியேன் பராபரமே"

- ஊருக்கு உழைத்திடல் யோகம்
  நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
  **போருக்கு நின்றிடும் போதும்**
  உளம் பொங்கல் இல்லாத
  அமைதி **மெஞ்ஞானம் - பாரதி**

- "யாவர்க்கும் ஆம் இறை வற்கொரு பச்சிலை
  யாவர்க்கும் ஆம் பசுவுக்கொரு வாயுறை
  **யாவர்க்கும் ஆம் உண்ணும் போதொரு கைப்பிடி**
  யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே"
  *- திருமந்திரத்தில் திருமூலர்*

- வான் முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க!
  மன்னன் கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
  நான் மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
  **மேன்மைகொள** சைவநீதி விளங்குக **உலகம் எல்லாம.**

- "**உலகத்திலே நீ இரு, ஆனால்**
  **உலகம் உன் இடத்தில் இருக்கக் கூடாது,**
  குடும்பத்தில் நீ இரு, ஆனால்
  குடும்பம் உன் இடத்தில் இருக்கக் கூடாது.
  உலகமும் குடும்பமும் உன்னிடத்தில்
  புகுந்தால் நீ அழுந்தி விடுவாய்
  வண்டிமேல் நீ ஏறு
  வண்டி உன்மேல் ஏறக் கூடாது.
  கப்பல் கடலில் இருக்க வேண்டும்
  கடல் கப்பலில் புகக் கூடாது
  கடல்நீர் கப்பலில் புகுந்தால்
  கப்பல் நீரில் அழுந்திவிடும்."
  – திருமுருக கிருபானந்தவாரியார்

இலண்டன் கனக துர்க்கை அம்மன் தேவஸ்தானம், மனிதநேய நிதியம் ஆகியோரின் ஆதரவுடன் அகில இலங்கை இந்து மாமன்றமும் மன்னார்மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் சிறுவர் இல்லத்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு சிவத்தொண்டரின் வாழ்த்து**

"உடனவர்க்கு வாழவழி காட்டி உண்மையினை விளக்கி
அணியினைச சிறப்பாக உருவாக்கி
சமயப்பணி சிவத்தொண்டு விழிப்புணர்வு பயிற்சி வகுப்பெடுத்து
மக்கள் மனதில் மாசில்லா இந்து ஒளி மலர்ந்திடச செய்த
எங்கள் இந்துமா மன்றம் வாழி வாழி என்றும்"

**திருமதி பேபி சரோஜா**
பண்ணிசை ஆசிரியை
இலண்டன் கனகதுர்க்கை அம்மன்
சிறுவர் இல்லம் மன்னார்

**ஒரு சுருக்கக் கண்ணோட்டம்**

- மகேஸ்வர பூஜை
- மக்கள் சேவை
- சிவத்தொண்டு
- சமூக சேவை

**சிவதொண்டர் சேவைக்குள் அடங்குபவை**

- தியானம்
- பண்ணிசை
- அன்னதானம்
- கல்வி கருத்தரங்கு
- நிவாரண உதவி
- நீதி/மத்தியஸ்தம்/சமாதானம்
- வைத்திய பீடம், முதலுதவி.
- பிரார்த்தனை
- கோயில் திருத்தொண்டு
- சிறுவர் / முதியோர் இல்லம்
- பிரசார நூலகம்
- மருத்துவம்
- சுக நலம், சூழல் தூய்மை
- தலைமை

**மக்கள் சேவையே மகேசன் சேவை**



# DANCE OF SIVA

"No atom moves but by His motion", so said our ancient sages. This rule applies to the microcosm as well as to the macrocosm. After considerable researches, modern science accept this fact partly today. In the same way as it has discovered the secret in the heart of the atom, it must ultimately delve into the cret of the human heart, which is the sacred platform (Arangu) for the Dance of ss by Nadarajah, the Supreme Lord of the Universe.

ccording to Saiva scriptures, Chidambaram is the heart of the Universe. In one of iring poems ( சன்மார்க்கஞானமதின் ) the great Saint Thayumanavar of the 18th emphasises that the ideals of all religions find their fulfilment in Chidambaram, the common ground of all faith and the leveller of all creeds. The unique features of Chidambaram lies in the fact that in this sacred Shrine alone the God Almighty is worshipped in all His three important aspects,- Sakala, Nishkala and Sakala- nishkala,*i.e*, with form, without form, and both combined. Nadarajah represents the Lord with form. The formless aspect is known as Chidambara Rahasya. The third aspect is known as Spadikalingam.

Coming to some brief details of the Dancing Siva, the drum held in his right hand represents His act of Creation, the fire in His left hand stands for Destruction, the left hand turned downwards towards the right side represents Protection, the right foot firm on the prostrate human body stands for Involution, and the raised left foot stands for Salvation of the souls. The prostrate body represents human egoism, which has got to be crushed out before salvation.

**K. Ramachandra**
*Courtesy: Religious Digest*
*( Oct - Dec 1969 )*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்றச் செய்திகள்

**புதிய யாழ்பல்கலைக்கழக துணைவேந்தருக்கு வாழ்த்து**

பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்கள் யாழ்.பல்கலைக்கழக புதிய துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருப்பதில் அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமையடைகிறது. நம் நாட்டில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் பதவியேற்ற முதல் இந்து,தமிழ் பெண்மணியென்பதாலும், ஆழ்ந்த அறிவும், ஆளுமையும், ஆன்மீக ஈடுபாடும் உள்ள ஒருவர் என்பதாலும் இவ்வுயர் பதவி கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். யாழ்ப்பாண கலை,கலாசார விழுமியங்கள் தெரிந்தவர் அதில் திளைத்தவர் என்பதால், நாம் பண்பாட்டுக்கோட்பாடுகள் சீரியமுறை எடுத்துச்செல்லப்படும் என்பது எமது நம்பிக்கை.

பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்களின் நியமனத்தால் யாழ்.பல்கலைக்கழகம் கல்வி,கலை, கலாச்சார, இந்து சமய விழுமியங்கள் மேன்மேலும் மெருகுபெறும் என்பது உறுதி. யாழ்.மாணவர்கள் கடந்த பல வருடங்களாக கல்வியில் பின்தங்கியிருந்தார்கள் என்பது வரலாறு, யுத்த சூழலால் பல்வேறு துன்பங்களுக்குள்ளான யாழ் சமூகம் தற்போது சற்று நிம்மதிப்பெருமூச்சு விடுகிறது.

நீண்டகால கல்வி வரலாற்றை பாரம்பரியமாக கொண்டிருந்த எமது சமூகம் காலம் செய்த கோலத்தால் பல வகையிலும் பின்தள்ளப்பட்டுவிட்டது. இந்த வரலாற்றை மாற்றியமைத்து சிறந்த கல்வியறிவான, பிரசைகளை சமய நெறி பிறளாது வழிநடத்தும் பணி புதிய துணைவேந்தருக்கு தரப்பட்டிருக்கிறது. யாழ் மண்ணின் பின்புலம் தெரிந்தவர், அறிவு, ஆளுமை கொண்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை எதிர்காலசந்ததி யினருக்கு முன்மாதிரியாக கொண்டுவருவார் என்பது திண்ணம்.

2005ம் ஆண்டு அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ் மண்ணில் பொன்விழாக் கொண்டாடியபோது பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் தலைமை வகித்தார்கள், அவ்வேளை யாழ். பல்கலைக்கழக சமூகம் எமக்குத்தந்த பங்களிப்பையும், பேராதரவையும் மாமன்றம் இவ்வேளையில் நினைவு கூர்கிறது. நான் யாழ் பல்கலைக்கழக பேரவை அங்கத்துவனாக பணியாற்றிய காலத்தில் புதிய துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்களோடு பழகும் வாய்ப்புக்கிட்டியது. அப்போது அவரின் ஆளுமை, மனிதநேயம், கடமையுணர்ச்சி என்பவை புரிந்தது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு கலாசார விழுமியப் பெருமைகளை புரிந்துகொண்ட அதன் பின்னணியில் வாழ்ந்த ஒருவர் மிகமிகத் தேவை. அதற்கு நீங்கள் பொருத்தமானவர் என்பதில் நாம் பெருமையடைகிறோம். இவ்வாறான ஒருவரே யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப்படவேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்தினோம். அந்த வகையில் எமக்கு மட்டில்லாமகிழ்ச்சி.

யாழ்ப்பாணத்தில் சரித்திரம் படைத்த தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்து ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பிப்பதற்கும், பட்டப்பின் படிப்பினை மேற்கொள்வதற்கும் யாழ் பல்கலைக்கழக மாணவியொருவருக்கு மாமன்றம் நிதியுதவி வழங்கிவருகிறது.

யாழ் மண்ணில் இந்து கலாசார பெருமைகளையும், அதன் பாரம்பரியங்களையும் நம் சமூகத்திடம் கொண்டு செல்லவும், அதனை மேம்படுத்தவும் சகல வழிகளிலும் அகில இலங்கை இந்து மாமன்றம் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டும் என உறுதி கூறுகிறோம். நம்பிக்கையுடன் உங்கள் பணியை தொடருங்கள், மாமன்றம் சமயப்பணிகளில், சமூகப் பணிகளில் பின்பலமாக நிற்கும். துணைவேந்தர் பணி சிறக்கவும், நலமோடு நீண்டகாலம் சேவையைத் தொடரவும் அருள் மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருள்கிடைக்க எமது ஆசிகள்.

**தினக்குரலுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்**

தமிழ் மக்களின் பேரபிமானத்தையும், பெருமதிப்பையும் பெற்று வரலாறு படைத்துவரும் தினக்குரல் 15வது ஆண்டினில் காலடி பதித்து வெற்றிநடை பயிலவிருக்கும் இவ்வேளையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் இதயம் கனிந்த இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எல்லா நாளிதழ்களும் ஒரே மாதிரி செய்திகளை தொகுத்து வெளியிட்டுவிட்டால் பல பத்திரிகைகள் தேவையில்லை, ஆனால் செய்திகளைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவது, வெளியிடும் முறையில் புதுமைகாட்டுவது, பின்புலங்களை ஆராய்வது, நாட்டின் நலனில் அக்கறையுள்ள வகையில் செய்திகளைத் தொகுப்பது, இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டு நடப்புபற்றி சிந்தித்து எழுதுவது, ஆராய்வது என்பதில் தினக்குரலின் பங்கு மெச்சத்தக்கது. சமுதாய நலனுக்கு உதவுவது, மொழிவளர்ச்சிக்கு பாடுபடுவது போன்ற கடமைகளையும் செவ்வனே செய்வதில் தினக்குரல் கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

தமிழ் மக்களின் குரலாக மட்டுமல்லாது, அவர்களது அபிலாசைகளையும் எதிரொலித்துவருவது குறிப்பிடவேண்டிய ஒன்று. தமிழ் மக்களின் சோதனை காலத்தில் பத்திரிகைகளும் பல சோதனைகளை எதிர்கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் தினக்குரல் பத்திரிகாதர்மத்தில் நின்று மாறாமல் மக்களின் ஏக்கங்களுக்கும், எண்ணங்களுக்கும் வடிகாலாக பல கருத்துக்களை சமயோசிதமாக பத்திகளில் படைத்து ஆறுதல்படுத்தியது.

எல்லாவற்றுக்கும் மேலாக தினக்குரல் இன்னுமோர் அரிய பணியைச் செய்து வருகின்றது. எம்மவரிடையே சிந்திப்பவர்கள் போதாது, அந்நிலையில் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி எமது மக்களைச் சிந்திக்கவைக்கும் **"ஆசிரிய தலையங்கங்கள்"** சாதித்து வரும் சிறப்பை நாம் என்றும் மனதார மெச்சுகின்றோம்.

நவரசங்களையும் தன்னுள் அடக்கி வாசகர்களை தனது குறிக்கோளாக வைத்து வெற்றிவாகை சூடி 15வது அகவையில் கால்பதிக்கும் இவ்வேளையில் தினக்குரலின் உரிமையாளர், ஆசிரிய பீடத்தினர், அலுவலர்கள், விளம்பரப் பகுதியினர், விநியோகப்பகுதியினர், அச்சகப்பகுதியினர் என அனைவருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திரிகைத்துறையில் மட்டுமல்ல ஆன்மீகப்பணியிலும் தன்னை ஈடுபடுத்தி எமது மாமன்றத்தின் உபதலைவர்களுள் ஒருவராகவும், வடகொழும்பு இந்து பரிபாலன சபைத் தலைவராகவும், தினக்குரல் பத்திரிகை நிறுவனத் தலைவராகவும் பணியாற்றும் எமது இனிய நண்பர் திரு. எஸ்.பி.சாமி அவர்களின் முயற்சியும், பணியும் மேன்மேலும் சிறக்க ஆண்டவன் நீண்ட ஆயுளை தரவேண்டும் எனப்பிரார்த்திக்கிறோம்.

**சைவவித்தகர் பட்டப்படிப்பு நெறி**

அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ்ப்பாணம் இந்து மாமன்ற பிராந்திய நிலையத்தில் இக்கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது. இந்நாட்டில் சைவ சமயப் பிரசாரகர்களையும் சமயத் தொண்டர்களையும் சமயத் தலைவர்களை உருவாக்குவதற்கும் இவ் விசேட பயிற்சிகற்கை நெறி முழுநேரப் படிப்பாக இடம் பெறவுள்ளது.

- ஒரு வருட கால பயிற்சி நெறியாகும்
- தங்குமிடவசதி உணவுடன் இலவசமாக வழங்கப்படும்
- பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ஊக்குவிப்பு நன்கொடையும் வழங்கப்படும்
- சமயநெறியூடாக சமூகசேவை மற்றும் ஆளுமை பற்றியபயிற்சியும் வழங்கப்படும்
- அறிவும் அனுபவமும் ஆற்றலுமிக்க பல் துறைசார் அறிஞர்களால் பயிற்சி வழங்கப்படும்
- பயிற்சியின் முடிவில் விசேட பரீட்சை நடைபெற்று, இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சான்றிதழ் வழங்கப்படும்
- இப்பயிற்சி பெற்றவர்களுக்கு அரச, சமய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்த சந்தர்ப்பம் உண்டு.

மேற்குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் நடக்கின்றன. இந்த படிப்பு நெறி 2011 மே 28ம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்திற்கான புதிய கட்டடத்திறப்பு விழா**

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்திற்கான புதிய கட்டடத்திறப்பு விழா (09.04.2011) சனிக்கிழமை இடம்பெற்றது. ஆலையடிவேம்பு இந்துமாமன்ற கட்டிடசெலவில் கணிசமான தொகையை அகில இலங்கை இந்துமாமன்றம் பொறுப்பேற்றது. இவ் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் மனிதநேயர், இந்து சிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை கட்டிடத்தை திறந்துவைத்தார். அங்கு அவர் உரையாற்றுகையில் எமது இந்து மக்களின் வறுமையை காரணம் காட்டி பலர் அவர்களுக்கு சலுகைகளைவழங்கி மதம் மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். உலகில் காணப்படும் மதங்களில் இந்துமதத்திற்கென தனியிடம் உண்டு. இந்து மதத்தில் பொதிந்துள்ள கருத்துக்களை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் தெளிவூட்டுவதற்கு இந்து அமைப்புக்கள் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் அண்மையில வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொண்ட ஆலையடிவேம்பு இந்துமாமன்றம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப்பொருட்கள், சீருடைத்துணிகள், அப்பியாசப் புத்தகங்கள் என்பவற்றை வழங்குவதில் முன்னின்று செயற்பட்டது. இந்து சமயத்தை விழிப்படையச் செய்வதற்கும் மதமாற்றத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கும் இவ்வாறான அமைப்புகள் செயல்படும் விதம் பாராட்டுக்குரியது என்றார். அதேவேளை இங்கு திறக்கப்பட்டுள்ள இக்கட்டிடத்தை இந்துக்கள் அனைவரும் சமய விழாக்களுக்கு பயன்படுத்தி நன்மையடைய வேண்டும் எனவும் மேலும் குறிப்பிட்டார்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகளின் இரத்மலானை மாணவர் விடுதிக்கு நன்கொடையாகவும், மாணவர்களது போசனத்திற்காகவும் கிடைத்த நிதி உதவிவிபரம்.

**தை – 2011**

| | |
|---|---|
| 1. திரு. சண்முகசுந்தரம் | 5 000/= |
| 2. திரு. சிதம்பரநாதன் | 10 000/= |

**மாசி – 2011**

| | |
|---|---|
| 1. திருவாடு துரை ஆதீனம் (இந்திய ரூபா) | 1 000/= |
| 2. திரு. K. ஜெகநாதன் | 2 000/= |
| 3. திரு. S. இராமச்சந்திரன் | 3 000/= |
| 4. திரு. C.K. சகாதேவன் | 5 000/= |
| 5. திரு. S. குலசபாநாதன் | 5 000/= |

**பங்குனி – 2011**

| | |
|---|---|
| 1. மனேஜர் அஸ்பெஸ்டஸ் சீமேந்து கைத்தொழில் லிமிட்டட் | 10 000/= |
| 2. திரு. வி. நவரட்ணம் | 5 000/= |
| 3. திரு. S. இராமச்சந்திரன் | 3 000/= |
| 4. திரு. C.K. சகாதேவன் | 5 000/= |
| 5. திரு. S. குலசபாநாதன் | 5 000/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்மலானை விடுதி நன்கொடைகள்.**

இரத்மலானை மாணவர் விடுதிக்கு சமைத்த உணவு, உப உணவுப் பொருட்கள், பால்மா, உடுப்புவகைகள், மருந்துவகைகள் மற்றும் விடுதிக்குரிய பாவனைப்பொருட்கள், அத்தியவசியப் பொருட்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியவர்களது விபரம்.

தை – 2011

1. Ceylinco Life
2. Dr. உமயோன்
3. சாயி சமிர்த்தி
4. விஷ்ணு கோயில்
5. திரு. வைத்தீஸ்வரன்
6. திரு. சபாரட்ணம்
7. திருமதி. S. செல்வேந்திரராஜா

மாசி – 2011

1. சக்தி மிஸ்
2. திருமதி. சுரபி. மகேந்திரா
3. திருமதி. I. தவேந்திரா
4. பெருமாள்
5. திரு. ரவீந்திரன்
6. சென்தோமஸ் இண்டரெக் கிளப்
7. திருமதி. தவேந்திரா
8. திரு. A. சூரியகுமார்
9. விஷ்ணு கோயில்
10. சாயி சமிர்த்தி
11. சிறியாணி ஹோட்டல்
12. திரு. P. ரவி
13. திருமதி. P. கவித்தா
14. திரு. M. கந்தையா
15. முத்துக்கிருஷ்ண சுவாமி மிஷன்
16. திரு. S. ராகுலன்
17. திரு. S. கிருபானந்தமூர்த்தி

பங்குனி - 2011

1. திரு. குமார். ரவீந்திரன்
2. திரு. எஸ். கிருபா
3. தலைவர். இன்னர் வீல் கிளப்
4. திருமதி. சகுந்தலா. நாதன்
5. தர்ஷிகா மற்றும் மதுலா
6. திருமதி. லோகா. கந்தசாமி
7. திரு. சிவதர்ஷிசர்மா
8. திருமதி. கருணானந்தன்
9. சாயி சமிர்த்தி
10. விஷ்ணு கோயில்
11. முத்துக்கிருஷ்ண சுவாமி மிஷன்
12. திரு. ராகுலன்
13. திருமதி. S. செல்வேந்திரராஜா

**மனிதநேய உதவிகள் தொடர்கின்றன**

கிழக்கு மாகாணத்திலும், மன்னாரிலும் சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாமன்ற அங்கத்துவ சங்கங்களான மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றம், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, கிழக்குப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கம், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் மூலம் நிவாரணப் பொருட்கள் வழங்கியிருக்கிறோம். இதற்கு மனிதநேய நிதியமும் உதவி வருகிறது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவும் திட்டத்தின் தொடரில் விதவைத் தாய்மார்களுக்கு பசுமாடு, தையல் மெசின் வழங்கும் திட்டமும், யாழ்ப்பாணத்தில் 24.01.2011 அன்று ஆரம்பமானது. ஒரு பசுமாடு வழங்கவும், பராமரிப்பு உதவிசெய்யவும் ரூ. 50,000.00 உதவி தரலாம். தையல்மெசின் ஆதரவுக்கு தலா ரூ 50,000.00 உதவி தரலாம். இப்புனிதப் பணிக்கு உதவவிரும்பும் நன்கொடையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்புகொள்ளவும்.

வெள்ள நிவாரணப் பணித் தொடரில் மாணவர்களுக்கு சீருடைத் துணி வழங்கவும், அப்பியாசப் புத்தகங்களை வழங்கவும் ஒழுங்கு செய்கிறோம். ஒரு மாணவன் அல்லது மாணவிக்கு உதவ ரூ 500.00 (சீருடைத் துணிக்கும்) அப்பியாசப் புத்தகப் பொதிக்கு தலா ரூ.200.00ம் வழங்கி உதவுமாறு சகல அன்பர்களையும் வேண்டுகிறோம்.

**இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவர் விடுதியின் 13வது ஆண்டு நிறைவும், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களின் நினைவுப்பேருரையும்**

அகில இலங்கை இந்துமாமன்றம் 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவர் விடுதியின் 13வது ஆண்டு நிறைவும், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களின் நினைவுப்பேருரையும் இரத்மலானை இந்துக் கல்லூரிமாணவர் விடுதியான சக்தி இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் சக்தி இல்லம் அமைவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர்கள் பற்றியும், வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை அவர்கள் ஆற்றிய பணிபற்றியும் குறிப்பிட்டார். அமரர் வேலாயுதபிள்ளை அவர்களது நேர்மை, இளகியமனம், செயல்திறன் என்பன சக்தி இல்லக் கனவை நனவாக்கியது என்றார். இப்பணியில் மனிதநேயர் கயிலாசபிள்ளை, திருமதி. கயிலாசபிள்ளை தம்பதியினர் விடுதி மாணவர்களுக்கு வழங்கிவரும் உதவிகள், ஆதரவுகள் பற்றியும் எடுத்தியம்பினார்.

வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களின் நினைவாக அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனம் தவத்திரு ரிஷி தொண்டுநாத சுவாமிகள் 'இறைபணிநிற்க' எனும் பொருளில் ஆன்மீக உரை நிகழ்த்தினார். எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை பணிந்து, உறுதியாக நின்று, பணிசெய்யுங்கள் என்பது அதன் பொருளாகும். பணிவு என்பது நெற்பயிரானது வளர்ந்து கதிர் வந்து முற்றி தலை சாய்ந்து நிலம் நோக்கி நிற்பதுபோலவும், வாழையானது வளர்ந்து குலைபோட்டு நிற்பதுமட்டுமல்ல அவ்வாழை தலைசாய்ந்து குட்டியினையும் தந்து தன் பணியை முடிக்கும். மனிதன் இறைவனுக்கு பணிந்து சேவை செய்யவேண்டும். இறைபணியென்பது இறைவனுக்கு மட்டும் செய்கின்ற பணியாகாது. திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி கூறுவது இறைவனுக்கு பணிசெய்வது போல் இறை அடியார்களுக்கும் தொண்டு செய்யவேண்டும். அப்போதுதான் இறைவனும் ஆனந்தமடைவார், அதே போன்று அடியாரும் சந்தோசமாவார். 'இறைபணிநிற்க' என்பதில் வருகின்ற கடைசிப் பதமான 'நிற்க' என்பது எதிலும் உறுதியாக இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. சுவாமி விவேகானந்தர் கூறுவார்எதிலும் உறுதியாக நில்லுங்கள் தளர்ந்துபோகாதீர்கள் என்று. அதாவது எடுத்த காரியத்தில் உறுதியாக நிற்பது என்பது வெற்றியைக்கொடுக்கும். நாம் இறைவனுக்கோ, இறையடியார்களுக்கோ பணி செய்வதில் உறுதியாக இருந்தால் மன அமைதிகிடைக்கும் என விளக்கினார். இதைவிட திருக்கேதீஸ்வரம் சென்றிருந்த வேளை அகில இலங்கை இந்துமாமன்ற மாணவர்கள் கைகளில் சிவதொண்டர் அணியென்ற பட்டிகளை அணிந்த வண்ணம் ஆலயம் செல்லும் பாதை இருமருங்கிலும் நின்று ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களுக்கு பலவகையிலும் தொண்டாற்றிக்கொண்டிருந்தது இறைபணிக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் இருந்தது என தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் குறிப்பிட்டார்.

அப்பர் சுவாமிகளின் தொண்டிலே மனம் ஒன்றிய அப்பூதியடிகள் அவர் பெயரிலேயே தண்ணீர்ப்பந்தல் அமைத்து அடியார்களுக்கு தாகசாந்தி செய்தார். ஆன்னதான சத்திரங்கள் அமைத்து தொண்டாற்றினார். தொண்டு என்பது இறைபணிமட்டுமல்ல இறையடியார் களுக்குச் செய்வதும் தொண்டுதான் எனக் குறிப்பிட்டார். இந்த விழா முடிவடைந்ததும் இங்குள்ள சிறிய பத்திகைத்துண்டுகள், குப்பைகளை சிறுவர்களாகிய நீங்கள் ஒவ்வொன்றாக எடுத்து குப்பைக் கூடையில் இட்டால் அதுவும் தொண்டுதான், அது மட்டுமல்ல இங்குள்ள நாற்காலிகளை எடுத்து ஒழுங்காக அடுக்கிவைத்தீர் களானால் அதுவும் நீங்கள் சக்தி இல்லத்துக்குச் செய்யும் பணிதான் என சக்தி இல்லப்பிள்ளைகளுக்கு பணி பற்றியும் விளக்கினார். நாம் செய்கின்ற பணி பெரியமாற்றத்தைக் கொண்டு வரா விட்டாலும். அதில் ஓர் அர்த்தமோ, நன்மையோ இருக்கவேண்டும் எனவும் கூறி தனது உரையை முடித்தார். இலங்கை இந்துமாமன்ற தலைவர் மனிதநேயர் கயிலாசபிள்ளை அவர்கள் தமது தலைமையுரையில் 50 பிள்ளைகளுடன் ஆரம்பமான மாணவர் விடுதியில் தற்போது 100 ஆண்பிள்ளைகளும், 50 பெண்பிள்ளைகளும் விடுதியில் இருந்து கல்வி கற்று வருகின்றார்கள் என்றார், அவர்களது பராமரிப்பு மட்டுமல்ல கல்வியில் சிறந்து விளங்க கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், கணிணி போன்றவற்றிற்கு பிரத்தியேக வகுப்பு நடத்திவருவதாகவும் குறிப்பிட்டார். அதன் பின்னர் சக்தி இல்ல மாணவர்களின் வழமையான பிறந்த நாள் கொண்டாட்டமும் இடம்பெற்றது. அந்தந்த மாதத்தில் பிறந்த மாணவர்கள் வரிசையாக அமர்ந்து கேக் வெட்டி விழாவுக்கு வந்திருந்த அனைவரதும் ஆசீர்வாதத்துடன் 'ஹப்பிபேத்டே' கொண்டாடி மகிழ்ந்தனர்.

**யாழ்ப்பாணத்தில் இந்து ஒளி வெளியீடு**

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகத்தையொட்டி மாமன்றத்தின் காலாண்டிதழான இந்து ஒளியின் தை-பங்குனி வெளியீடு மகாகும்பாபிஷேக சிறப்பிதழாக மலர்ந்திருந்தது.

மேற்படி ஆலயத்தின் கும்பாபிஷேக தினமான ஜனவரி 24ஆம் திகதியன்று ஆலய மண்டபத்தில் இந்து ஒளி வெளியிட்டு வைக்கப்பட்டது. மாமன்றத்தின் உபதலைவரான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வின்போது கும்பாபிஷேக வைபவத்திற்காக இலண்டனில் இருந்து வருகை தந்திருந்த இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கப் பிரமுகரான திரு.வ.இ. இராமநாதன் அவர்கள், மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளரான திருமதி. அ.கயிலாசபிள்ளை அவர்களிடமிருந்து சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தேவஸ்தான விற்பனை நிலையத்தில் இந்து ஒளி சஞ்சிகைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டு அன்பர்கள், அடியார்கள் பெற்றுக்கொண்டனர்.

**மாமன்றத்தின் வாழ்வாதார உதவித் திட்டம்**

ஆதரவற்ற குடும்பத்தைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டமொன்றை மாமன்றம் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து செயற்படுத்தி வருகிறது. இந்த உதவித்திட்டத்தின்படி பசு மாடுகளை வளர்த்துப் பாராமரித்தலுக்கான ஆதரவை மாமன்றம் வழங்குகிறது. இதன் முதற் கட்டமாக கடந்த ஜனவரி (2011) 24 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் இந்தத் திட்டத்தின் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2011 ஜனவரி 24 ஆம் திகதி மாலை 04.30 மணியளவில் தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான வளாகத்தில் மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி.கயிலாசபிள்ளை அவர்களது தலைமையில் நடந்த இந் நிகழ்வின்போது ஆதரவற்ற நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துகொண்டிருக்கும் பத்துப் பெண்களுக்கு பசுமாடுகளை வாங்கி, பராமரித்தலுக்கான நிதியுதவியாக ஒவ்வொருவருக்கும் 40,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது. இந்த உதவித்திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட பத்துப் பெண்களுக்குமான நிதியை மாமன்றத்தின் விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி.அ.கயிலாயபிள்ளை அவர்கள் வழங்கினார்கள்.

நிகழ்வின்போது மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி.கயிலாசபிள்ளை, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

**சிவராத்திரி நிகழ்வுகள்**

மாமன்றத்தின் சிவராத்திரி நண்பகல் நிகழ்வுகள் சமய விவகாரங்கள், விழாக்களுக்கான தலைவர் க. ஜெகதீசன் அவர்களின் அனுசரணையில் மாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் காக்கைதீவு அன்னை அபிராமி ஆஸ்ரமம் அருள்மிகு ஆன்மீககுரு பராசக்தி அம்மையார் அவர்களும், சுவாமிமாரும், தொண்டர்களும் மாமன்ற அங்கத்தவர்களும், அடியார்களும் கலந்துகொண்டனர். நண்பகல் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் அருள்பாலித்திருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சிறப்பு பூஜை, வழிபாடு என்பன இடம்பெற்றன. பூஜை, வழிபாட்டினைத்தொடர்ந்து அன்னை அபிராமி ஆஸ்ரமம் அருள்மிகு ஆன்மீககுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராசக்தி அம்மையார் அவர்களும், சுவாமிமாரும், தொண்டர்களும் கூட்டுப்பிரார்த்தியினை நடத்தினர், அன்று இடம்பெற்ற சிறப்பு பூஜையினை சிவஸ்ரீ நிவிர்த்திசாதுராஜக்குருக்கள் நடத்தினார்கள்.

**மாமன்ற சிவராத்திரி இரவு நிகழ்வுகள்**

வழமைபோல் இவ்வருடமும் மாமன்றத்தில் சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. சிவராத்திரி தினத்தன்று இரத்மலானை சக்தி இல்லப்பிள்ளைகளும் மாமன்ற உறுப்பினர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். மார்ச் மாதம் 2ம் திகதி சிவராத்திரி தினத்தன்று மாலை 6.30க்கு சாயங்காலப் பூஜையுடன் ஆரம்பமாகி நான்கு சாமமும் பூஜைகளும், வழிபாடுகளும் சிறப்பாக நடைபெற்றன. பூஜை, அபிஷேக நிகழ்வுகளை சிவஸ்ரீ. ஜெயச்சந்திர வைரவமூத்திக்குருக்கள் நடத்திவைத்தார்கள்.

**மாமன்றத்தின் வருஷாபிஷேகம்**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வருஷாபிஷேகம் கடந்த (19.04.2011) செவ்வாயக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. மாமன்றத்தில் அருள்பாலித்திருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானுக்கு சித்திரைச் சுவாதி நட்சத்திரத்தில் வருடாந்தபிஷேகம் இடம்பெற்றது. நண்பகல் தீபாராதனையுடன் ஆரம்பமாகி பூஜை, வழிபாடுகள், அபிஷேக ஆராதனைகள் என சிறப்பாக நடந்தேறியது. மாமன்ற வருஷாபிஷேகத்தில் மாமன்ற தலைவர், பொருளாளர் உட்பட பல உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மாமன்ற அபிஷேகத்தினை ஸ்ரீகாந்தக்குருக்கள் நடாத்திவைத்தார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றம் பெற்ற
மட்டக்களப்பு வெள்ள நிவாரண நன்கொடைகள்

| பெயர் | தொகை |
|---|---|
| திரு. திருமதி. எம். தவயோகராஜா | 300 000.00 |
| உலக சைவ பேரவை – கொழும்பு | 200 000.00 |
| நோர்வே | 29 990.00 |
| ஸ்வெட் லங்கா | 110 300.00 |
| திருமதி. உமா சுரேன்ரா | 25 000.00 |
| ஸ்ரீ வரதராஜா விநாயகர் | 100 000.00 |
| ஸ்வேடா லிமிடட் | 50 000.00 |
| திரு. ஆர். சேனாதிராஜா | 50 000.00 |
| இந்து வித்தியா அபிவிருத்திச் சங்கம் | 100 000.00 |
| திரு. திருமதி. கயிலாசபிள்ளை | 100 000.00 |
| திரு. திருமதி. நீலகண்டன் | 100 000.00 |
| திரு. சரவணன் நீலகண்டன் | 50 000.00 |
| திரு. பிரணவன் நீலகண்டன் | 25 000.00 |
| திருமதி. ஜனனி செந்துூரன் | 25 000.00 |
| சம்மாங்கோடு கதிர்வேலாயுத சுவாமி கோவில் | 70 000.00 |
| திரு. எஸ். சிரிதரன் | 10 000.00 |
| திரு. வி. செல்லையா | 20 000.00 |
| திரு. ஜி. அபெயா விக்கிரம | 5 000.00 |
| திருமதி. பி. சொக்கலிங்கம் | 10 000.00 |
| திரு. கைலாசமணிவேலு சுவாமிநாதன் | 15 000.00 |
| திரு. எம். தயாபரன் | 10 000.00 |
| திரு. கே. மகாலிங்கம் | 10 000.00 |
| திரு. எஸ். வரதீசன் குடும்பம் UK | 10 000.00 |
| திரு. ஈஸ்வர குருக்கள் | 25 000.00 |
| திரு. கே. சதாசிவம் | 10 000.00 |
| திருமதி. பரமநாதன் சகுந்தலாதேவி | 1 000.00 |
| செல்வி. எஸ். சுப்பிரமணியம் | 100 000.00 |
| திரு. கே. அரவிந்தன் | 100 000.00 |
| திருமதி. அ. கைலாசபிள்ளை | 100 000.00 |
| டாக்டர். எஸ். செல்லையா | 100 000.00 |
| டாக்டர். எம். தேவகுமார் | 100 000.00 |
| ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், மயூரபதி | 150 000.00 |
| திரு. கா. நிர்மலன் | 25 000.00 |
| திரு. செலோன் | 130 000.00 |
| ஐ. எலப்பநாதன் | 1 000.00 |
| திரு. எஸ். பாமநாதன் | 1 000.00 |
| பி. விக்னேஸ்வரன் | 5 000.00 |
| டாக்டர். வரதராஜா | 10 000.00 |
| திரு. திருமதி. சுப்பிரமணிய குருக்கள் | 3 000.00 |
| திரு. நடராஜா | 20 000.00 |
| M/s pee & Co Traders Colombo-12 | 20 000.00 |
| திரு, திருமதி. கேததன் | 17 500.00 |
| செல்வி. எஸ். சுப்பிரமணியம் | 100 000.00 |
| திரு. அரவிந்தன் | 100 000.00 |
| திருமதி. அ. கைலாசபிள்ளை | 100 000.00 |
| டாக்டர். எம். தேவகுமார் | 10 000.00 |
| டாக்டர். எஸ். செல்லையா | 100 000.00 |
| நன்கொடை | 50 000.00 |
| திரு. கதிரவேலு | 700.00 |
| டாக்டர். எஸ். செல்வகுமார்/ குமரன் ஸ்ரோஸ் | 15 000.00 |
| Pakey Investment Ltd | 75 000.00 |
| திரு. செந்திராஜா | 75 000.00 |
| திரு. எஸ். சிவரஞ்சன் | 10 000.00 |
| திரு. செந்திராஜா | 50 000.00 |
| சிவ யோக சுவாமி | 80 000.00 |

மாமன்றம் வழங்கிய நிவாரணங்கள்

| | |
|---|---|
| ஆலையடி வேம்பு இந்து மன்றம் | 700 000.00 |
| இந்து இளைஞர் ஒன்றியம் மட்டக்களப்பு | 100 000.00 |
| கிழக்கிலங்கை பல்கலைக்கழக இந்து மன்றம் | 400 000.00 |
| இந்து இளைஞர் மன்றம் மட்டக்களப்பு | 845 000.00 |
| திருகோணமலை இளைஞர் இந்து மன்றம் | 200 000.00 |
| திருகோண்மலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை | 200 000.00 |
| மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் | 300 000.00 |
| | **2 745 000.00** |
| பயிற்சிப்புத்தக கொள்வனவு விலை சீருடை:- *(மனித நேய நிதிய உபயம்)* | **988 200.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன்றத்தின் அனுபதாபம்

### சுவாமி அஜராத்மானந்தா அவர்கள்



மண்ணுலகில் தோன்றிய அவதார புருஷர்களில் ஒருவரான சுவாமி அஜராத்மானந்தாவின் மறைவு இலங்கை வாழ் இந்து மக்களுக்கு பேரிழப்பாகும் என்று சுவாமிகளின் மறைவு குறித்து இந்து மாமன்றம் விடுத்துள்ள அனுதாபச் செய்தி.

இலங்கையில் இந்து ஆன்மீகப்பணியில் தம்மை அர்ப்பணித்து பணியாற்றிய பெருமை இராமகிருஷ்ண மிஷனைச்சாரும். சுவாமி ஜீவானந்தா மகராஜ் தலைமையில் மட்டக்களப்பு கல்லடியில் இராமகிருஷ்ண மிஷன் சிறுவர்களுக்கு இல்லம் அமைத்து அளப்பரிய சேவை செய்துவந்தது. அவர் சமாதியடைந்ததைத் தொடர்ந்து சுவாமி அஜராத்மானந்தா மகராஜ் தலைமைப் பொறுப்பை ஏற்று அப்பணியைத் தொடர்ந்தார்.

அகில இலங்கை இந்துமாமன்றப் பணிகளுக்கு என்றும் உறுதுணையாக நின்று ஆசிவழங்கி வழிகாட்டிய பெருந்தகையான அவரை மாமன்றம் கௌரவ உறுப்பினராக இணைத்துக்கொண்டதன் மூலம் பெருமை தேடிக்கொண்டது. மண்ணுலகில் அவதார புருஷர்கள் அவ்வப்போது தோன்றி மானிட பிறப்பின் பயனை மனிதத்துக்குள் நின்று மன்னுயிர்களுக்கு காணிக்கையாக்கிய வண்ணமே இருக்கின்றனர். சுவாமிஜியின் மறைவு இந்நாட்டு இந்துமக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

சுவாமிஜியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள் மிகு சிவகாமியம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

### அறங்காவலர் திரு. பொன். வல்லிபுரம்



ஆலயத்தொண்டிலும் ஆன்மீக ஈடுபாட்டிலும் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்த மயூரபதி ஆலய அறங்காவலர் பொன். வல்லிபுரம் அவர்கள் அண்மையில் காலமானார். அவர் சமய, சமூக, கலாசாரப் பணிகளில் ஈடுபட்டதோடு பல்வேறு வகையிலும் மயூரபதி ஆலய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர். மாணவர்களுக்கு அறநெறிப்பாடசாலை, பஜனை வகுப்புக்கள், நடனப்பாடசாலை என்பவற்றை ஆரம்பிக்கவும் பால்காவடி, பாற்குடபவனி என்பன தொடங்கவும். கலாசாரமண்டபம் நிறுவவும் முன்னின்று உழைத்து கொழும்பு வாழ் இந்து மக்களின் மனம் நிறைந்தவர் பொன். வல்லிபுரம் அவர்கள் ஆடிச்செவ்வாயின் போது ஆலய அடியார்களின் சமய அறிவினைப் பட்டைதீட்டும்வகையில் வருடந்தோறும் தென்னிந்தியாவிலிருந்து சமயப்பெரியார்களை அழைத்து சொற்பெருக்காற்றவைத்தார். அவரது மறைவையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறது.

---

கொழும்பு விவேகானந்தா சபையும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து திருஞானசம்பந்தர் குரு பூஜையை விவேகானந்த சபை மண்டபத்தில் 20.05.2011 வெள்ளிக்கிழமை கொண்டாடியது. மாமன்ற சமய விவகாரக்குழு தலைவர் ஜெகதீசன் அவர்களின் அனுசரனையில் இடம்பெற்றது. இக்குரு பூஜையில் பூஜை, வழிபாடுகள், சமய நிகழ்ச்சிகள் என்பன சிறப்பாக நடைபெற்றது.

---

## A9 வழியில் கோப்பி, தேனீர் தயாரிக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள சிந்தாமணி பிள்ளையார் கலாசார அன்னதான மண்டபத்தில், ஏ-9, பாதை வழியாக வவுனியா ஊடாக பயணம் செய்யும் பயணிகள் சில நிமிட நேரங்கள் தங்கியிருந்து இளைப்பாறிச் செல்லக் கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக தேநீர், கோப்பி என்பவைகளை தயாரித்துப்பெற்றுக் கொள்ளக்கூடிய இயந்திரமொன்று, இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் அங்கு பொருத்தப்பட்டுள்ளது. வவுனியா சிந்தாமணி பிள்ளையார் அறங்காவல் சபைத்தலைவர் வி. தேவகுமாரனிடம் மாமன்ற சமூகநலன் குழுத்தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா இந்த இயந்திரத்தை கையளித்தார். இந்த நிகழ்வில் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் அறங்காவல் சபை உப செயலாளர் ரி. சரசலோசன், அறங்காவல் சபை உறுப்பினர் ஏ. நந்தகுமார், மாமன்ற சமூகநலன் குழு உறுப்பினர்களான தே. கிரிதரன் திருமதி வி. தயாபரநாதன் மாமன்ற நிர்வாக அலுவலர் சி. சிதம்பரேஸ்வரசர்மா உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் வைணவமும்

பேராசிரியர், கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள், M.A., Ph., D. (Poona)

சைவமும் வைணவமும் தென் பாரதத்தின் தமிழ்நாட்டின் இரு கண்களாக விளங்குவது கண்கூடு. சைவத் திருக்கோவில்களும் வைணவத் திருக்கோவில்களும் கலந்து விரவாத கிராமங்களே அங்கு இல்லை எனத் துணிந்து கூறலாம்.

பாரதநாட்டில் நிலவும் சமயங்களுட் சைவம் தனிப்பெருஞ் சிறப்புடையது. உயரிய ஞானம் கூறும் சைவசித்தாந்த தத்துவம் வழங்கியதால் உயர்ந்து விளங்குவது. 'எத் தெய்வத்தை வழிபடினும் தன்னையறியாது சிவபிரானையே வழிபடுபவனாகின்றான்' என்ற உண்மையினை எடுத்துரைத்துச் சிவபெருமானது அருளும் பெற்றியை விதந்து கூறுவது.

ஈழநாட்டில் சிவாலயங்களே பெருமளவிற் காணப்படுகின்றன. வைணவ ஆலயங்களில் ஒரு சிலவற்றையே இங்கு காண்கின்றோம். தனியே நிறுவப்பட்ட வைணவ ஆலயங்களில் பெரும்பாலாகச் சைவப் பெருமக்களே வழிபடுவதையும் காண்கின்றோம். இவ் வழிபாட்டுமுறை சைவ பாரம்பரியத்துக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது உற்று நோக்கற்பாலது, அது எவ்வாறென நோக்குவோம்.

சிவாகமங்கள் விஷ்ணுவின் வழிபாடுபற்றியும் எடுத்தியம்புவன: சிவாலயத்தில் விஷ்ணு எவ்வாறு இடம் பெறுவர் என்பது பற்றியும் முக்கியமாகச் சிவாகமங்களுள் ஒன்றான காரணாகமம் எடுத்துக் கூறுகின்றது. காரணாகமம் 60 ஆவது படலம். சிவபெருமானது பரிவார தெய்வமாக விஷ்ணுவைப் பிரதிட்டிப்பதற்கும் இடம் வகுத்ததோடமையாது விஷ்ணுவைப் பிரதிட்டிக்கும் முறையினை 99ஆவது படலம் விரித்துரைக்கின்றது. கிராமங்களில் விஷ்ணுவின் ஆலயம் தனியாக அமையும் முறைபற்றியும், அங்கு பரிவாரங்களை நிறுவும் முறையானது விஷ்ணு ஆலயங்களில் வழிபாடு எவ்வாறு பாஞ்சராத்திர கிரமமாக நிகழ வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைக்கின்றது. இது பற்றியே சைவப் பெருமக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களிலும் விஷ்ணுவிற்காகத் தனி ஆலயங்கள் நிறவப்பட்டிருப்பதையும் சைவப் பெருமக்கள் அங்கு சென்று வழிபாடு நடத்துவதையும் காண்கின்றோம். இதில் வியப்பெதுவுமில்லை.

சிவலிங்கத் திருமேனியிலும் மூன்று அம்சங்கள் விளங்குவதைச் சைவ திருக்கோவிற் கிரியை நூல்கள் கூறும்: ஒன்று பிரம்ம பாகம் : மற்றையது விஷ்ணு பாகம் எனப்படும். மூன்றாவது உருத்திர பாகமும். விஷ்ணு பாகம் இத் திருமேனியின் நடுவதான அம்சம். சிவலிங்கத் திருவுருவத்தின் இம் மூவகைப் பாகுபாடுகள் சகல நிலையில் உள்ள திருமேனிகளுக்கும் வழங்கக் காணலாம்.

உமைக்கும் திருமாலுக்கும் வேற்றுமை காணாத அப்பர் சுவாமிகள், திருத்தாண்டகமொன்றில் சிவபெருமானைத் 'திருமாலோர் பாகத்தான்' என்றும். "அரியலால் தேவியில்லை ஐயன் ஐ யாற னார்க்கே" என்றும் கூறியவை நோக்கற்பாலன. திருமாலையும் தனது சக்திக்குள் ஒரு சக்தியாகக் கொண்டு ஒரு பாகத்தில் உடையவன் என்பது இதனால் தெளிவாகிறது. சிவபிரானது சக்தி ஒன்றே செயலாற்றுதற்கண் நான்காகப் பிரிந்து நிற்கும். அங்ஙனம் நிற்குமாறாவது: இன்பத்தில் பவானியும். ஆடவரிடத்துத் திருமாலும், வெகுளியில் காளியும், போரில் துர்க்கையும் என்பது சிவாகமங்களின் துணிபு,

*"ஏகைவ சக்தி: பரமேஸ்வரஸ்ய பின்னா சதுர்த்தா விநியோககாலே,*
*போகே பவானி, புருஷேஷ" விஷ்ணு: கோபேது காலீ - சமரேச துர்க்கா"*

சிவ - ஆகமங்களுள் விதித்த மூர்த்தி பேதங்களுள் ஹரேர்த்த மூர்த்தியும், ஏகபாதத்ரி மூர்த்தியும் உற்று நோக்கற்பாலன, ஒரு காலில் ஊன்றிநிற்கும். உருவத்தின் நடுவிலிருந்து கிளைத்தெழும் இரு தோற்றங்களில் ஒன்று பிரமனாகியும் மற்றது விஷ்ணுவாகவும் விளங்கும் உருவமே ஏகபாதத்திரிமூர்த்திக்கு திருவுருவமாகும். சிவபெருமானின் 64 வகை மூர்த்தி பேதங்களுள் இதுவும் ஒன்று, ஹரேர்த்த மூர்த்திக்கு உரிய மறு பெயர் ஹரிஹரமூர்த்தி. இது சங்கரநாராயண மூர்த்தி எனவும் கூறப்படும். அர்த்தநாரீசுவர வடிவத்தில் அமைந்திருப்பது போன்று ஒரு பாதி சிவபெருமானின் அம்சம் விளங்கும். மறுபாதி திருமாலின் தோற்றத்தைக் கொண்டு அமையும்.

சைவத்தின் உன்னத நிலையைக் காட்டும் சிவபெருமானின் திருவுருவங்களில் விஷ்ணுவிற்குச் சக்கரம் வழங்கி அனுக்கிரகம் செய்யும் தோற்றம் வாய்ந்த விஷ்ணுவனுக்கிரக மூர்த்தியும், நரசிம்மத்தை யடக்கும் கோலம் காட்டி நிற்கும் சரபமூர்த்தியும் குறிப்படத்தக்கவை.

விஷ்ணுவைத் தலைசிறந்த பக்தனாகச் சித்திரிக்கும் புராண வரலாறுகளும் இவ்வரலாறுகட்கு வடிவம் தரும் சிற்பங்களும் சில வழிபாட்டில் விஷ்ணு ஈடுபட்டு நிற்கும் நிலையினை வெளிப்படுத்துவன. சிவபிரானை வழிபடும் விஷ்ணு ஆயிரம் தாமரை மலர்களால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருச்சித்து வழிபட்டுக்கொண்டிருந்த பொழுது ஒரு மலர் குறையக் கண்டதும் தம் கண்ணை இடந்து மலராக அருச்சித்த வரலாற்றைச் சித்தரிப்பன இவ் வரலாறுகளும் சிற்பங்களும். பக்தியின் உன்னத நிலையினைச் சித்தரிக்கும் பெற்றியினை வேறொரு தெய்வம் வேண்டாது தம் தெய்வத்தையே தனிப்பெரும் தெய்வமாகக் கருதும் முறையை விளங்குவதைச் சைவ மரபிலும் தனித்தனியே காணலாம்.

சைவநெறி தழைத்தோங்கி வளர்ந்துவரும் ஈழத்திலும், சைவர்களே பெரும்பாலாக வசிக்கும் இடங்களிலும் சிவாகமம் கூறும் மரபை அடிப்படையாகக் கொண்டு போலும், தனி வைணவத்தலங்களும் பாஞ்சராத்திர ஆகம முறைகளைத் தழுவி நிறுவப்படலாயின. அதே முறைக்கமைய வழிபாடுகளையும் நடத்தி வரலாயின.

*நன்றி : (துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில். திருக்குடமுழுக்கு மலர் 03.07.1977)*

## மாமன்ற சமூகநலத்திட்டத்தின் அங்கமாக பசு மாடுகள் வழங்கப்பட்ட நிகழ்வு (24.01.2011)


இந் நிகழ்வின் போது மாமன்ற தலைவர் வி.கயிலாசபிள்ளை, செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.



மாமன்ற தலைவர் வி. கயிலாசபிள்ளை அவர்கள், இரத்மலானை விடுதிச்செயலாளர் திருமதி கயிலாசபிள்ளை அவர்களுடன் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள்.

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிதி ஆதரவுடன் ஆலையடி வேம்பு பிரதேச இந்து மாமன்றம் வெள்ள நிவாரணம் வழங்கிய போது






## எங்கள் பணிகளுக்கு ஆதரவு தரும் செஞ்சொற்செல்வரின் அன்பு நண்பர்கள்



திரு. வேலுப்பிள்ளை சிவசுந்தரம் (இலண்டன்)



திரு. ஜெயசீலன் (இலண்டன்)



திரு. சிவானந்தஜோதி (பதிப்பாசிரியர், இலண்டன் தமிழர் தகவல்)



திரு. கிருஷ்ணர் பாலசுப்பிரமணியம் (புளோரிடா, அமெரிக்கா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலையடிவேம்பு இந்துமாமன்ற கட்டடத் திறப்பு விழாவில் மனித நேய மாமணி வி. கயிலாசபிள்ளை அவர்களும் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா ஆகியோரும் மாலை அணிவித்து அழைத்து வரப்படுகின்றார்கள்.



அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் வி. கயிலாசபிள்ளை அவர்கள் இந்நிகழ்வில் உரையாற்றுகிறார்.



ஆலையடி வேம்பு இந்து மாமன்ற திறப்புவிழாவில் மன்றத் தலைவர் வே. சந்திரசேகரம் உரையாற்றுகிறார்.



ஆலையடி வேம்பு மன்ற கட்டிடத் திறப்பு விழாவில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் மாமன்ற உபதலைவருமான செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்.



அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் கௌரவிக்கப்படுகின்றார். பக்கத்தில் மன்றச் செயலாளர் திரு. சரவணபவன்



மன்றத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட மாணவர்கள்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு தையல் இயந்திரத்தை மாமன்றத்தின் சார்பில் சமூகநலன் குழுத் தலைவர் சின்னத்துரை தனபாலா அவர்கள் வழங்கியபோது



ஏ9- பாதையூடாகச் செல்லும் பயணிகளின் தாகசாந்திக்காக தேனீர், கோப்பி, இலவசமாக அருந்திச் செல்ல இயந்திரமொன்றை மாமன்றம் வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய இளைப்பாறும் மண்டபத்தில் பொருத்தியுள்ளது. அதனைக் கையளித்தபோது சமூக நலன் குழுத்தலைவர் சின்னத்துரை தனபாலாவுடன் மாமன்ற உறுப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர வைகாசி விசாக தேர், தீர்த்த உற்சவ காட்சிகள்



கௌரி உடனுறை திருக்கேதீச்சர பெருமானின் வீதி உலா



அம்மன் தேரை பெண்கள் ஒன்று கூடி வடம் பிடித்து இழுக்கும் காட்சி.



தேர் ஓடும் வீதி எங்கும் சிவதொண்டர்களினால் தண்ணீர் விசிறி அடிக்கப்படுகிறது.



அன்னதானம்



கௌரி உடனுறை திருக்கேதீச்சரப் பெருமானுடன் பரிவாரமூர்த்திகளின் வீதிவலம்



பாலாவி தீர்த்தக் குடத்துடன் அடியார்கள் வீதி வலம் வரும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL : +94 11 2330195